பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்:-பன்னிரண்டு

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

ராம்கோ
சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில்
முதலாம் தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது.

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி 21 | திங்கட்கிழமை | (05.07.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 199



தமிழழ இளையோர் தேசிய தடகளப போடடியல முதல மூனறு இடஙகளையும பெறற, முறையே யாழபபாணம, திருகோணமலை, மனனார் மாவடட அணித தலைவர்களை வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம். (படங்கள்:ஐங்கரன்)

# கரும்புலிகள் நாள் இன்று அனுஷ்டிப்பு

(நமது நிருபர்)

**தாயக விடுதலைக்காக உயிர்த் தியாகம் செய்த கரும்புலிகளின் நினைவு நாள் இன்று தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. இதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியமும், கரும்புலிகள் தின ஏற்பாட்டுக்குழுவும் மேற்கொண்டுள்ளன.**

யாழ்.மாவட்டத்தில் பிரதானமாக மூன்று இடங்களில் கரும்புலிகள் தின அஞ்சலி நிகழ்வுகள் இடமபெற ஏற்பாடாகியுள்ளது. தீவுப் பகுதியில் புங்குடுதீவு பெருங்காட்டுச் சந்தியில் உள்ள கந்தசுவாமி கோயில் முன்றலில் நினைவு நிகழ்வுகள இடம்பெறவுள்ளன. இந் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக தீவுப் பகுதி மக்கள் அங்கு திரளவுள்ளனர்.

நெல்லியடியில் கரும்புலி கப்டன் மில்லர் வீரச்சாவடைந்த நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.இன்று மாலை 6 மணியளவில் நெல்லியடிச் சந்தியிலிருந்து கரும்புலிகளின் பெற்றோர் பாண்ட ...ஏற்றப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும்.தொடர்ந்து நினைவுக் கூட்டம் நடைபெறும் இந் நிகழ்வில் உயிராயுதம் ஐந்து ஒளிப் பேழையும், கடல் உயிராயுதம் 7,8 ஒளிப் பேழைகளும் வெளியிட்டு வைக்கப் படவுள்ளது.

அத்துடன் 'கரும்புலிகள் காவியம்' என்ற நூலும் வெளியிடப்படும் இதேவேளை காரைநகர் கதிர்காம சுவாமி கோயில் முன்றலில் கரும்

(12ஆம் பக்கம் பார்க்க)

அன்பு மாணவர்களே!
உள்ளே!
க.பொ.த(சா)தரப் பரீட்சை

## ஐ.தே.கட்சி-ஜே.வி.பி. ஆதரவாளரிடையே மோதல்

(கொழும்பு)

பொலனறுவை கிங்குராங்கொடப் பிரதேசத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவாளர்களுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களுக்குமிடையில் நேற்று 10 மணியளவில் மோதல் ஒன்று இடம் பெற்றது.இதன் போது ஒருவர் காயமடைந்தார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

கிங்குராங்கொடப் பிரதேசத்தில் மக்கள் விடுதலை முன்னணி கூட்டமொன்றை ஒழுங்கு செய்திருந்தது.

அதேவேளை விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு கோரி ஐக்கிய தேசியக் கட்சியினர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர். இதன் போது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆர்ப்பாட்ட ஊர்வலம் மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டம் நடைபெறவிருந்த இடத்தினைக் கடந்து செல்ல முற்பட்ட வேளை இரண்டு கட்சிகளின் ஆதரவாளர்களுக்குமிடையிலும் முறுகல் ஏற்பட்டு மோதல் இடம் பெற்றது.

இரு தரப்பினருக்குமிடையில் ஏற்பட்ட மோதலையடுத்து பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலை மாணவரை விமர்சிக்கும் சர்ச்சைக்குரிய பிரசுரங்கள் கொழும்பில் உலாவுகிறது

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தனது பிரசார வேலைகளுக்காக சர்ச்சைக்குரிய துண்டுப் பிரசுரமொன்றை அச்சடித்துள்ளதாக சண்டேரைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. அத்துண்டுப் பிரசுரத்தில்,

துப்பாக்கிகளை ஏந்தியவண்ணம் புலிகள் பின்னால் இருக்க யாழ். ...மான முறையில் அச்சடிக்கப்பட்டு இவற்றில் ஒரு பிரதி கொழும்பின் ஆங்கில வார இதழான சண்டேரைம்ஸ்"க்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்து நேற்று வெளியாகிய பத்திரிகையில் இப் படம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அதில் யாழ்.பல்கலைக் கழக மாணவர் சங்கத் தலைவர் மேதினக் கூட்டமொன்றில்'தமிழர்கள் எல்லோ

## கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று

(கொழும்பு)

கட்சித் தலைவர்களின் கூட்டம் சபாநாயகர் டபிள்யு.ஜே.எம்.லொக்கு பண்டார தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தின் போது எதிர் வரும் 20ஆம் திகதி பாராளுமன்றத்தைக் கூட்டுவது தொடர்பாக மீள் பரிசீலனை செய்யப்படவுள்ளதாகத தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 20ஆம் திகதி பாராளுமன்றத்தைக் கூட்டுவது தொடர்பான முடிபில் மாற்றங்கள் செய்யப்

யடி மத்திய கல்லூரி மைதானத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.இன்று மாலை 6 மணியளவில் நெல்லியடிச் சந்தியிலிருந்து கரும்புலிகளின் பெற்றோர் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் மில்லர் சதுக்கத்திற்கு அழைத்துச் செல்லப்படுவர். அங்கு மில்லர் வீரச்சாவடைந்த இரவு 7.05 மணிக்கு சுடர்

**அன்பு மாணவர்களே!**

**உள்ளே!**

க.பொ.த(சா)தரப் பரீட்சை

மாதிரி வினாத்தாள் கணிதம்

ஆக்கம்:

குணநாயகம் மனோரஞ்சன்

நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. அத்துண்டுப் பிரசுரத்தில்,

துப்பாக்கிகளை ஏந்தியவண்ணம் புலிகள் பின்னால் இருக்க யாழ். பல்கலைக் கழக மாணவர்களின் படம் அச்சடிக்கப்பட்டுள்ளது.இவ்வாறு 50 ஆயிரம் பிரதிகள் மர்ம

படம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அதில் யாழ்.பல்கலைக் கழக மாணவர் சங்கத் தலைவர் மேதினக் கூட்டமொன்றில் தமிழர்கள் எல்லோரும் புலிகள் இயக்கத்தின் பின்னாலே இருக்கிறார்கள் இதிலிருந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

எதிர்வரும் 20ஆம் திகதி பாராளுமன்றத்தைக் கூட்டுவது தொடர்பான முடிபில் மாற்றங்கள் செய்யப்படவேண்டுமென சில கட்சிகள் சபாநாயகரைக் கேட்டுக் கொண்டதையடுத்தே இக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. (ச)

# ஈ.பி.டி.பி மீது வாள் வெட்டு விடுதலைப் புலிகள் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஈ.பி.டி.பிக் கட்சியின் இரண்டு உறுப்பினர்கள் மீது விடுதலைப் புலிகள் வாள் வெட்டு நடத்தியதாகக் கூறிய குற்றச்சாட்டை விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறை மறுத்துள்ளது.

யாழ்.திருநகர் சொலமன் வீதியில கட்சியின் உறுப்பினர்கள் மீது விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவர் வாள் வெட்டினை மேற்கொண்டதாக ஈ.பி.டி.பி குற்றஞ் சாட்டியது.

மோட்டார் சைக்கிளில் சென்ற கட்சியின் உறுப்பினர் ரீகன் என அழைக்கப்படும் துரைராஜா இளங்கோ என்பவர்மீது விடுத லைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக ஈ.பி.டி.பி. குற்றம் (12ஆம் பக்கம் பார்க்க)

# கருணா அரசியலில் ஈடுபடுவதை இந்திய அரசாங்கம் வரவேற்கும்

## இந்தியத் தூதுவர் நிரூபம் சென்

(கொழும்பு)

புலிகள் மீதான தடையை மேலும் இருவருடங்களுக்கு இந்தியா நீடித்திருபபதாக அறிவித்ததைத் தொடர்ந்து அதற்கான பதிலை இலங்கை அரசாங்கம் தயாரித்து வருகிறதென வெளிநாட்டு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

தமது முடிபை இந்திய அரசாங்கம் கடந்த மாதமே உத்தியோகபூர்வமாகக் கடிதம் மூலம் அறிவித்திருந்தது.இதற்கான பதிலை அனுப்பும் முயற்சிகளில் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டு வருவதாக வெளி நாட்டமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

இதற்காக வெளிநாட்டமைச்சு சட்டவல்லுநர்களுடன் ஆலோசித்து வருகின்றது. இது பற்றி இந்திய உயர்ஸ்தானிகர் நிருபம் சென் .தெரிவிக்கையில் புதிய அரசாங்கம் வந்தாலும் கூட டில்லி நிலைப்பாட்டில் மாற்றங்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

# அ.இ.த.காங்கிரஸில் இருந்து சி.வி.கே., குமரகுருபரன் அவுட்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் செயற்குழுக் கூட்டம் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள காங்கிரஸ் பணிமனையில் நடைபெற்றது.

கட்சியின் தலைவர் அ.விநாயகமூர்த்தி யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுபபினர் கே.கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட கட்சியின் செயற்குழு உறுப்பினர் பலரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதில் செயற்குழு உறுப்பினர்கள் பதவியில் இருந்து சி.வி.கே. சிவஞானம், கலாநிதி குமரகுருபரன் ஆகியோர் நீக்கப்பட்டு அந்த இடத்திற்கு சிவசிதம்பரம், இ.மயிலவாகனம் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்து சென்ற கருணா குழுவிற்கு பாதுகாப்பு வழங்கும் நடவடிக்கைகளைய

(12ஆம் பக்கம் பார்க்க)

# தடகளப் போட்டியில் யாழ்.அணி முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த இருநாட்களாக நடைபெற்ற தமிழீழ இளையோர் தேசிய தடகளப் போட்டியில் யாழ்.மாவட்ட அணி புள்ளிகள் அடிப்படையில் முதலிடத்தைப் பெறுகின்றது.

யாழ்ப்பாண அணி 149 புள்ளிகளுடன் முதலாம் இடத்தையும், திருமலை மாவட்ட அணி 118 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தையும் மூன்றாம் இடத்தை 71 புள்ளிகளைப் பெற்று மன்னார் அணியும் வெற்றிபெற்றுள்ளன.

இதேவேளை தடகளப் போட்டியில் வெற்றிபெற்ற அணிகளுக்கும் வீரர்களுக்குமான பரிசளிப்பு விழா

(12ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# மண் மீட்புக்காக தம் உயிரை ஆயுதமாக்கியவர்கள் கரும்புலிகள்

> மற்றவர்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்பதற்காகத் தன்னை இல்லாதொழிக்கத் துணிவது தெய்வீகத் துறவறம்; அந்தத் தெய்வீகத் துறவிகள் தான் கரும்புலிகள்.
> **தமிழீழத் தேசியத் தலைவர், மேதகு. வே.பிரபாகரன்**

அந்நிய ஆதிக்கச் சக்திகளின் அடக்கு முறைகளைத் களைந்தெறிய கரும்புலிகளாய் அவதாரம் எடுத்த உத்தம வீரர்களின் நினைவு தினம் இன்றாகும்.

தமிழினத்தின் தாயகம் காக்க கரும்புலிகளாகவும், கடற்புலிகளாகவும் வீறுகொண்டெழுந்து உயிர்நீத்த மாந்தர் தம் மாண்பை நினைவுகூரும் நன்றியுணர்வு எம்மிடையே கிளர்ந்தெழ வேண்டிய தினம் யூலை 5.

விடுதலைப்புலிகளின் போரட்ட வரலாற்றில் உந்துசக்தியாகவும் அசைக்கமுடியாத மனித ஆயுதமாகவும் இருப்பவர்கள் கரும்புலிகள்.

சமாதானப் பேச்சுவார்த்தையென ஒன்று ஆரம்பமாவதற்கு காரணமாக இருந்தவர்கள் இந்தக் கரும்புலிகளாகும்.




1987ஆம் ஆண்டு யூலை மாதம் 5ஆம் திகதியில் இருந்து 30.06.2004 ஆம் ஆண்டுவரை 261 கரும்புலிகள் வீர மரணமடைந் துள்ளனர். இவர்களில் தரைக் கரும்புலிகள் 77 பேர் ஆண்கள்59, பெண்கள் 18.கடற் கரும்புலிகள் 184பேர் ஆண்கள் 133பேர் பெண்கள் 51பேர் மொத்தமாக 192ஆண் கரும்புலிகளும், 61 பெண் கரும்புலிகளும் வீரச் சாவடைந்துள்ளனர்.

இக் கரும்புலிகளில் 20பேர் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்னர் இடம்பெற்ற சம்பவங்களில் வீரச்சாவடைந்தனர். 1987ஆம் ஆண்டு தொடக்கம் 2002ஆம் ஆண்டு ஆனி மாதம்வரை 241கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

தமிழர் மீதான அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டு ஆக்கிரமிப்பில் ஈடுபட்டிருந்த சிங்கள இராணுவத்தினருக்கு சிம்ம சொப்பனமாகி ஆள் பலத்தாலோ, ஆயுதப் பலத்தாலோ தமிழர்களை அடக்கமுடியாது என்று உணர வைத்தவர்கள் இந்தக் கரும்புலிகள்.

வீரச்சாவடைந்த கரும்புலிப் போராளிகளை மாவட்ட ரீயாகப் பார்க்கும்போது யாழ்.மாவட்டம் 125பேர், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டம் 47பேர், வன்னி மாவட்டம் 22பேர், திருகோணமலை மாவட்டம் 16பேர், மன்னார் மாவட்டம் 15பேர் முல்லைத்தீவு மாவட்டம் 10பேர், ஏனைய மாவட்டங்கள் 6 பேர் என தம்மை அர்ப்பணித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் மனித வெடிகுண்டாக தன்னை ஆகுதி ஆக்கிக்கொண்ட முதலாவது கரும்புலி கப்டன் மில்லர் என்று அழைக்கப்படும் வல்லிபுரம் வசந்தன் என்ற வீர மறவனாவார்.

துன்னாலை கரவெட்டியை தனது பிறந்த மண்ணாகக்கொண்டவர் முதற் கரும்புலி கப்டன் மில்லர்.

1987ஆம் ஆண்டு அப்போதைய ஐக்கியதேசியக்கட்சி அரசியல் தேசிய பங்தோபஸ்து அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலியினால் வடமராட்சி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட "ஒப்ரேசன் லிபரேசன்" இராணுவ நடவடிக்கையின் போது வடமராட்சிப் பகுதி இராணுவத்தினரின் பிடியில் சிக்கியது. இதன் போது தமது உடைமைகளை இழந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மக்கள் வல்வெட்டித்துறை ஆதி கோயிலடியில் தஞ்சம் புகுந்தனர்.

இவ்வாறு தஞ்சம் புகுந்த மக்களை வான் குண்டுகளால் கொன்றழித்தும் பெற்றோர் உறவினர் முந்நிலையில் பல இளைஞர்களைக் கைதுசெய்து கொன்று குவித்தமையும் சகிக்க முடியாது. கிளர்ந்தெழுந்தான் கரும்புலி மில்லர்.

ஒப்பரேசன் லிபரேசன் மூலம் வடமராட்சியைக் கைப்பற்றி விட்டோம் என்ற வெற்றிக்களிப்பில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் ஒரு பட்டாளியன் (ஆயிரம்) இராணுவத்துடன் பாரிய முகாமொன்றை ஸ்ரீலங்கா இராணுவம் அமைத்திருந்தது.



யாரும் எண்ணியிராத வகையில் வடமராட்சிப் பகுதியில் பல இளைஞர்களைக் கொன்றழித்த இராணுவத்தைக் கதிகலங்கவைத்து 1987யூலை 5ஆம் திகதி வெடிமருந்து வாகனத்துடன் சென்று நெல்லியடி இராணுவ முகாமைத் தாக்கினான். இதில் 120க்கும் மேற்பட்ட படையினர் பலியாகினர். நூற்றுக்கணக்கான படையினர் காயங்களுடன் புறமுதுகிட்டோடினர். படையினரைக் கலங்கவைத்த முதற் கரும்புலி கப்டன் மில்லரின் 17வது நினைவுதினம் இன்றாகும்.

இதேவேளை, விடுதலைப்புலிகளின் மளிர் படையணியில் முதற் கடற் கரும்புலியாக கப்டன் அங்கையற்கண்ணி (துரைசிங்கம் புஸ்பகலா மண்கும்பான் யாழ்ப்பாணம்) உருவெடுத்தார். அங்கயற்கண்ணியின் தாக்குதல் காங்கேசன் துறைக் கடற்பரப்பில் 16ஆம் திகதி ஓகஸ்ட் மாதம் 1994ஆம் ஆண்டே நடத்தப்பட்டது.

தான் ஒரு கரும்புலியாக விரும்புவதை அங்கயற்கண்ணி பிரபாகரனுக்கு தெரியப்படுத்தினார். கரும்புலியாவதற்கு சில விஷேட தகமைகள் வேண்டும் அனைத்தும் அங்கயற்கண்ணியிடம் இருந்தன.

17கடல் மைல்களை (ஏறத்தாழ 35கிலோ மீற்றர்) சரியாக 8 மணித்தியாலமும் 27 நிமிசங்களிலும் நீந்திக் கடந்தவள் அங்கயற்கண்ணி. கடற்கரும்புலிகளுக்குரிய பயிற்சிகளில் ஈடுபடத்தொடங்கிய நாளிலிருந்து அவளது திறமைகள் தளபதிகளை திருப்தியடைய வைத்தன. கொடுக்கப்படும் இலக்கை வெற்றிகரமாகத் தாக்குவாள் என்பதில் எவருக்கும் ஐயமிருக்கவில்லை.



இதேபோல் காங்கேசன்துறை முகத்தில் 45அடி ஆழம்கொண்ட நீர்ப்பரப்பில் நிலைகொண்டிருந்த வடபகுதி தலைமையகக் கப்பலை யாராலுமே தாக்க முடியாது என்பதில் எந்தக் கடற்படை அதிகாரிக்குமே சந்தேகம் இருக்கவில்லை.

6ஆயிரத்து 300தொன் எடையைக் கொள்ளக்கூடியதும் 326.04 அடி நீளமும் 51.02அடி அகலமும் அதி சக்திவாய்ந்த ராடர்கள் பொருத்தப்பட்டதுமான நீரில் மிதக்கும் நடமாடும் தலைமையகக் கடற்படைக் கப்பலை ஒரு தனி மனிதனால் அழிக்க முடியும் என்று அவர்கள் கனவிலும் நினைக்க வில்லை.

கரும்புலிப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் போது அங்கயற்கண்ணி தனது சக போராளிகளிடம் 'நான் நல்லூர்த் திருவிழா நடக்கும் போது தான் சாகவேண்டும் அப்பதான் திருவிழாவில் அம்மா கச்சான் வித்து வந்த காசு இருக்கும். அந்தக் காசு இருந்தால் தான் என்ர நினைவு நாளுக்கு வீட்ட போற போராளிகளுக்கு அம்மாவால் சாப்பாடு கொடுக்க முடியும்" என்று அடிக்கடி கூறுவாளாம்.

அங்கயற்கண்ணியின் தாக்குதல் இலக்கு நேரம் குறிக்கப்பட்டு திட்டம் தயாரானது. அங்கயற்கண்ணியை கடற்கரைவரை வந்து சிலர் வழியனுப்ப அதன் பின்னரும் விடாது சில போராளிகளும் அவளுடனேயே நீந்தி ஒரு குறிப்பிட்ட தூரம்வரை வந்து வழியனுப்ப அதன் பின்னரும் இலக்கில் இருந்து ஒரு குறிப்பிட்ட தூரம்வரை வந்து சக போராளிகள் இறுதிவிடை கொடுத்தனர். 'எனது இலக்கை அடையாமல் நான் திரும்ப மாட்டேன் அங்கயற்கண்ணி சொன்ன இறுதி வாக்கியம் இதுதான்.

விடைபெற்ற அங்கயற்கண்ணியின் அசைவுகள் தூரத்தே தெரியும்வரையும் அதன் பின்னரும் கண்கள் வலிக்க பார்த்துக் கொண்டிருந்துவிட்டு போராளிகள் திரும்பினர். 1994.08.16அதிகாலை 12.35மணி வரையில் காத்துக்கொண்டிருந்த போராளிகளின் செவிப்பறை அதிர்ந்தது. காங்கேசன்துறை முகத்தில் நின்ற கட்டளைக்கப்பல் தகர்ந்தது.

மகளிர் படையில் முதற் கடற் கரும்புலியான கப்டன் அங்கயற்கண்ணியின் வழிகாட்டலில் இன்று ஆயிரக்கணக்கான அங்கயற்கண்ணிகள் தங்களுக்கு ஓர் சந்தர்ப்பம் கிடைக்காதா எனக் காத்துக்கிடக்கின்றனர்.

தமிழர்கள் எவரும் சாவுக்குப் பயந்தவர்கள் அல்ல. என்பதை உலகமே உணர்ந்து வியக்கும் வண்ணம் உயிரைநீத்த கரும்புலிகளின் நினைவுதினம் இன்று தமிழர் தாயகம் எங்கும் உணர்ச்சி பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

இன்றைய நாளில் தியாகம் மிகு கரும்புலிகளை ஒவ்வொரு தமிழ் மகனும் சிந்தையில் இருத்துவது கடமையாகும். □

**தமிழன்**

# தீவிர வாதிகளை ஒடுக்க பாக். அதிபர் கங்கணம்

## அதிரடி நடவடிக்கைக்கும் ஆயத்தம்


(இஸ்லாமாபாத்)

**கராச்சியில்முகாம் அமைத்து செயற்பட்டு வரும் 30 தீவிரவாத அமைப்புக்களை கடுமையான சட்ட நடவடிக்கைகள் மூலம் ஒடுக்க பாகிஸ்தான் அதிபர் முஷாரப் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளார்.**

**பாகிஸ்தானின் துறைமுக நகரம் கராச்சி . இந் நகரில் கடந்த இரண்டரை ஆண்டுகளாக தீவிரவாதிகள் பயங்கர வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த ஆண்டு அதிபர் முஷாரப்பைக் கொல்ல தீவிரவாதிகள் மூன்று முறைதாக்குதல்கள் நடத்தினர். அதில் அவர் அதிஷ்ட வசமாக உயிர் தப்பினார். இந்த தீவிர வாதிகளின் செயற்பாடுகள் தொடர்பாக இரகசிய ஆய்வு நடத்தும் படி உள்துறை அமைச் சகத்திற்கு முஷாரப்உத்தர விட்டிருந்தார்.**

இதன்படி கராச்சி மாகாண அரசு, சட்ட அமுலாக்க முகவர்கள் ஆகியவற்றுடன் இணைந்து உள்துறை அமைச்சகம் இரகசிய ஆய்வு மேற்கொண்டது.இது தொடர்பான அறிக்கையை முஷாரப்பிடம் உள்துறை அமைச் சகம் சமர்ப்பித்தது.

அந்த அறிக்கையில் கூறப்ப ட்டிருப் பதாவது கராச்சியில் கடந்த இரண்டரை ஆண்டுகளாக தீவிர வாதிகள் பல்வேறு வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றனர் .இங்கு சுமார் 30 தீவிரவாத அமைப்புக்கள்



செயற்படுகின்றன.இவற்றில் 15 அமைப்புகள் பிரிவினை வாதவன் முறைகளில் ஈடுபட்டு வருகின் றன.மற்ற அமைப்புகள் மேற்கத்திய ர்களுக்கு எதிரான தற்கொலைப் படைத் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.

இந்த அமைப்புக்களில் 21 முக்கிய தீவிரவாதிகள் உள்ள னர்.தேடப்படுபவர்கள் பட்டியலில் உள்ள இந்தத் தீவிரவாதிகள் அனைவரும் கராச்சியைச் சேர்ந் தவர்கள் முஷாரப்பைக் கொல்ல நடந்த சதியில் முக்கிய பங்கு வகித்த தீவிரவாதி அம்ஜத் பரு கியின் பெயரும் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.மற்ற முக்கிய தீவிர வாதிகள் அசிப் சோது ,நவீதுல ஹசன்,ரசா இம்ரன் மற்றும் சவுத் மேமன்.

கராச்சியில் இத் தீவிரவாதிகள் சுதந்திரமாக சுற்றித் திரிகின்றனர். இதனால் இன்நகரில் வாழும் மக் களுக்கு பெரிய அளவில் அச்சம் உருவாகியுள்ளது என்று கூறப் பட்டுள்ளது. (உ)

## தீவிர வாதிகள் – படையினர் இடையில் பிலிப்பைன்சில் அமைதி ஒப்பந்தம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் முஸ் லிம் தீவிரவாதிகளுக்கும் அரசு படைகளுக்கும் இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டில மின்டனாவோ காட்டுப்பகுதியில் மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணி (எம்.ஐ.எல். எப்) தீவிர வாதிகளுக்கும் அரசு படைகளுக கும் இடையே நீண்ட நாட்களாக சண்டை நடந்து வருகிறது.

இந்தத் தீவிர வாதிகளுக்கும் அல்.கெய்டா மற்றும் ஜெம்மா இஸ்லாமியர் அமைப்பு தீவிர வாதிகளுக்கும் தொடர்பு உள் ளது.

மின்டனாவோ பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளைக் கடத்திச் சென்று கணிசமான பணத்தை பணயத் தொகையா கப் பெறுவது இந்தத் தீவிரவாதி களின் வாடிக்கையாகி விட் டது.இதற்கு வெளி நாட்டு தீவிர வாதிகளும் உடந்தையாக இருந்து வருகின்றனர்.

இந் நிலையில் எம்.ஐ.எல் எப்.தீவிர வாதிகளுக்கும் பிலிப் பைன்ஸ் பாதுகாப்பு படையின ருக்கும் இடையே முதல் கட்ட ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

எம்.ஐ.எல்.எப்.தீவிர வாதிகள் வெளிநாட்டு தீவிரவாதிகளை அனுமதிக்கக் கூடாது. சுற்று லாப் பயணிகளைக் கடத்த திட்டமிடும் கூலிப்படையினரை பாதுகாப்பு படையினரிடம் ஒப் படைக்க வேண்டும் என்ற அர சின் நிபந்தனையை தீவிர வாதி கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்,

இந்த மாத இறுதியில் மலே சியாவில் இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது. (உ)



**அமெரிக்க முன்னாள அதிபர் பில் கிளிங்டனின் "எனது வாழ்க்கை" சுயசரிதை நூல் விற்பனையில் உலக சாதனை படைத்து வருகிறது. அவரது புத்தகத்தில் கையொப்பம் வாங்குவதில் ஆர்வம் காட்டும் அமெரிக்கர்கள்.**

## சதாமுக்கு எதிரான ஆதாரங்களை திரட்டுவதில் அமெரிக்கா முனைப்பு

(வாஷிங்டன்)

நீதிமன்ற விசாரணைக்கு உட் படுத்தப்பட்டுள்ள ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனுக்கு எதி ராக ஆதாரங்களை திரட்ட அமெ ரிக்கா உதவி வருகின்றதாக அமெரிக்க வெளியுவுத்துறை தெரி வித்துள்ளது.

ஈராக் சிறப்பு நீதிமன்றத்தில் சதாம் விசாரிக்கப்பட்டு வருகிறார். எனவே சதாம் தொடர்புடைய அனைத்து தகவல்களையும் திரட்டிவருகிறோம். இதற்காக தன்னார்வ அமைப்புகளும் தமக் குக் டைக் கும் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளலாம் என்று வெளியுறவுத் துறை அதிகாரி ஆடம் எரேலி தெரிவித்துள்ளார்.

விசாரணையில் அமெரிக்கா குறுக்கிடாது. ஈராக்கியர் மீது ஈராக்கியரே விசாரித்து தீர்ப்பு அளிக்கவேண்டும் என்பதையே அமெரிக்கா விரும்புகிறது என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஈராக்கில் பணி யில் உள்ள அமெரிக்கப் படைகள் இனிமேல், அமெரிக்க இராணுவ ஜெனரல் டேவிட் கேசி தலைமை யில் இயங்கும் என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள் ளார். (உ)

## சுற்றுலாப் பயணிகள் அதிகரிப்பு

(காட்மண்டு)

நேபாளத்தில் சுற்றுலாப் பயணிகளின்வருகை 5 சத வீதம் அதிகரித்துள்ளது. எவரஸ் சிகரம அமைந்துள்ள நேபாள நாட்டில் மாவேயிஸ்ட் தீவிரவாதிகளின் தாக்குதல் கள் அதிகரித் துள்ள தால் அங்கு கடந்த சில ஆண்டு களாக சுற்றுலாப்பயணிகளின் வருகை குறைந்திருந்தது. இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங் களில் ஒரு இலட் சத்து 49 ஆயி ரத்து 556 வெளி நாட்டுப் பயணி கள் நேபாளத்திற்கு சென்றுள்ள னர்.

கடந்த ஆண்டை ஒப்பிடுகை யில் இது 5சதவீதம் அதிகம் ஆனால் இந்தியாவில் இருந்து வரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 8சத வீதம குறைந் துள்ளதாக நேபாளச் சுற்றுலாத் துறை தெரிவித்துள்ளது. (உ)

WORLD NEWS உலக தரிசனம்

## துருக்கி நில நடுக்கத்தில் சிக்கி 18 பேர் பலி

(அங்காரா)

துருக்கியில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட நில நடுக்கத்தில் 18 பேர் உயிரிழந்தனர். 21 பேர் காயமுற்றனர்.

கிழக்கு துருக்கியில் ஈரான் நாட்டின் எல்லை யில் உள்ள அக்ரி மாகா ணத்தில் அதிகாலை 4 மணிக்கு நில நடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவு கோலில் 5புள்ளிகள் என்ற அளவில் நில நடுக் கம்பதிவானது.

இகின் காலி என்ற கிராமத்தில் இடிபாடுக ளில் சிக்கி 18 பேர் இறந் தனர் .மீட்புப் பணியில்



**நில நடுக்கத்தில் பலி யான குழந்தைகள்**

இராணுவத்தினா ஈடுபட்டுள்ளனர். உயிரிழப்பு மேலும் உயர வாய்ப்பில்லை என்று மாகாண ஆளுநர் ஹுசெயின் யாவுஸ்தெமிர் தெரிவித்தார்.

கோடை காலம் என்பதால் குளிர்ச்சியான பகுதிகளுக்கு700 க்கும் மேற்பட்டவர்கள் சென்று விட்டனர். இல்லையென்றால் உயி ரிழப்புமேலும் அதிகரித்திருக்கும் என்றுஅவர் கூறினார். (உ)

## ஈராக்கியரை ஆற்றில் தள்ளினராம் அமெ.வீரர்கள் மீது வழக்குத் தாக்கல்

ஈராக்பொது மகன் ஒருவரை டைக்ரீஸ் நதிப்பாலத்தில் இருந்து ஆற்றில் வலுக்கட்டாயமாகக் குதிக்கச் செய்த அமெரிக்க இரா ணுவத்தினர் மூன்றுபேர் மீது கொலைக் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆற்றில் குதித்த பொது மகன் பின்னர் இறந்தார். இதே போல மற்றொருவரை ஆற்றில் குதிக் கச் செய்த இராணுவ வீரர் ஒருவர் மீதும் வழக்குப் பதிவு செய்யப் பட்டுள்ளது. எனினும் ஆற்றில் குதித்த இரண்டாவது நபர் உயிருடன் மீட்கப்பட்டார்.

கடந்த ஜனவரியில் நடந்த இந்தச் சம்பவத்தை மறைக்க முயன்றதற்காக படைவீரர்கள் 4பேர்மீதும் மேலும் ஒரு வழக் குப்பதிவு செய்யப்பட்டு ள்ளது.

காரில் வேகமாகச் சென்ற ஈராக்கியரைச் சுட்டுக்கொன்ற சம்பவத்தில் அமெரிக்க வீரர் ஒருவர் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சிறையில் 40 ஈராக்கைதிகள இறந்த சம்பவம் குறித்தும் அமெரிக்க இராணுவம் விசார ணையை ஆரம்பித்துள்ளது. (உ)


# பரபரப்பான சூழ்நிலையில் இன்று பாராளுமன்றம் கூடுகிறது

## புயலா? பூகம்பமா? பொறுத்திருப்போம்

(புதுடில்லி)

**பரபரப்பான அரசியல் சூழ் நிலையில் இந்தியப் பாராளுமன்றத்தின் வரவு செலவுத் திட்டக் கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகிறது. இந்தக் கூட்டத் தொடரை சுமுகமாக நடத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது.**

**இந்தக் கூட்டத்தொடர் இன்று தொடங்கி செப்ரெம்பர் 3 ஆம் திகதி வரை நீடிக்கிறது. இடையில் ஒரு மாதம் இடைவெளி விடப்படுவதால் மொத்தம் 30 அமர்வுகளைக் கொண்டதாக இக்கூட்டத் தொடர் இருக்கும். இக் கூட்டத் தொடரில் புயலை கிளப்ப எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன.**



குற்றப் பின்னணி உள்ளவர்களை அமைச்சரவையில் சேர்த்த விவகாரம், ஆளுநர்கள் நீக்கப்பட்ட விவகாரம் போன்றவற்றை எழுப்பி சபையில் புயலைக் கிளப்ப பாரதிய ஜனதா முடிவு செய்துள்ளது.

எனவே, சபையை சுமுகமாக நடத்துவதற்கான முயற்சிகளை அரசு எடுத்து வருகிறது. இது குறித்து மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத் டில்லியில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர், "சபையை சுமுகமாக நடத்த உதவும்படி அத்வானியிடம் நான் பேசினேன் என்றார். அதற்கு அத்வானி என்ன சொன்னார்? என்று கேட்ட போது தனது சகாக்களுடன் பேசிவிட்டு சொல்வதாகச் சொன்னார்" என்றார் ஆசாத்.

எதிர்க்கட்சியினர் சபையை நடத்த ஒத்துழைக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். சபாநாயகர் சாட்டர்ஜியும் சபையைச் சுமுகமாக நடத்துவதற்காக இரு தரப்புத் தலைவர்களையும் சந்தித்துப் பேசி வருகிறார்.

இந்தக் கூட்டத் தொடரில் லோக்பால் மசோதா உள்ளிட்ட 28 மசோதாக்கள் கொண்டுவரப்படுகின்றன. பொடா சட்டத்தை ரத்துச் செய்யும் மசோதாவும் கொண்டு வரப்படுகிறது. மகளிர் மசோதா பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சகம் முடிவெடுக்கவில்லை என்று குலாம் நபி ஆசாத் தெரிவித்தார்.

இன்று கூடும் வரவு செலவுத் திட்டத் தொடர் பரபரப்பாகவே இருக்கும். நாளை ரயில்வே வரவு செலவுத் திட்டமும் நாளை மறு நாள் பொருளாதார ஆய்வறிக்கையும் அதற்கு அடுத்த நாள் மத்திய வரவு செலவுத் திட்டமும் தாக்கல் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)




## 10 இலட்சம் மதிப்பில் வெங்கடேசனுக்கு வைரக் கிரீடம்

(சென்னை)

திருப்பதி-திருமலை ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் ஆலயத்தில் உள்ள உற்சவ மூர்த்தியான ஸ்ரீ மலையப்ப சுவாமிக்கு 10 இலட்சம் ரூபா மதிப்புள்ள வைரக் கிரீடத்தில் சென்னை பக்தர் ஒருவர் காணிக்கை அளித்துள்ளார்.

திருமலை ஸ்ரீ வெங்கடேச பெருமாளைத் தரிசிக்கத் தினம் தோறும் இலட்சக்கணக்கில் பக்தர்கள் சென்று வருகின்றனர்.

மேலும் தங்களது காணிக்கைகளை பக்தர்கள் பணமாகவும் தங்க நகைகளாகவும் உண்டியலில் அளித்துவருகின்றனர். கடந்த சில தினங்களுக்கு முன் சென்னையைச் சேர்ந்த ஒரு பக்தர் திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தார். பின்னர் ஆலயத்தில் உள்ள உற்சவ மூர்த்தியான ஸ்ரீ மலையப்ப சுவாமிக்கு ஒன்றரைக் கிலோ தங்கத்திலான வைரக் கிரீடத்தினை அதிகாரிகளிடம் காணிக்கையாக அளித்தார். இதன் மதிப்பு ரூபா 10 இலட்சம் ஆகும். (உ)

## பாக். புதிய பிரதமருக்கு மன்மோகன் சிங் வாழ்த்து

(புதுடில்லி)


பாகிஸ்தானின் புதிய பிரதமராகப் பொறுப்பேற்றிருக்கும் சௌத்ரி சுஜாட் ஹுசைனுக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மன்மோகன் சிங் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில்,

'நமது இருதரப்பு உறவில் தற்போது நிலவி வரும் சாதகமான சூழ்நிலைகளை வலுப்படுத்துவது குறித்து தங்களுடன்நான் இணைந்து பணியாற்ற விரும்புகிறேன்.

மேலும் இப்பேச்சுவார்த்தையை முன்னுக்குக் கொண்டு வரவும் நான் விரும்புகிறேன் என்று கூறியுள்ளார்.

வங்கதேச பிரதமர் கலீதாஷ் யாவும், நேபாளப் பிரதமர் ஷேர்பகதூர் டியூபாவும் தங்களது வாழ்த்துக்களை புதிய பாக்.பிரதமர் சுஜாட் ஹுசைனுக்கு தெரிவித்துள்ளனர். (உ)




**தமிழ் நாட்டிற்கு சுற்றுலா வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணிகள் பயன் பெறும் வகையில் இணையத் தளத்தில் ஒன்லைன் மூலமாக சுற்றுலா மற்றும் தங்கும் விடுதிக்கு உரிய தொகையைச் செலுத்தி முன்பதிவு செய்யும் முறையை முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் தொடக்கிவைத்தார்.**

## நினைத்தவுடன் நீக்க ஆளுநர்கள் கைக்கூலிகளா?

## வாஜ்பாய் சூடான கேள்வி

(புதுடில்லி)

ஆளுநர்கள் பதவி நீக்கம்



செய்திருப்பது ஜனநாயகத்திற்கு கிடைத்த ஒரு பலத்த அடி என்று முன்னாள் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார். மேலும் தினக் கூலி ஊழியர்களைப் போல அவர்கள் நீக்கப்பட்டு இருக்கிறார்கள் என்றும் வாஜ்பாய் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மத்தியில் உள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு உத்திரப்பிர தேசம், அரியானா, குஜராத், கோவா ஆகிய 4 மாநில முதல்வர்களை அதிரடியாக நீக்கியது மேற்படி நால்வரும் ஆர்.எஸ்.எஸ். பின்னணி உளளவர்கள் என்பதாலேயே நீக்கப்பட்டதாக மத்திய அரசு தரப்பில் காரணம் கூறப்படுகிறது.

இதனை பாரதிய ஜனதா வன்மையாகக் கண்டித்துள்ளது. இது இந்திய அரசியல் சட்டத்தை ஒட்டுமொத்தமாக மீறிய ஒரு செயல் என்று பா.ஜ.க. பொதுச் செயலாளர் அருண்ஜெட்லி தெரிவித்தார். எதிர்த்து வழக்குத் தொடரவும் பா.ஜ.க. முடிவு செய்துள்ளது.

ஆளுநர்கள் நீக்கப்பட்டதற்கு பா.ஜ.க. தலைவர் வெங்கையநாயுடு கடும் கண்டனம் தெரிவிததுள்ளார். இது ஜனநாயகத்துக்கு விரோதமானது மட்டுமல்ல, கொடூரமானதும் கூட. முதலில் ஊழல் மந்திரிகளைச் சேர்த்தார்கள். பிறகு பாடப்புத்தகங்களை மாற்றினார்கள். இப்பொழுது ஆளுநர்களை நீக்கி இருக்கிறார்கள். இதெல்லாம் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும் என்று வெங்கைய நாயுடு மேலும தெரிவித்துள்ளார். (உ)

## இந்தியச் செய்திகள்



**உத்ராஞ்சல் மாநில ஆளுநர் சுதர்சன் அகர்வால் நேற்று முன் தினம் லக்னோவில் உத்தரப்பிரதேச ஆளுநர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.**

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# கல்விப் பொதுத் தராதர (சாதாரண) மாதிரிப் பரீட்சை - 2004

# General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004

கணிதம் II

ஆக்கம் :
குணநாயகம் மனோரஞ்சன் ஆசிரியர்,
யா/ அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம், நீர்வேலி.

மணி - 3

முதலாம் வினாவுட்பட எட்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

1.

(a) ரூபா 4000 இற்கு வாங்கப்பட்ட பொருளொன்று 20% இலாபம் வைத்து விலை குறிக்கப்பட்டது. உடன் காசுக்கு விற்கும்போது குறித்த விலையில் 10% கழிவு கொடுக்கப்பட்டது.

(i) பொருளின் குறித்த விலை யாது?

(ii) கழிவுடன் பொருளை விற்றவிலை யாது?


(iii) சதவீத இலாபம் எவ்வளவு?

(b)

(i) தீர்க்க : $3^x = \sqrt[2]{7}$

(ii) பெறுமானங் காண்க. $2\ell g4 + 3\ell g5 - \ell g2$

(c)




மேலுள்ள வலையுரு வரையம் குறிப்பிட்ட விளையாட்டுக் கழகம் ஒன்றின் அங்கத்தவர்களின் வயது தொடர்பான விபரத்தைக் குறிக்கிறது.

(i) 40 அங்கத்தவர்களைக் கொண்ட வகுப்பாயிடை யாது?

(ii) (25-31) வகுப்பாயிடையுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாது?

(iii) இவ்விளையாட்டுக் கழகத்தின் மொத்த அங்கத்தினர் தொகையைக் காண்க.

(d) ஒரு வகுப்பிலுள்ள 15 மாணவர்கள் கணித பாடப் பரீட்சை ஒன்றில் பெற்ற புள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளன.

03, 12, 25, 75, 43, 17, 31, 49, 23, 42, 21, 40, 41, 43, 45


(i) இப்புள்ளிப் பரம்பலின் வீச்சை எழுதுக.

(ii) இப்புள்ளிகளின் பரம்பலைக் ஒரு தண்டு இலை வரைபில் காட்டுக.

(iii) இப்புள்ளிகளின் இடையத்தைக் காண்க.

(e)

A,B,C ஆகிய தொடைகளைக் கொண்ட $\varepsilon$ இன் முதலிமை தொடர்பான தகவல்கள் பின்வரும் வென்வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளன.




(i) $n(A \cap B)$ ஐக் காண்க.

(ii) ஒரு சோடி மூட்டற்ற தொடையை எழுதுக.

(iii) $A \cup A'$ ஆல் குறிக்கப்படும் தொடையை எழுதுக.

(f)

(i) சுருக்குக. $1\frac{3}{10} \div \frac{1}{5} + \frac{2}{3}$

(ii) தீர்க்க $2x + y = 8$
$X - Y = 1$

(iii) $S = \frac{n}{2}(a + \ell)$ என்னும் சூத்திரத்தில் n ஐ எழுவாயாக மாற்றுக.

2. (a) கமலன் என்பவர் இலங்கைப் பணத்திற்கு ரூபா 100 000 பெறுமதியான 40 மின்னடுப்புகளை இறக்குமதி செய்தபோது 40% தீர்வை அறவிடப்பட்டது. ஆரம்பப் பெறுமதியின் 5% ஐ ஏற்றுக் கூலியாகச் செலுத்தி மின்னடுப்புகளை தம் நிறுவனத்தில் சேர்ப்பித்தார். இச்செலவுகளின் பின்னர் மின்னடுப்பொன்றிற்கு 20% இலாபம் பெறுமாறு விலை குறித்தார்.

(i) கமலன் செலுத்திய தீர்வை எவ்வளவு?

(ii) ஏற்றுக்கூலி எவ்வளவு?

(iii) தீர்வை, ஏற்றுக்கூலி என்பன செலுத்தப்பட்ட பின் மின்னடுப்பொன்றின் பெறுமதி யாது?

(iv) 20% இலாபம் பெறுமாறு மின்னடுப்பொன்றின் விலை குறிக்கப்படின் குறித்த விலையைக் காண்க?

(v) உடன் காசுக் கொள்வனவிற்கு 10% கழிவு கொடுக்கப்படின் மின்னடுப்பொன்றை விற்கும் விலை யாது?

(b) ரூபா 10 பங்குகளை, ரூபா 11 வீதம் வாங்குவதற்கு ஒருவர் 88,000 ஐ முதலீடு செய்தார். கம்பனி 12% பங்கு லாபம் வழங்கியது.

(i) பங்கு ஒன்று வாங்கிய விலை யாது?

(ii) அவர் வாங்கிய பங்குகளின் எண்ணிக்கை யாது?

(iii) அவர் பெறும் வருமானம் யாது?

3.(a) முதலாவது துண்டு 5 cm நீளமாகவும், அதன் பின்னர் ஒவ்வொரு துண்டும் அதற்கு உடன் முந்திய துண்டின் இருமடங்கு நீளமாகவும் இருக்குமாறு மெல்லிய நீண்ட கம்பியொன்று துண்டுகளாக வெட்டப்படுகின்றது.

(i) முதல் நான்கு துண்டுகளின் நீளங்களையும் எழுதுக.

(ii) ஒழுங்காக எடுக்கப்படுமிடத்து இத்துண்டுகளின் நீளங்கள் எவ்விருத்தியைக் குறிக்கும்.

(iii) கம்பியின் நீளம் 2555 cm எனின் வெட்டப்படக்கூடிய துண்டுகளின் எண்ணிக்கையைக் காண்க.

(b) சூத்திரத்தைப் பயன்படுத்தி அல்லது வர்க்க நிறைவாக்கலின் மூலம் $x^2 - 10x + 3 = 0$ இன் மூலங்களைக் கிட்டடிய இரு தசமதானங்களுக்குக் காண்க.

(i) $g = \frac{4\pi^2\ell}{T^2}$ என்னும் சூத்திரத்தில், $\pi = 3.142$, $\ell = 46.4$ $T = 1.37$ ஆகிய பெறுமானங்களைப் பிரதியிடுக.

(ii) g இன் பெறுமானத்தைக் கிட்டிய முழு எண்ணுக்குக் காண்பதற்கு மடக்கை அட்டவணையைப் பயன்படுத்துக.

(b) ஐக்கிய இராச்சியத்தில் வேலை செய்யும் ஒருவரின் மாதச் சம்பளம் 500 ஸ்ரேலிங் பவுண் ஆகும்.

(i) 1 ஸ்ரேலிங் பவுண் 180 இலங்கை ரூபாய்க்குச் சமன் எனின் அவரின் சம்பளம் இலங்கை ரூபாவில் எவ்வளவு?

(ii) பின்னர் ஸ்ரேலிங் பவுணுக்குச் சமானமான இலங்கைப் பெறுமானம் 5% இனால் அதிகரிப்பின் அவர் மாதம் இலங்கை ரூபாவில் எவ்வளவு பணம் கூடுதலாகப் பெறுவார்?

5. நேர்விளிம்பு, கவராயம், cm/mm அளவிடை ஆகியவற்றை மாத்திரம் பயன்படுத்தி, அமைப்புக் கோடுகளைத் தெளிவாகக் காட்டி,

(i) AB= 7.5 cm, $A\hat{B}C = 60^0$ BC= 4.5 cm, CD= 6.5 cm ஆகவும் கோடுBC யிலிருந்து புள்ளி D ஆனது 5 cm தூரத்தில் அமையுமாறும் உள்ள நாற்பக்கல் ABCD ஐ வரைக.

(ii) AD இன் நீளத்தை அளந்து எழுதுக.


(iii) புள்ளிகள் B,C களிலிருந்து சமதூரத்தில் உள்ள புள்ளியின் ஒழுக்கை அமைக்குக.

(iv) AB இற்கு B இல் செங்குத்து அமைக்க.

(v) AB ஐ B இல் தொட்டு C இற் கூடாகச் செல்லும் வட்டத்தின் மையம் O வைக் கண்டு வட்டத்தை வரைக.

(vi) வட்டத்தின் ஆரையை அளந்து எழுதுக.

6. வில் வடிவிலமைந்த யன்னல் ஒன்று 1m உயரத்தையும், 56 cm அகலத்தையும் உடைய செவ்வகப் பகுதியையும், 56cm விட்டமுள்ள அரைவட்டப் பகுதியையும் கொண்டுள்ளது.




(i) வில்லுடன் யன்னலின் மொத்த உயரம் யாது?

(ii) அரைவட்டப் பகுதியின் பரப்பளவைக் காண்க.

(iii) யன்னலின் மொத்தப் பரப்பளவைக் காண்க.

(iv) யன்னலின் சுற்றளவைக் காண்க.


(b) செங்கோண முக்கோணக் குறுக்கு வெட்டைக் கொண்ட உலோகச் செவ்வரியம் ஒன்றின் நீளம் 22cm ஆகும். செங்கோணத்தைக் கொண்ட இரு பக்கங்களினதும் நீளங்கள் 10 cm உம் 5 cm உம் ஆகும்.

(i) அரியத்தின் முக்கோணக் குறுக்கு வெட்டின் பரப்பளவைக் காணிக்க.

(ii) அரியத்தின் கனவளவைக் கணிக்க.

(iii) அரியம் உருக்கப்பட்டு 7cm உயரமுள்ள உருளை ஒன்ற செய்யப்படுமெனின் உருளையின் ஆரையைக் காண்க.

7.




மேலே தரப்பட்ட உருவில் O வை மையமாகக் கொண்ட வட்டத்தின் மீது P,Q,R,S, என்னும் புள்ளிகள் இருக்கின்றன. PR ஒரு விட்டம். PQ இற்குச் செங்குத்தாக OM வரையப்பட்டுள்ளது. PN ஒரு தொடலி வட்டத்தின் விட்டம் 10 cm, PQ = 6cm, $P\hat{Q}R = 40^0$, $S\hat{P}Q = 100^0$ ஆகும்.

(i) வட்டத்தின் ஆரை எவ்வளவு?

(ii) PM ஐக் காண்க.

(iii) OM ஐக் காண்க.

(iv) $P\hat{Q}R$ இன் பெறுமானம் யாது?

(v) $P\hat{O}Q$ இன் பெறுமாளத்தைக் காண்க.

(vi) $Q\hat{O}R$ இன் பெறுமாளத்தைக் காண்க.

(vii) $S\hat{R}Q$ இன் பெறுமாளத்தைக் காண்க.

(viii) $O\hat{P}N$ இன் பெறுமாளம் யாது?

(08 ஆம் பக்கம் பார்க்க)

நாளை ஆங்கில மாதிரிப்பரீட்சை வினாத்தாள் - I வெளிவரும்

# கரும்புலிகள் தடகளப் போட்டி முதல் நாள் முடிவுகள்

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடாத்திய முதலாவது தமிழீழ இளையோர் தேசிய தடகளப்போட்டியின் ஆரம்ப நாள் போட்டிமுடிவுகள் வருமாறு,


(உ-68)

| நிகழ்ச்சி | நிலை | பெயர் | மாவட்டம் |
|---|---|---|---|
| **பெண்கள் (14 வயது)** | | | |
| குண்டெறிதல் | I | வோ.சலுஜா | அம்பாறை |
| | II | கு.கஜேந்தினி | வவுனியா |
| | III | ச.அனுதனா | வவுனியா |
| 200 மீற்றர் | I | கு.உஷாந்தினி | மன்னார் |
| | II | ப.நித்தியா | கிளிநொச்சி |
| | III | த.மதுரா | யாழ்ப்பாணம் |
| தட்டெறிதல் | I | லோ.சலுஜா | அம்பாறை |
| | II | ச.அனுதனா | வவுனியா |
| உயரம் பாய்தல் | I | ஜெ.அபிகேசி | திருகோணமலை |
| | II | நொ. துயிலகா | வவுனியா |
| | III | சு.கோகிலவதனி | அம்பாறை |
| நீளம் பாய்தல் | I | இ.பத்மசாந்தி | கிளிநொச்சி |
| | II | கு.சாந்தினி | மன்னார் |
| | III | நெ.துஜிலகா | வவுனியா |
| **பெண்கள் (16 வயது)** | | | |
| தட்டெறிதல் | I | சி.தாரணி | கிளிநொச்சி |
| | II | த.கீர்த்திகா | யாழ்ப்பாணம் |
| | III | த.அனுஷா | வவுனியா |
| 400 மீற்றர் | I | ஏ.ரனித்தா | முல்லைத்தீவு |
| | II | ப.சிறிதேவி | மன்னார் |
| | III | ந.மேஷி | யாழ்ப்பாணம் |
| 200 மீற்றர் | I | இ.வாகினி | யாழ்ப்பாணம் |
| | II | எஸ்.வேசினி | அம்பாறை |
| | III | ச.கலைவாணி | வவுனியா |
| குண்டெறிதல் | I | சீ.தாரணி | கிளிநொச்சி |
| | II | த.அனுஷா | வவுனியா |
| | III | ஆர்.சுரேஷ்சினி | அம்பாறை |
| உயரம் பாய்தல் | I | பி.கஜித்தா | யாழ்ப்பாணம் |
| | II | செ.கீர்த்திகா | யாழ்ப்பாணம் |
| | III | க.யோகதர்சினி | வவுனியா |
| **பெண்கள் (18 வயது)** | | | |
| முப்பாய்தல் | I | சி.சசிகலா | மன்னார் |
| 1500 மீற்றர் | I | நா.சோபனா | முல்லைத்தீவு |
| | II | சி.சிவறஞ்சினி | யாழ்ப்பாணம் |
| | III | சு.கெனற் | மன்னார் |
| ஈட்டியெறிதல் | I | க.சேதுப்பிரியா | யாழ்ப்பாணம் |
| | II | ந.சுபாஜினி | மன்னார் |
| | III | ச.செல்வகுமாரி | கிளிநொச்சி |
| 200 மீற்றர் | I | க.கலிஸ்ரா றொசானி | திருகோணமலை |
| | II | இ.துவாரகா | கிளிநொச்சி |
| | III | ஆ.பிரியா | அம்பாறை |
| 400 மீற்றர் | I | சு.சிவதர்சினி | மன்னார் |
| | II | சி.யாழினி | யாழ்ப்பாணம் |
| | III | செ.மொறின் ஜீவஜனனி | மன்னார் |
| தட்டெறிதல் | I | க.சேதுப்பிரியா | யாழ்ப்பாணம் |
| | II | அ.பகீனா | யாழ்ப்பாணம் |
| | III | ரா.காயத்திரி | மன்னார் |
| **ஆண்கள் (14 வயது)** | | | |
| குண்டெறிதல் | I | மு.முகமட் நலீம் | திருகோணமலை |
| | II | வி.விதர்சன் | கிளிநொச்சி |
| | III | ஶ்ரீ.வசந்தன் | கிளிநொச்சி |
| உயரம் பாய்தல் | I | வி.விமலசிறி | அம்பாறை |
| | II | ச.கிருசாந் | வவுனியா |
| | III | க.ஜெனீந்திரகாந் | முல்லைத்தீவு |
| 200 மீற்றர் | I | மீ.இர்பான் | அம்பாறை |
| | II | மு.முகமட் நலீம் | திருகோணமலை |
| | III | வி.விமலசிறி | அம்பாறை |
| ஈட்டியெறிதல் | I | இ.வசந்தன் | முல்லைத்தீவு |
| | II | வி.விதர்சன் | கிளிநொச்சி |
| | III | ஶ்ரீ.வசந்தன் | கிளிநொச்சி |
| நீளம்பாய்தல் | I | மீ.இர்பான் | அம்பாறை |
| | II | வை.அன்வர் | மட்டக்களப்பு |
| | III | எஸ்.சந்திரகுமார் | யாழ்ப்பாணம் |
| **ஆண்கள் (16 வயது)** | | | |
| தட்டெறிதல் | I | மு.முகமது றிஸ்வி | திருகோணமலை |
| | II | ம.திலீபன் | மன்னார் |
| | III | கொ.நிர்மல் றொட்றிக்கோ | மன்னார் |
| 400 மீற்றர் | I | உ.சுரேஸ் | முல்லைத்தீவு |
| | II | பா.டயான் | யாழ்ப்பாணம் |
| | III | ஏ.அல்.ஜாபிர் அகமட் | மட்டக்களப்பு |
| 200 மீற்றர் | I | ம.நேதாஜி | வவுனியா |
| | II | உ.சுரேஷ் | முல்லைத்தீவு |
| | III | அ.நயிமுல்லா | திருகோணமலை |
| **ஆண்கள் (18 வயது)** | | | |
| ஈட்டியெறிதல் | I | எஸ்.எம்.தமீம் | அம்பாறை |
| | II | எப்.டிலக்ஷன் | மட்டக்களப்பு |
| | III | ஜே.றஜீவ் ஜெபஸ்ரியன் | மன்னார் |
| 1500 மீற்றர் | I | ப.ருஷாந்தன் | மன்னார் |
| | II | சொ.கிரிசாந்தன் | யாழ்ப்பாணம் |
| | III | ஸ்.சுதர்சன் | மன்னார் |
| முப்பாய்தல் | I | என்.எ.நிப்றாஸ் | அம்பாறை |
| | II | ந.கஜேந்திரன் | யாழ்ப்பாணம் |
| | III | கு.திலீபன் | மன்னார் |
| 200 மீற்றர் | I | கு.முகமது ஷாறிஸ் | திருகோணமலை |
| | II | எம்.எல்.தீபன் | மட்டக்களப்பு |
| | III | இ.எழில்வளவன் | மட்டக்களப்பு |
| உயரம் பாய்தல் | I | ந.சஞ்ஜெயன் | முல்லைத்தீவு |
| | II | என்.எ.நிப்றாஸ் | அம்பாறை |
| | III | கே.தவசீலன் | மட்டக்களப்பு |
| 400 மீற்றர் | I | கு.முகமது ஹாறிஸ் | திருகோணமலை |
| | II | இ.எழில்வளவன் | மட்டக்களப்பு |
| | III | மா.சுதர்ஸ்சன் | திருகோணமலை |
| குண்டெறிதல் | I | க.அன்ரியோ சாம்சன் | யாழ்ப்பாணம் |
| | II | ரா.கிஷான் ரங்கா | திருகோணமலை |
| | III | த.பரணிதரன் | யாழ்ப்பாணம் |

# வரலாறு படைத்தார் மரியா

# வீழ்ந்தார் செரீனா வில்லியம்ஸ்

விம்பிள்டன் டெனிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவு சம்பியன் பட்டத்தை ரஷ்யாவைச் சேர்ந்த 17வயது வீராங்கனையான மரியா ஷரபோவா கைப்பற்றினார். ரஷ்யாவைச் சேர்ந்த வீராங்கனை ஒருவர் விம்பிள்டன் பட்டத்தை வெல்வது இதுவே முதன் முறையாகும்.



விம்பிள்டன் டெனிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்சும், ரஷ்யாவின் மரியா ஷரபோவாவும் மோதினர். இந்தப் போட்டியில் ஷரபோவா 6-1,6-4 என்ற நேர் செற்கணக்கில் நடப்பு சம்பியனாக களம் இறங்கிய செரீனா வில்லியம்சை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றார்.

1974ஆம் ஆண்டு நடைபெற்ற விம்பிள்டன் டெனிஸ் போட்டியில் ஓல்கா எனும் ரஷ்ய வீராங்கனை இறுதிப் போட்டிக்கு முன்னேறி இருந்ததே முந்தைய சிறப்பம்சமாக இருந்தது.

இந்தச் சாதனையை தற்போது ஷரபோவா முறியடித்து, விம்பிள்டன் பட்டம் வென்ற முதல் ரஷ்ய வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார். இதுமட்டுமன்றி கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வென்ற ரஷ்யாவைச் சேர்ந்த 2வது வீராங்கனை என்ற பெயரையும் இந்த வெற்றி மூலம் ஷரபோவா பெற்றார்.



கடந்த மாதம் நடைபெற்ற பிரான்ஸ் திறந்த போட்டியில் ரஷ்ய வீராங்கனை அனஸ் தாசியா மிஸ்கினா சம்பியன் பட்டம் வென்று இருந்தது குறிப்பிடத்தக்கது.

மேற்படி போட்டிகளில் குறைந்த் வயதில் சம்பியன்பட்டம் வென்ற இரண்டாவது வீராங்கனை என்ற பெருமையும் ஷரபோவாவிற்கு இந்த வெற்றி மூலம் கிடைத்தது.

(உ)

# காலை பற்றீசியன், மாலை பல்கலை

# அரையிறுதிப் போட்டியில் வெற்றியீட்டின

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் கடந்த 2ஆம் திகதி நடாத்திய அரையிறுதிப் போட்டிகளில் காலை இடம்பெற்ற போட்டியில் ஜங்ஸ்ரார் கழகத்தை எதிர்த்து விளையாடிய பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் விளையாட்டுக்கழகம் 27ஓவர்களில் 7இலக்கினை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் நயனாஸ் ஆட்டமிழக்காமல் 52ஓட்டங்களையும் ராகவன் 30ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

ஜங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சார்பில் பந்துவீசிய ரஜித் 3 இலக்கினைக் கைப்பற்றினார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 17.4ஓவர்களில் சகல இலக்கினையும் இழந்து 96ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் துசியந்தன் 16, தினேஸ் 16ஓட்டங்களைப் பெற்றனர். பற்றீசியன் விளையாட்டுக்கழகம் சார்பில் பந்துவீசிய போயிட் 4, முகுந்தன் 3, சுரேன் 2 இலக்குகளைக் கைபற்றினர்.

மாலை நடைபெற்ற போட்டியில் கே.சி.சி.சி.விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விளையாடிய பல்கலைக் கழக அணி வெற்றிபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய பல்கலைக் கழக அணி 26.4ஓவர்களில் சகல இலக்கினையும் இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் தனேத்காந் 37, கௌரிபாகன் 37ஓட்டங்களையும், ஜதார்த்தனன் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

கே.சி.சி.சி.வி.க.சார்பில் பந்துவீசிய நா.பிரதீபன் 5, துசியந்தன் 2, தீபன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி.வி.க.27ஓவர்களில் 9இலக்குகளை இழந்து 173ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சி.மதுஷன் 70, இ.தீபன் 28ஓட்டங்களைப் பெற்றனர். பல்கலைக்கழக அணிசார்பில் பந்துவீசிய ஜதார்த்தன், கௌரிபாகன், றொபேசன் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளைக் கைப்பற்றினர். (உ)

## சென்னை மாணவர் தேசிய சாதனை

(சென்னை)

ஜெய்ப்பூரில் நடைபெற்று வரும் 31வது தேசிய ஜூனியர் நீச்சல் போட்டியில் சென்னை செட்டிநாடு வித்யாஸ்ரம் பள்ளி மாணவர் ஜே.அக்னீஸ்வர் மீண்டும் ஒரு தேசிய சாதனை படைத்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற 200மீற்றர் பிரெஸ்ட் ஸ்டிரோக் போட்டியில் அவர் 2நிமிடம்38.11 வினாடிகளில் இலக்கை எட்டி தங்கம் வென்றுள்ளார்.

இதன் மூலம் புதுடில்லி வீரர் சந்தீப் சேஜுவால் கடந்த ஆண்டு போட்டியில் நிகழ்த்திய சாதனை (2:43.53வி.) தகர்க்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிர வீரர் யசோதன் லோங்கன் வெள்ளிப் பதக்கத்தையும் (2:39.26வி.) கர்நாடக வீரர் பத்மராஜ் (2:48.91வி.) வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற 50மீற்றர் பிரெஸ்ட் ஸ்டிரோக் போட்டியில் அக்னீஸ்வர் 33.18வினாடி இலக்கை எட்டி புதிய தேசிய சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், பாங்காக்கில் செப்டம்பரில் நடைபெறும் ஆசியப் போட்டிக்கும் அவர் தகுதி பெற்றுள்ளார். (உ)



ஐரோப்பிய கால்பந்து போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் பலம் வாய்ந்த செக் குடியரசு அணியை 1–0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இறுதிக்கு தகுதி பெற்றது கிரீஸ் அணி. கிரீஸ் அணி இறுதிக்கு தகுதி பெற்ற மகிழ்ச்சியை கொண்டாடும் கிரீஸ் கால்பந்தாட்ட ரசிகை.

# தமிழர் கலாசாரத்திற்கு விடிவினைத் தரும் ஏ-9 பாதை

## விவாதஅரங்கு - 3

## விவாதம் - 6




**ஏ-9 பாதை தமிழர் கலாசாரத்திற்கு விடிவைத் தருமா? அல்லது அழிவைத் தருமா? என்ற விவாத அரங்கிற்கு திருமதி ர.இரகுநாதன் விடிவைத் தான் தருகிறது என்று தன் வாதத்தினை முன்வைக்கிறார்.**

திருமதி ர.இரகுநாதன்
அரியாலை

தமிழர் கலாசாரத்திற்கு ஏ-9 பாதை அழிவினைத் தருகிறது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு வாதமாகும். இப்பாதை போரினாலேயே மூடப்பட்டிருந்தது. இந்த ஏ-9 முக்கியமாக வடக்கை இலங்கையின் மற்றைய் பாகங்களோடு இணைக்க உதவும் அத்தியவாசியமான பாதையாகும்.

முக்கியமாக 1983ஆம் ஆண்டு நடந்த இனக்கலவரத்திற்கு முன்பு குடாநாட்டிலுள்ள அநேகர் இலங்கையின் மற்றைய இடங்களில் தொழில் புரிந்து கொண்டிருந்தது மட்டுமல்லாமல் பெரும் பதவிகளையும் வகித்து கொண்டிருந்தனர். அன்றைய இளைய சமுதாயமும் தமது முன்னேற்றத்திற்காக தலைநகரில் தொழில் புரிந்து கொண்டு தங்கள் தொழில் சார்ந்த கல்வியையும் படித்தார்கள். அப்போது வீடுமுறைகளில் தமது பெற்றோர் குடும்பத்தினரிடம் அடிக்கடி வந்து போவது வழக்கம். அவ்வேளை சந்தர்ப்பங்களும் அதிகம் இருந்தன. இருந்த போதும் கலாசாரத்தை அழிய மக்கள் விடவில்லை. ஆனால் இப்போது மட்டும் அழிகிறதே அதற்கு ஏ-9 பாதையா காரணம். இல்லவே இல்லை.

அப்போது வெளிநாடுகளில் நம் மக்கள் தஞ்சம் புகவில்லை. அதனால் வெளிநாட்டுப்பணம் இங்குவர சந்தர்ப்பமும் இருக்கவில்லை. எல்லோரும் தாங்களே கஷ்டப்பட்டு பொருளாதாரத்தை இங்கேயே தேடிக்கொண்டார்கள். அதனால் வீணாண செலவுகளை செய்யவுமில்லை, நேரத்தை வீணடிக்கவுமில்லை. ஆனால் தற்போது நிலைமை மாறிவிட்டது. புலம் பெயர்ந்து வெளிநாட்டில் வாழும் நம் மக்கள் அங்கு குளிரில் கஷ்டப்பட்டு உழைத்து தமது உறவினர்கள் முன்னேறுவதற்காக பணத்தை அனுப்புகிறார்கள். ஆனால் இங்குள்ள இளம் தலைமுறையோ இலவசமாகக் கிடைக்கும் பணத்தின் பெறுமதியை விளங்கிக் கொள்ளவில்லை. பெண்பிள்ளைகள் பல ஆயிரங்களைச் செலவு செய்து மேற்கத்திய பாணியிலும், பாகிஸ்தான் உடையிலும் பவனி வருகின்றார்கள். இளைஞர்களோ உழைப்பின் அவசியத்தையும் அதன் அருமையையும் உணரத் தவறிவிடுகிறார்கள். கேளிக்கையிலும், மதுவிலும் வேறு தகாத செயல்களுக்கும் பணத்தை செலவழித்து வீணாக்குகிறார்கள். அது மட்டுமா? நேரத்தையும் சரியான முறையில் பயன்படுத்தாமல் வீணடிக்கிறார்கள். இதுவே கலாசாரம் அழியக் காரணமாக இருக்கின்றது.

கடந்த இரு ஆண்டுகளின் முன்னர் பாலியல் துன்புறுத்தல், கொலை, கொள்ளை நடைபெறவில்லையா? நோய்கள் பரவவில்லையா? பின் எவ்வாறு ஏ-9 பாதை திறந்த பின்னர் தான் இவை எல்லாம் தமிழர் கலாசாரத்தினுள் புகுந்து சீரழிக்கின்றன என்று கூறலாம்.

எந்த இனமாக இருந்தாலும், அதன் கலாசார வளர்ச்சிக்கும் சீரழிவிற்கும் அந்நாட்டின் அரசியல் நிலைமைகளே காரணமாகயிருக்கின்றன. அந்த வகையில் நம் நாட்டைப் பொறுத்த மட்டில் நெடுங்காலமாக நிலவி வரும் இனப்பிரச்சினைகள் இன்று ஓரளவு சுமுகமான நிலையிலே சென்று கொண்டிருக்கின்றன.

உள்நாட்டவரும், வெளிநாட்டவரும் சமாதான நடைமுறைகளை முன்னெடுத்துச் செல்லவும் பேச்சுவார்த்தைக்கும் வழிகோலியது. இந்த ஏ-9 பாதையே என்பதை யாராலும் மறுக்க முடியாததே.

மக்கள் தத்தமது வீடுகளில் குடியிருக்க தமது கலாசாரத்தைப் பேணும் செயற்பாடுகளில் ஈடுபட பெரிதும் வழிகோலிய ஏ-9 பாதை தன்னூடாக பல முன்னேற்ற கரமான செயற்பாடுகளையும் கொண்டுள்ளன. போர்க்காலச் சூழலின் போது பாதை அடைபட்டு இருந்த காலங்களில் தமிழர் வாழ் பிரதேசங்களில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் இன்று அகற்றப்படுவதும், அதனால் கைவிடப்பட்டிருந்த பல பிரதேசங்கள் பாவனைக்குட்படுத்தப் பட்டிருப்பதையும் காணமுடிகிறதல்லவா? பெருந்தெருக்கள் சொந்தம் கொண்டாடிய கனரகவாகனங்கள் கூட தமிழர் மண்ணினுள் கால் பதித்துள்ளன.


இவையனைத்தும் ஏ-9 தந்த வரப்பிரசாதமே.

எல்லோரும் ஏ-9பாதை கலாசாரத்திற்கு அழிவைத்தான் தருகின்றது என்று கூறுகின்றார்கள். ஆனால் இலங்கையை ஆங்கிலேயர் ஆண்ட காலத்திலிருந்தே பழக்க வழக்கம், கலை, பண்பாடுக் கோலங்கள், கலாசாரம் என்பன பலமாறுதல்களைக் கொண்டன என்பதை யாராலும் மறுக்கமுடியாது. இனப்பிரச்சினைகள் காரணமாக பாதைதான் தடைப்பட்டதே தவிர, மக்களின் ஆங்கிலமோகமும் நவநாகரிக கலாசாரமும் தடைப்படவில்லையே. பின்னர் பாதை திறந்த போது எங்கிருந்து அழிவுகள் புதிதாக முளைத்தன, இதனை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்?

ஆரம்பகாலம் தொடக்கம் இன்று வரை சிறப்புக்களும் சீரழிவுகளும் எம் நாட்டில் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஏ-9 பாதை திறந்த பின்னர்தான் அழிவுகள் புதிதாக ஏற்பட்டன என்று ஒரு போதும் கூற முடியாது.


**அன்பு வாசகர்களே!**
**ஏ-9 பாதை தமிழர் கலாசாரத்திற்கு விடிவைத் தருமா? அல்லது அழிவைத் தருமா? என்ற தலைப்பிலான விவாத அரங்குற்கான தீர்ப்பை எதிர்வரும் 08.07.2004 (வியாழன்) அன்று ஈழத்தின் பிரபல எழுத்தாளர் பொன். கணேசமூர்த்தி (முகாமையாளர் மக்கள் வங்கி காங்கேசன் துறை கிளை) முன்வைப்பார்.**

# தமிழீழ தடகளப் போட்டி இரண்டாம் நாள் பதிவுகள்













(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## கணிதம் பகுதி II தொடர்ச்சி

3. சார்பு $y = (x-3)^2 - 1$ இன் வரைபை வரைவதற்கான $x, y$ ஆகியவற்றின் பெறுமானங்களைக் கொண்ட பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| $x$ | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| $y$ | 8 | - | - | - | 0 | 3 | 8 |


(a)(i) மேலே உள்ள அட்டவணையில் இருக்கும் வெற்றிடங்களை நிரப்புக.
(ii) வரைபுத்தாளில் $x$ அச்சு வழியேயும், $y$ அச்சு வழியேயும் ஓர் அலகை வகைக் குறிப்பதற்கு 10 சிறு பிரிவுகளைக் கொண்ட அளவிடையைத் தெரிந்தெடுத்து சார்பின் வரைபை வரைக.
(b) உமது வரைபிலிருந்து
(i) சமச்சீர் அச்சின் சமன்பாட்டைத் தருக.
(ii) சார்பு மறையாக இருக்கும் $x$ இன் பெறுமானங்களின் வீச்சைக் காண்க.
(iii) சார்பின் இழிவுப் பெறுமானத்தை எழுதுக.
c அதே வரைபுத் தாளில் ஏற்ற ஏகபரிமாண வரைபு ஒன்றை வரைந்து சமன்பாடு $(x-3)^2 - 1 = \frac{1}{2}x + 1$ என்னும் சமன்பாட்டின் மூலங்களைக் காண்க.

9.
(a) படைப்பிரிவு ஒன்றுக்கு அலுவலர்களைத் தெரிவு செய்வதற்கு நடாத்தப் பட்ட நேர்முகப்பரீட்சை ஒன்றில் விண்ணப்பக்காரர்களுடைய நிறைகள் கிட்டிய Kg இல் அளவிடப்பட்டது. பெறப்பட்ட தகவல்கள் பின்வரும் அட்டவணையிலே தரப்பட்டுள்ளன.

| விண்ணப்பக்காரர்களின் நிறை (Kg) | 55-57 | 58-60 | 61-63 | 64-66 | 67-69 | 70-72 | 73-75 | 76-78 |
|---|---|---|---|---|---|---|---|---|
| விண்ணப்பக்காரர்களின் எண்ணிக்கை(மீடிறன்) | 2 | 6 | 16 | 18 | 21 | 12 | 3 | 2 |


(i) விண்ணப்பக்காரர்களின் நிறையின் இடைய வகுப்பு யாது?
(ii) ஆகார வகுப்பின் நடுப்பெறுமானத்தை எடுகொண்ட இடையாகக் கொண்டு விண்ணப்பக்காரர்களின் இடை நிறையைக் கணிக்க.
(iii) படைப்பிரிவுக்கு 64kg இலும் குறைந்த நிறையை உடையவர்கள் தெரிவு செய்யப்படவில்லை எனின், தெரிவு செய்யப்படாத விண்ணப்பக்காரர்களின் சதவீதத்தைக் காண்க.
b பெட்டி ஒன்றிலே ஒரே அளவுள்ள ஒரே வகையான் 2 பச்சை மாபிள்களும், 4 சிவப்பு மாபிள்களும் உள்ளன. இப்பெட்டியிலிருந்து மாபிள் ஒன்றை எழுமாறக வெளியே எடுத்து, அதனை மறுபடியும் பெட்டிக்குள் இடாமல், அதிலிருந்து வேறொரு மாபிள் எழுமாறாக வெளியே எடுக்கப்படுகின்றது.
(i) இங்கு மாதிரி வெளியைத் தெக்காட்டுத் தளத்தில் வகைக் குறிக்க.
(ii) வெளியே எடுக்கப்பட்ட மாபிள்கள் இரண்டும் பச்சை நிறமாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.
(iii) வெளியே எடுக்கப்பட்ட மாபிள்களில் ஒன்று பச்சை நிறமானதாகவும், மற்றையது சிவப்பு நிறமானதாகவும் இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

10.
(a) மட்டமான தரைமீதுள்ள h மீற்றர் உயரமுடைய AB என்னும் நிலைக்குத்தான கோபுரம் ஒன்றின் மிக உயர்ந்த புள்ளி Bஐ P என்னும் புள்ளியிலுள்ள நோக்குநர் ஒருவர் $60^0$ ஏற்றக் கோணத்திற் காண்கிறார். A யிலிருந்து P இன் தூரம் $x$ மீற்றராகும். P இற்கு நிலைக்குத்தாக மேலே 20 m உயரத்திலுள்ள புள்ளி Q இலிருந்து B இன் ஏற்றக்கோணம் $45^0$ ஆகும்.




(i) உருவில் காட்டியவாறு வரிப்படமொன்றை வரைந்து அதிலே இத்தரவைக் காட்டுக.
(ii) $x$ இற்கும் h இற்கும் இடையிலுள்ள தொடர்பைக் காட்டும் இரு சமன்பாடுகளை எழுதுக.
(iii) கோபுரத்தின் உயரம் h ஐக் கணிக்க
(iv) P இலிருந்து கோபுரத்தின் தூரம் $x$ ஐக் காண்க.

b) தரப்பட்ட உருவில் ABC ,ADC என்பன AC ஐப் பொதுப் பக்கமாகக் கொண்ட இரு முக்கோணிகளாகும். P,Q,Y,X என்பன முறையே AB, BC, CD, DA ஆகிய பக்கங்களின் நடுப்புள்ளிகளாகும். PQ = XY என நிறுவுக.




## க.பொ.த. (சாதாரண) தரம் விடைகள் கணிதம் I

1. 110/-
2. 0.99
3. 25%
4. $xy\ (y-x)$
5. n(A) = 5
6. 0.0068
7. $x = 130^0$
8. (p-5) மாபிள்கள்
9. ரூபா 600/-
10. $\frac{x}{6}$
11. 13/15
12. 5
13. 6 abc
14. 5
15. 6
16. ரூபா 10/-
17. $\frac{3}{x-y}$
18. $180^0$
19. x = (-3)
20. 5
21. $42cm^2$.
22. a= 2
23. (i) 2 (ii) -1 (iii) $2x-1$
24. BX, AX, CX
25. (i) 12 cm (ii) 7 ½ cm
26. (i) ½ பங்கு (ii) 120 ரூபா (iii) ரூபா 240/-
27. ரூபா 880,000/=
28. $x = -2$ or $x = -1$
29. 30 cm
30. A இன் ஒழுக்கானது பக்கம் BC இற்குச் சமாந்தரமாக, BC இலிருந்து உச்சி A இன் பக்கமாக ,7 cm தூரத்தில் இயங்கும் ஒரு நேர்கோடாகும்.

### நலன்புரி நிலையங்களில் வசித்த

# 300 குடும்பங்களை குடியமர்த்த ஏற்பாடுகள்

(வவுனியா)
வவுனியா நலன்புரி நிலையங்களில் வசித்து வரும் 300 குடும்பங்களை செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் குடியமர்த்து வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக வவுனியா மாவட்டஅரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள 6 நலம் புரி நிலையங்களில் சுமார் 9ஆயிரம் இடம் பெயர்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

யுத்த காலத்தில் இடம் பெயர்ந்து பல வருடங்களாக நலன்புரி நிலையங்களில் வாழும் இவர்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்வதற்கு எவ்வித தடையுமில்லை.

அவ்வாறு சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல விரும்புவர்களை அவர்களது இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, சொந்தக் காணி இல்லாத இராணுவக் கட்டுப்பாடற்ற வவுனியா,கிளிநொச்சி ,முல்லைத் தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் குடியேற விருப்பம் கொண்டு விண்ணப்பித்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.
(உ-61,10)

# ஆங்கிலக் கல்வியைத் தரமுயர்த்த ஜீ. ரீ. சற். நிறுவனம் நடவடிக்கை

(திருகோணமலை)
வடக்கு- கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு ஏதுவாக ஆங்கிலம் கற்பித்தலில் ஆர்வம் உள்ள ஆசிரியர்களுக்கு பயிற்சிகளை வழங்க ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் முன்வந்துள்ளதாக வடக்கு- கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கு -கிழக்கு பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்களுக்கான பற்றாக் குறை கூடுதலாக காணப்படுகின்ற போதிலும் உடனடியாக இந்த வெற்றிடங்களை நிரப்பும் வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன.

இதனைக் கருத்தில் கொண்டு தற்போது சேவையிலுள்ள நிரத்தர ஆசிரியர்களில் ஆங்கிலம் கற்பிக்க ஆர்வம் உள்ளவர்களுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
(உ)

# 30 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க்வது உறுதி

### உறுதிப்படுத்துகிறார் பிரதி நிதியமைச்சர்

(கொழும்பு)
பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான திட்டம் குறித்து மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களை பரப்ப ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் ஹேமல பிட்டிய குற்றஞ்சாட்டியுள்ளார்.

இத்தகைய நாசகார நடவடிக்கைகள் முறியடிப்பதன் மூலம் அரசியல் இலாபம் தேடுவோருக்கு நல்ல பாடம்படிப்பிக்க நாட்டில் உள்ள புத்திஜீவிகள் அனைவரும் அணிதிரள வேண்டும்.

பட்டாரிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் அமுல் செய்யப்பட்டு வருகின்றது.தீறைசேரி அதிகாரிகள் இப்பொழுது இத் திட்டம் குறித்து பரிசீலனை செய்து வருகிறார்கள்.இந்தத் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு 56 அயிரம் பட்டதாரிகள் விண்ணப்பங்களை அனுப்பிவைத்துள்ளார்கள் என்று தெரிவித்துள்ள பிரதி அமைச்சர்,

தற்போது எந்த வேல்வாய்ப்பும் இல்லாமல் இருக்கும் பட்டதாரிகள் இத் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்புப்பெற விண்ணப்பிக்குமாறு கேட்டுள்ளதுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அளித்த வாக்குறுதிப்படி 30 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று கூறியுள்ளார்.
(உ)

# மக்களுக்கான சேவையைத் தொடர மாகாண சபைகளைப் பயன்படுத்துவோம்

### பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உரை

(கொழும்பு)
நாட்டில் வாழும் மக்களின் பிரச்சினைகளுக்கு வெற்றிகரமாக தீர்வு காண்பதன் முலமே ஐக்கி மக்கள் சுதந்திர முன்னணிக்கு 13வதுபாராளுமன்றத் தேர்தலில் கிடைத்துள்ள மக்களின் அங்கிகாரத்தை மேலும் வலுப்படுத்த முடியும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



யட்டிநுவர பகுதியில் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முக்கியஸ்தர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும் கருத்துரைக்கையில், மக்களுக்கான இந்தசேவையினை பரந்தளவில் மேற்கொள்வதற்கு மாகாண சபைகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலில் ,அனைத்து மாகாணங்களுக்கான அதிகாரத்தையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே பெறவேண்டும்.இதற்காக அனைவரும் அர்ப்பணிப்புடனும் தியாகத்துடனும் செயறபடவேண்டும். ஒழுக்கம் மற்றும் நீதியான அரசியல் மூலம் தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அனைவரினதும் உதவியினைப் பெற்றுக் கொள்ளலாம் என பிரதமர் மேலும் தெரிவித்தார்.
(உ_121)

### அரச அச்சகத்தில் தீ விபத்து அசண்டையீனமே காரணம்

(கொழும்பு)
அரசாங்க அச்சகத்தில் ஏறபட்ட தீ விபத்துக்கு அதிகாரி ஒருவரின் கவலையீனமே என்று கண்டறியப்பட்டுள்ளது. தீ விபத்துத் தொடர்பான வசாரணைகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில இன்று விசாரணை அறிக்கைகிடைக்கப் பெறும் என்று அரச அச்சகத் தலைவர் தெரிவித்துள்ளார்.

பகுப்பாய்வுத் திணைக்களமும் குற்றப் புலனாய்வு திணைக்களமும் இது தொடர்பான விசாரணை மேற்கொண்டன. பொறுப்பு வாய்ந்த அதிகாரி ஒருவரின் கவலையீனத்தால் இத் தீ விபத்து நேர்ந்துள்ளது .விசாரணை அறிக்கைகிடைத்ததும் அதிகாரி மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
(உ)

# கரும்புலிகள் தினத்தை ஒட்டி நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள்

(வடமராட்சி)

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு வடமராட்சி கிழக்கில் தமிழீழக் கல்விக் கழகத்தின் அனுசரணையுடன் வடமராட்சிக் கல்விக் கழகமும் கடற்புலிகளும் இணைந்து நடாத்திய போட்டிகளில் வெற்றியீட்டி பரிசில் பெறும் மாணவர்களின் விபரங்கள் வருமாறு,

**எழுச்சிப்பாடல் (தரம் 1,2,3)**

1 ஆம் இடம்:-கெ.பிரின்ஸ்ரன் - செம்பியன்பற்று றோ.க.த.க. பாடசாலை, 2ஆம் இடம்:- அ.ஆர்த்திகா-மருதங்கேணி இ.த.க.பாடசாலை, 3ஆம் இடம் :-ம.நிலாணி - மாமுனை அ.த.க. பாடசாலை

**பேச்சுப்போட்டி பிரிவு -I (தரம் 4,5)**

1ஆம் இடம்:-ஏ.அனந்தா - செம்பியன் பற்று அ.த.க பாடசாலை, 2ஆம் இடம்:-டே.களப்பிரசா- செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை, 3ஆம் இடம் :-த.மயூரிகா -உடுத்துறை மகாவித்தியாலயம்.

**பிரிவு - II (தரம் 6,7)**

1ஆம் இடம் :- ம.மேரிஸ் ரெலிக்கா- செம்பியன் பற்றுறோ.க.த.க. பாடசாலை ,2ஆம் இடம்:- கோ.பவுஸ்ரீனா -வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், 3ஆம் இடம் :-ஜே.பிரசாந்தி- செம்பியன் பற்று அ.த.க பாடசாலை.

**பிரிவு - III (தரம் 8,9)**

1ஆம் இடம்:- ஜெ.தினேஸ் - உடுத்தறை மகாவித்தியாலயம். 2ஆம் இடம்:- கி.றெஜிப்பிரியா- வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம். 3ஆம் இடம் :- சி.கலைமதி - ஆழியவளை சீ.சீ.ரீ.எம். பாடசாலை. (உ-52)

# தேசிய கலைக்கழக செயற்பாடுகள் பகிர்வு

(கொழும்பு)

தேசிய கலைக்கழகச் செயற்பாடுகள் 5 உப சபைகளிடம் பகிர்ந்தளிக்கப்பட்வுள்ளதாக கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சர் எச்.எம். விஜிதஹேரத் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில் எதிர்வரும் காலங்களில் இலக்கியம், சங்கீதம் ,ஓவியம், நாடகம், நடனம் ஆகிய துறைகளின் கலைக்கழகங்கள் 5 உப சபைகள் ஊடாகவே செயற்படவுள்ளன.

5 உப சபைகளையும் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

இதேவேளை, தேசிய கலைக் கழகம் ஒரு சுயாதீன நிறுவனமாக செயற்படும் வகையில் அதனை கொழும்பு - 07 இல் உள்ள கலாபவனத்தில் மீண்டும் செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-60,10)

# மேற்குலக மருந்துகளின் விலைகள் கட்டுப்படுத்துகை

(கொழும்பு)

நாட்டில் விற்பனைக்கிடப்படும் மேற்குலக நாடுகளின் மருந்து வகைகளின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுத்துள்ளதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இதன் முதல் கட்டமாக மேற்குலக நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மருந்து வகைகள் அனைத்தும் அத்தியாவசியப் பாவனைப் பொருட்களாக பிரகடனம் செய்யப்படவுள்ளன.

மேற்குலக நாடுகள் தமது மருந்துப் பொருட்களின் விலைகளை உயர்துவதானால் பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையுடன் தொடர்பு கொண்டு அது பற்றிப் பேசவேண்டும் என்றும்,

மேற்குலக நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மருந்துப் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்துவதற்கான அதிகாரம் பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே மேலும் தெரிவித்துள்ளார். (உ-60,10)

# இலங்கை பறவைகள் பட்டியலில் புதியவகை ஆந்தை இணைப்பு

இலங்கையின் பறவைகள் பட்டியலில் ஒரு புதிய வகை ஆந்தையொன்று சேர்க்கப்பட்டிருப்பதாக உலக வனவிலங்கு பாதுகாப்பு அமைப்பு 'பேட்லைப் இன்ரநசனல்' அறிவித்துள்ளது.

1868 க்குபின் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட இப் பறவைக்கு 'செரன்டிப் ஸ்சொப்ஸ்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த ஆந்தை சிறியது. வால் குறுகியது. கண்களின் நிறம் மஞ்சளாகவோ செம்மஞ்சளாகவோ இருக்கிறது, பால் வேறுபாடு இக் கண்களின் நிறங்களில் உள்ள வித்தியாசத்திற்குக் காரணமாகும். செவிமடல்கள் இல்லை. முகம் செவ்வையான வட்ட அமைவாக இல்லை. காலின் கீழ் அரைப் பகுதிக்கே சிறகுகள் உள்ளன.

இதனை முதன் முதலில் அவதானித்தவர் தீபவ் வரக்ககொட என்பவராவார். 1995 இல் கித்துல் கல காட்டில் இது அவதானிக்கப்பட்டிருந்தது. (உ-6)


க.பொ.த.(சா.த) மாணவர்களே!

வலம்புரியில்

தொடர்ந்து பயிற்சி

வினாத்தாள்கள்

வெளிவருகின்றன.


## தளபாடப் பற்றாக்குறை நீங்கியது

(பருத்தித்துறை)

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவியினால் பருத்தித்துறை தும்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலையில் 5 இலட்சம் ரூபா செலவில் வகுப்பறைகளைக் கொண்ட மாடிக்கட்டடமொன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் சுமார் 2இலட்சம் ரூபா பெறுமதியான, மாணவர்களுக்கான 60 மேசைகள், 60 கதிரைகள் மற்றும் ஆசிரியர்களுக்கான 10 மேசைகள் ,10 கதிரைகளையும் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் இப் பாடசாலைக்கு வழங்கியுள்ளதாகவும் இதனால் இப் பாடசாலையில் நிலவிவந்த வகுப்பறைகள், தளபாடப் பற்றாக்குறைகள் நீங்க வழியேற்பட்டுள்ளதாகவும் பாடசாலை அதிபர் எஸ். வடிவேலு தெரிவித்தார். (உ-52)

## உள்ளூராட்சி வார செயற்றிட்டங்கள்

(பொன்னாலை)

இம் மாதம் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ள உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலி-மேற்குப் பிரதேசசபை பகுதிக்குட்பட்ட இடங்களில் செயற்றிட்டங்கள் பல அமுல்படுத்தப்படவுள்ளன.

விளையாட்டுப் போட்டிகள், மரம் நடுகைகள், சிரமதானங்கள் மற்றும் சுகாதாரக்கருத்தரங்குகள் எனப் பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (உ-49)

## குளிர்பான உரிமையாளர் தாக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவ காலத்தின் போது அங்கு குளிர்பான நிலையம் நடாத்திவந்த ஒருவரை கடற்படையினர் மிகவும் மோசமாகத் தாக்கியுள்ளனர்.

இச் சம்பவம் குறித்து நயினாதீவு மக்கள் விடுதலைப் புலிகளிடம் முறையிட்டுள்ளனர்.

குளிர்பான நிலையத்தில் புரட்சிக் கானங்கள் ஒலிக்கப்பட்டதாலேயே இவர் தாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சலன சித்திரம் - யாழ்ப்பாணம் அங்கத்தவர்களிற்கும் சம்மேளனத்திற்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க் கிழமை மு.ப 10.30மணிக்கு நெல்லியடி கிறிஸ்ரல் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் ஸ்தாபகரும்,தேசியத்திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகிய க.தேவதாசன் கலந்து கொண்டு புதிய நடைமுறைகள் தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளார். (உ-2)

## சூழல் பாதுகாப்புக் குழுக் கூட்டம்

(காரைநகர்)

காரைநகர் பிரதேச செயலர் பிரிவின் சூழல் பாதுகாப்புக் குழுக் கூட்டம் இன்று மு.ப 10.00மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-246)

## மாடிக்கட்டடம் அமைப்பு

(மருதங்கேணி)

புலோலி மேற்கு தம்பசிட்டி மெதடிஸ் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு ஜி.ரி.சற் நிறுவனத்தின் உதவியுடன் 5 இலட்சம் ரூபா செலவில் மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

2 இலட்சம் ரூபா பெறுமதியான கதிரை,மேசைகளும் இப் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-35)

## கரும்புலிகள் திருநாளாம் இன்று - அவர் பெருமைகளை உரைப்போம் நன்று

### காலத்தால் அழியாத காவிய நாயகர்கள்

இவர்கள் எங்கள் வீட்டுப் பிள்ளைகள்
என்றும் இவர்கள்
எம்முடனே நின்றவர்கள்
காத்தல் தொழிலை செய்து வந்த
எம் கண்கண்ட தெய்வங்கள்
நாம் விழிகளால் தரிசித்த
விஷ்ணு பிரான்கள்
காலம் அழிந்தாலும்
காலத்தால் அழியாத
காவிய நாயகர்கள்

- புதுக்கவி

### கரும்புலிகள் காலத்தின் கலங்கரைகள்

மண்ணிலே மறைந்துவிட்ட
புகழ்மங்கா வீரர்களே ~ கரும்
புலியாகிப் புவி மீதில்
உலவுகின்றீர் நீங்களே !

தாயின் மடியில் தவழவில்லை ~ நீர்
தமிழ் தாயின் மடியில் உயிர்துறந்தீர்
எதற்கும் குனியாத் தலைவனும்
உமக்காய் மட்டும் தலைகுனிவான்

மெழுகாக உருகித் திரியாகக் கருகி
நாடே விடிவு பெற உமை உருக்கி
ஒளியாக சுடர் விட்டீர் எமக்காக
அணையாத சுடராக ஒளிவீசிடுவீர்

கரும் புலியாகி தாய் மண்ணில்
பெரும் ஒளியாக நீரென்றும்
அரும் வழியான சமாதானம்
தரும் தருவாக வாழ்வீரே

கு.றசிகலா
வண்ணார் பண்ணை

### எம் தேசப்புயல்களே...

இந்த இரும்பு மனிதர்களால்த்தான்
எங்கள் தேச விடுதலையின் இருப்பில்
இன்னமும் எமக்கு நம்பிக்கை இருக்கிறது
இவர்கள் நெஞ்சில் சுமப்பது
வெடிகுண்டுகள் மட்டுமல்ல - தாய்
மடிமீது கொண்ட பற்றையும்தான்
அதனால்த்தான் இவர்கள் சிதறிய பிறகும்
எங்கள் மனங்களுக்குள் உறுதி உறைவிடங்களாய
உலா வருகின்றார்கள் - இவர்கள்
உயிரிற்கு நேரம் குறித்து உடலை பிய்த்தெறியும்
பூலோக பிரமாக்கள் - மரண அகராதியை
திருத்தி எழுத வைத்த மாணிக்கங்கள்
அந்த புன்னகைக்குள் இவர்களால் மட்டும்
எப்படி ஒரு பூகம்பத்தையே மறைத்து
வைத்திருக்க முடிகின்றது...?

வேல்நந்தன்
யாழ். பல்கலைக்கழகம்.

## இன்று ஒரு தகவல்

# காலம் தவறாமை

மக்கள் நடமாட்டம் அதிகமில்லாத ஒரு சாலையில் காந்திஜி ஒருநாள் வேகமாக நடந்து போய்க் கொண்டிருந்தார். குஜராத் வித்தியாபீடத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நடக்கப்போகிறது. அதில் காந்தியும் கலந்து கொள்ளவேண்டியிருந்தது. அவரை அழைத்துக் கொண்டுவர உரியநேரத்தில் வாகனம் வந்து சேரவில்லை.

வாகனம் வரவில்லை என்று தெரிந்ததும் காந்தியடிகள் சபர்மதி ஆச்சிரமத்தில் இருந்து கால் நடையாகவே புறப்பட்டுவிட்டார். ஆச்சிரமத்திற்கும் வித்தியாபீடத்திற்கும் அதிக தூரம். தெருவில் மக்கள் நடமாட்டமில்லை. அதனால் வாகனம் கிடைப்பதற்கும் வழி இல்லை.

அதனால் நடந்தே புறப்பட்டுவிட்டார். சிறிது தூரம் போயிருப்பார். அப்போது ஒருவர் கதர் உடை போட்டிருந்தவர் சைக்கிளில் போய்க்கொண்டிருந்தார். அவரிடம் காந்திஜி "நான் வித்தியாபீடத்திற்குப் போக வேண்டும் உங்கள் சைக்கிளைத் தருகிறீர்களா?" என்றார். அவர் உடனே சைக்கிளைக் கொடுத்தார்.

காந்தியடிகள் எப்போதோ தென் ஆபிரிக்காவில் இருந்த காலத்தில் சைக்கிள் ஓடிப்பழகினார். இந்தியாவில் அதற்குச் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. இப்போது தான் அதற்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. சைக்கிளில் ஏறி குறித்தநேரத்திற்கு அந்தக் கூட்டத்திற்கு வந்து சேர்ந்துவிட்டார்.

முழுத்துண்டு அணிந்து கொண்டு திறந்த உடலுடன் சைக்கிளில் ஏறி காலம் தவறாமல் சரியான நேரத்திற்கு வந்து சேர்ந்த காந்தியடிகளைப் பார்த்து எல்லோரும் ஆச்சரியப்பட்டனர்.

காலம் தவறாமை என்பது ஒரு சிறந்த பண்பு. அது எல்லோருக்கும் சுலபமாக வந்து விடாது. "என்னப்பா நேற்று கூறினேனே அந்தக் காரியம் என்னவானது?" என்று கேட்டால் "அதற்குள் ஏன் அவசரப்படுகிறாய்? நாளைக்குப் பார்க்கலாம்" என்று கூறுபவர்கள் தான் நம்மில் அதிகம்.

அமெரிக்க ஜனாதிபதி வாஷிங்டனுடைய செயலாளர் ஒருவர் ஒருநாள் காலதாமதமாக வந்தாராம். ஏன் லேட் என்று கேட்டிருக்கிறார். எனது கடிகாரம் மிகவும் மெதுவாக ஓடியிருக்கிறது அது தான் காரணம் என்றாராம். இதற்குப் பரிகாரம் என்னவென்றால் ஒன்று நீங்கள் உங்களுடைய கைக்கடிகாரத்தை மாற்ற வேண்டும். அல்லது நான் எனது செயலாளரை மாற்றவேண்டும் என்றார். ஜனாதிபதி.

கான் அப்துல்கபார் கான் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? வர்தாவில் நான் தங்கியிருந்தபோது காந்திஜி குறித்த நேரத்தில் அலுவல்களை செய்து முடித்தமை என்னை மிகவும் கவர்ந்தது. சாப்பிடுவது, நடப்பது, பிரார்த்தனை செய்வது, தூங்குவது. குறித்த நேரத்தில் செய்து முடித்து விடுவார் என்கிறார். "நான் எங்கே போனாலும் குறிப்பிட்ட நேரத்திற்கு கால் மணி நேரம் முன்பாகவே போய்விடுவது வழக்கம். அந்தப் பழக்கம் தான் என்னை மனிதனாக்கியுள்ளது என்கிறார் நெல்சன்.

மூன்று மணித்தியாலம் முன் கூட்டியே போனாலும் போகலாம். ஒரு நிமிடம் கூட பின் தங்கிவிடக் கூடாது என்கிறார் ஷேக்ஸ்பியர். இந்தியாவுக்கு விடுதலை கிடைத்த சமயத்தில் டாக்டர் ராதாகிருஷ்ணர் என்ன சொன்னார் தெரியுமா? இன்று இரவு நமக்குச் சுதந்திரம் கிடைக்கப் போகின்றது. நாளையிலிருந்து நாம் செய்யும் தவறுகளுக்கு ஆங்கிலேயர்கள் மீது பழி போட முடியாது என்றார். எல்லாம் சொல்லி என்ன பிரயோசனம்? இப்போதெல்லாம் காலம் தவறாமை சம்பந்தமாக யார் கவலைப்படுகிறார்கள்.

ஒருவர் அப்படித்தான் அவசரமாக அலுவலகம் புறப்பட்டார். அலுவலகத்திற்கு நேரமாகி விட்டது. சீக்கிரம் சாப்பாட்டை வை என்றார். இன்று சமையல் கொஞ்சம் தாமதமாகிவிட்டது. பழைய சோறு தான் உள்ளது அதனால் நீங்கள் பக்கத்தில் உள்ள உணவு விடுதியில் சாப்பிடுங்கள் என்றார் மனைவி.

இவர் கொஞ்சம் யோசித்தார். பின்பு சொன்னார். "சரி ஒன்று செய்கிறேன் முதலில் பழைய சோறு சாப்பிடுகிறேன். அதன் பின் உணவு விடுதிக்குப் போய் சாப்பிடுகிறேன். திரும்பி வருவதற்குள் உன் சமையல் முடிந்திருக்கும் அதைச் சாப்பிட்டு விட்டு அலுவலகம் செல்கிறேன்" என்றார்.

இவரெல்லாம் எந்தக் காலத்தில் அலுவலகம் போய்ச் சேர்வது?

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# உன்னதத்தின் உச்சத்தை எட்டிய கரும்புலிகளை நெஞ்சத்திலிருத்தி நினைவுகூருவோம்

## தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியத்தின் விடிவுக்காக,தமிழீழத் தாயகத்தின் முகிழ்ப்பின், பெருவெடிப்பாக,உயிராயுதமாக தம்மையே ஈகமாக்கி தமிழ் மக்களின் உணர்வுடன் ஒன்றிவிட்ட, உன்னதத்தின் உச்சத்தை எட்டிய கரும்புலிகளை நெஞ்சத்திலிருத்தி நினைவு கூரும் நாள் கரும்புலிகள்நாள். கரும்புலிகள் நாளை ஒட்டி தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும்,

எங்கெல்லாம் இலக்குகள் அமைகின்றனவோ, அங்கெல்லாம் இலக்குத்தவறாது,தமிழ் மக்களின் இருப்பை உறுதி செய்வதற்காக, அந்த இலக்குகளைத் தாக்கி அழிக்கும் உயர் திறனைக் கொண்ட கரும்புலிகளே தமிழீழ மக்களின் அபிலாஷைகளை எட்டுவதற்கான உயிராயுதங்கள்.

தமிழ் மக்களது அரசியல் அபிலாஷைகளைப் புறந்தள்ளி, சமாதானத்திற்கான நகர்வுகளைக் கேள்விக்குரியதாக்கி போரை நோக்கி பொருத்தமான அரிதாரப் பூச்சுக்களுடன் அரசு புறப்படத் தயாராகி விட்ட வரலாற்றுக் கட்டமிது.

இந்த வரலாற்றுக் கட்டத்தின் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு இடையறாத விழிப்புடன் தமிழ்த் தேசியத்தைக் காக்க தமிழ் மக்கள் அனைவருமே அணி திரளுவோம் - ஒரே தலைமையின் கீழ் -அணி திரளுகைக்கான பாதையில் கரும்புலிகள் ஒளிர் வழிகாட்டிகளாக விளங்குகிறார்கள்.

வரும் நாளைய நாள்,கரும்புலிகளை தமிழ் மக்கள் அனைவருமே நினைவுகூரும் புனிதநாள். இந்நாளில் கரும்புலிகளை நினைவுகூருவதற்கான நிகழ்வுகள் பரந்தளவில் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்புனித நாளில் கரும்புலிகள் நினைவுகூரும் நிகழ்வுகளில் தமிழ் மக்களை தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றுள்ளது. (உ)

# கரவெட்டி குடிநீர் விநியோக திட்டத்தை விரிவுபடுத்தக் கோரிக்கை

## சிவநேசன் எம்.பி.அரச அதிபருக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

1963 இல் அமுல்படுத்தப்பட்டு பின்னர் செயலிழந்து போயுள்ள கரவெட்டி நன்னீர் விநியோகத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துமாறும் அதன் அவசியத்தை வலியுறுத்தியும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதனுக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில்,

கரவெட்டி நன்னீர் வளம் மிகக் குறைந்த பிரதேசங்களில் ஒன்றாகும்.இக் குறைபாட்டை நீக்குமுகமாக 1963 ஆம் ஆண்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் மு.சிவசிதம்பரத்தின் பெரு முயற்சியால் கரவெட்டி நன்னீர் விநியோகத் திட்டம் அத்துளு எனும் பிரதேசத்தை மையப்படுத்தி அமைக்கப்பட்டு விநியோகமும் நடந்து வந்துள்ளது.

1963 இல் இவ் நன்னீர் விநியோகத்தை பயன்படுத்திய குடும்பங்கள் 4500 ஆகும். ஆனால் 40 வருடங்களின் பின் இப்பிரதேசத்தில் 10,000 குடும்பங்களைக் கொண்ட 50, 000இற்கு மேற்பட்ட மக்கள் பயன்பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தற்போதுள்ள திட்டம் 1-2மணித்தியால விநியோகத்தை மட்டும் நடைமுறைப்படுத்துவதால் இப் பிரதேச மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத அவல நிலையில், மக்கள் துன்பப்படுகின்றனர்.அத்துடன் கிடைக்கின்ற நீர் கடந்த காலத்தைப் போல அல்லாது சவர்த்தன்மை கொண்ட நீராக மாற்றம் அடைந்து வருவதும் ஆராய்வின் மூலம் உணரப்பட்டுள்ளது.

எனவே இப்பிரதேச மக்களின் அடிப்படைத் தேவையாக நன்னீர் விநியோக அவசியம் உருவாகியுள்ளதால் இவ்விடயத்தை ஓர் மிக முக்கியமான அடிப்படைப் பிரச்சினையாக கருதி 2004,2005ஆம் ஆண்டுகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன், வடக்கு -கிழக்கு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இத்திட்டத்தினையும் மிக முக்கிய திட்டங்களில் ஒன்றாகக் கருதி தெரிவு செய்து இப்பிரதேசத்தின் 50,000 இற்கு மேற்பட்ட மக்களின் திருப்தியான குடிநீர் விநியோகத்திற்கு சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள், நீர் வழங்கு சபைகள், அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் சிறந்த திட்டம் ஒன்றினைத் தயாரித்து, நீண்டகால நோக்கில் பிரதிப் பொது முகாமையாளர் வடகிழக்கு, பிராந்திய உதவி நிறுவனம் (வ.கி), தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை,திருகோணமலை ஆகியவற்றின் உதவியுடன் இத்திட்டத்தினை செயற்படுத் தித் தருமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக் கோரிக்கையை 28.06.2004அன்று நடைபெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடலிலும் அனைவரும் ஏற்று இதற்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளனர்.

எனவே,தங்களின் மேலான கவனத்தில் இத்திட்டத்தை எடுத்து விரைவான செயற்பாட்டின் மூலம் இப்பிரதேச மக்களின் நீண்டகாலமான அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்ட வழி செய்து உதவ வேண்டுமென இப் பிரதேச மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன் என்றுள்ளது.

(உ)

## இராசி பலன்

**05.07.2004**

(ஆனி 21, திங்கட்கிழமை)

திருவோணம் மு.ப.7.16 மணி வரை

திருதியை மு.ப.10.52மணி வரை

இராகுகாலம் 7.28-8.58 மணி வரை

சுபநேரம் 11.58-1.28 மணி வரை

அமிர்த சித்தம், சங்கடகர சதுர்த்தி விரதம்

**மேடம்**

நல்ல செய்தி, மேன்மை, செய்தொழில் விருத்தி, காரிய அனுகூலம்.

**இடபம்**

புதிய திட்டமிடல், இடமாற்றம், உடல் நலக் குறைவு, முயற்சி தாமதம்.

**மிதுனம்**

முயற்சி தடை, உடல்நலக் குறைவு, போசன சுகம், திருடர் பயம்.

**கடகம்**

வாக்கு மேன்மை, உறவினர் உதவி, கலந்துரையாடல், ஜனவசியம்.

**சிங்கம்**

தெய்வ சிந்தை, காரிய அனுகூலம், தேக நலன், நல்ல சம்பவம்.

**கன்னி**

முயற்சி தாமதம், சிறுவியாதி, குடும்பக் கவலை, பொருள்விரயம்.

**துலாம்**

பகைவர் நேசம், எடுத்த காரியம் தாமதம், கல்வியில் ஆர்வம், தனவிரயம்.

**விருச்சிகம்**

நண்பர் சந்திப்பு, பொருள் சேர்க்கை, சுவாரஸ்யம், தொழில் முயற்சி.

**தனுசு**

மாதர் நட்பு, அதிக வார்த்தை, காரிய தாமதம், தொழில் கஷ்டம்.

**மகரம்**

விருந்துபசாரம், நல்ல முயற்சி, நல்ல செய்தி, உடல் நலம்.

**கும்பம்**

தேக ஆரோக்கியம், காரிய தாமதம், சுப செலவு, அமைதிக் குறைவு.

**மீனம்**

காரிய அனுகூலம், போசன சுகம், பெருமை, பிறர் உதவி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## பல்கலை ஊழியரின் சம்பள

## முரண்பாட்டுத் தீர்வு பற்றி ஆராய்வு

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் சகல உத்தியோகத்தர்களுக்குமான சம்பள முரண்பாடுகளை நீக்குவது குறித்து அரசாங்கம் பரிசீலணை செய்து வருவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் இயங்கும் சகல தொழிற்சங்கங்களோடும் கலந்தாலோசனை செய்து இதற்கான திட்டத்தை தயாரிப்பதில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவும் ஈடுபட்டுவருகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பல்கலைக்கழகங்களின் கல்வி சார் உத்தியோகத்தர்களுக்கும் கல்வி சாரா உத்தியோகத்தர்களுக்கும் இடையிலான சம்பள முரண்பாடுகள் குறித்த மதிப்பீட்டு அறிக்கை ஒன்றைத் தயாரிக்கும் பொறுப்பை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ளதுடன், அதன் அறிக்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி அறிக்கையை ஆராய்ந்துவரும் ஆணைக்குழுவின் தலைவர், அறிக்கையில் காணப்படும் குறைபாடுகள் பற்றி தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடிய பின்னர் இறுதி அறிக்கை ஒன்றைத் தயாரிப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(உ-60,10)

இன்னாது இரக்கப்படுதல் இரந்தவர்
இன்முகங் காணும் அளவு - குறள்

# வலம்புரி

## உலகைத் திசை திருப்பிய உயிர்த் தியாகம்

இன்று ஜுலை 5. கரும்புலிகள் நாள். ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய திரு நாள்.

ஈழத் தமிழினம் வாழ்வதற்காக தங்கள் உயிரை ஆயுதமாக்கி, அர்ப்பணித்த மகத்தான தியாகத்தை மனித குலம் நினைந்துருகும் நாளும் இதுவே. உலக வரலாற்றில் எத்தனையோ விடுதலைப் போராடடங்கள் நடந்தேறியுள்ளன. அந்தப் போராட்டங்களின் பின்னால் இருக்கக் கூடிய தியாகங்கள் பற்றி வரலாறுகள் பேசுகின்றன..இறப்பிலும் தியாகிகளின் புகழ் பேசப்படுகின்றது.

இத்தகைய தியாகங்கள் அனைத்தும் ஒன்று திரண்டு தியாகத்தின் திரட்சியாக ஈழவிடுதலைப் போராட்டத்தில் கரும்புலிகளின் அர்ப்பணிப்பு அமைந்துள்ளது.

போராயுதங்களை உடலில் சுமந்து கொண்டு, தனது இறப்பை நேரம் குறித்து நிச்சயித்து விட்டு உறவுகள், நட்புகள் ஏன் இந்த உலகத்தின் மீது மனிதப் பிறவிகள் வைக்கக் கூடிய பற்றுகள் யாவற்றையும் துறந்து ஆகுதியாக்கப்படும் உயிர்த் தியாகம் எல்லையற்றது. அதனை மனித மொழிகளால் வியந்து பேசிவிட முடியாது.

இறைவா! இந்த உயரிய தியாகத்தைப் பேசுவதற்கு மட்டும் நீ வார்த்தைகளைத் தாராயோ என ஏங்குவதைத் தவிர எவ்வாறும் புகழ்ந்து பேசுவது புவிமொழியால் முடியாத காரியமாகும்.

தன் உடம்பில் போராயுதத்தைச் சுமந்து செல்கின்ற ஒவ்வொரு கணத்திலும் இதயத்தின் துடிப்பு இன்னும் சில நிமிடங்களில் நான் நின்றுவிடுவேன் என ஆயுதம் சுமப்போனுக்கு ஞாபகப்படுத்தும். அந்த ஞாபகத்தின் ஊடே பெற்ற தாய், தந்தை, சகோதரங்கள், கூடிக்குலாவிய நண்பர்கள் எதிரே விம்பங்களாக வந்து காட்சி கொடுப்பர். இந்தக் காட்சியில் முன்னேறிச் செல்லும் பாதங்கள் மெல்லமெல்ல தணிந்துகொள்ளும். உடம்போடு இணைந்த ஆயுதங்கள் மெல்ல நழுவும் இதுவே ஓர் மனிதனின் இயல்பாக இருக்கும், இருக்கவேண்டும்.

ஆனால் கரும்புலிகளின் பயணம் அதுவன்று உடம்போடு இணைக்கப்பட்ட ஆயுதம் தமிழீழ இலட்சியத்தின் கலங்கரையாக அவர்களுக்குத் தெரிகிறது. தங்கள் தாக்குதலின் இலக்கு தமிழ் மண்ணுக்குத் தாங்கள் செய்யும் உயரிய அர்ப்பணிப்பாக துலங்குகிறது.

தமிழீழ மண்மீட்பிற்கு-தமிழ் மக்களின் நிம்மதியான வாழ்க்கைக்கு எம்மால் இந்த உயிர்த்தியாகத்தைச் செய்ய முடிகிறதேயென ஒவ்வொரு கரும்புலியும் தன் உள்ளத்தில் ஆழமாகப் பதிய வைத்துக் கொள்ள,

இந்த உயர்ந்த சிந்தையில் தாக்கும் இடம், தாக்கப்பட வேண்டிய நேரம் என்பனவற்றை சலனமற்ற கரும்புலித் தியாகிகளின் இதயங்கள் உச்சரித்துக் கொள்கின்றன.

ஆம், ஏன்? எதற்கு? யாருக்காக? என்ற கேள்விகளுக்கு அப்பாற்பட்டு அந்தத் தியாகம் அரங்கேறி விடுகிறது.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் கரும்புலிகள் ஆக்கிய தியாகம் எதிர்ப் படை மட்டுமல்ல பாராமுகமாக இருந்த சர்வதேசத்தையும் ஈழத் தமிழர்கள் பால் திசைதிருப்பியது,

ஈழத் தமிழர்களின் பிரச்சினை சாதாரணமானதன்று. இலங்கை அரசு கூறுவதுபோல் அது ஓர் உள்நாட்டு விவகாரமல்ல. ஈழத்தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்படாமல் விடப்படுமாயின், அதன் விளைவு பாரதூரமானதாக அமையுமென்ற உண்மையை சர்வதேச உலகம் புரிந்து கொண்டது. அந்தப் புரிந்துணர்வுக்கு வித்திட்டவர்கள் கரும்புலிகளே.

தன்னலமற்ற அவர்களின் தியாகத்தால் ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினையைச் சிங்கள இனமும் புரிந்து கொண்டது.

ஆயுதங்களை நம்பி விடுதலைப் புலிகளை எதிர்க்கத் துணிந்த சிங்களப் படைகள் கரும்புலிகளின் தாக்குதலால் உடல், உளரீதியில் பாதிப்புற்றனர். அந்த உயர்ந்த தியாகம் தமிழீழ மக்களால் ஆத்மார்த்தமாகப் போற்றப்பட வேண்டியதாகும்.

# மாகாண சபைத் தேர்தல் முடிவு மாற்று அரசுக்கு வழிசமைக்காது

## டிரோன் தெளிவுபடுத்துகை

(கொழும்பு)

எதிாவரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் புதிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கோ அல்லது ஏற்கனவே இருக்கும் அரசாங்கத்தை பதவியிலிருந்து விலக்குவதற்கோ வாய்பு எதுவும் கிடைக்கமாட்டது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைப்பீடம் எமக்கும் மொறட்டுவ மக்களுக்கும் இழைத்துள்ள தீங்குகளை அம்பலப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குத் தாவிய டிரோன் பெர்னாண்டோ மொறட்டுவத் தேர்தல் தொகுதியில் வசிக்கும் மக்களுக்கு அனுப்பிவைத்துள்ள பகிரங்கக் கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அக்கடித்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாம் மேலும் மக்களுக்கு சேவை செய்ய வேண்டியிருப்பதால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்ந்துள்ளோம்.

சுதநதிரக்கட்சித் தலை மைப்பீடம் தீர்க்க தரிசனத் தோடும், ஜனநாயக அடிப் படையிலும் செயற்பட்டு வருகின்றது. இத்தகைய செயற்பாடுகளின் மூலம் பொதுமக்களுக்கு மேலும் நெருக்கமாக சேவையாற்ற முடியும்.

அத்துடன், எம்மையும், மக்களையும் ஏமாற்றிவரும் ஐக்கிய தேசியக்கட்சியிடம நாட்டை ஒப்படைப்பது ஒரு பயங்கரமானதும், பாரதூரமானதுமான செயல் என்பதை வெளிப்படுத்துவதற்கு இந்த மாகாண சபைத் தேர்தலை மக்கள் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும் என டிரோன் பெர்னாண்டோ கேட்டுக்கொண்டார்.

(உ-121)

## கஷ்டப் பிரதேசத்தில் பணியாற்றும்

# ஆசிரியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களின் சேவையை ஊக்குவிப்பதற்கென அரசாங்கம் விசேட ஊக்குவிப்புத் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது.

இதற்கமைவாக 2000ஆம் ஆண்டு முதல் 2 ஆயிரத்து 500 ரூபா வரையிலான விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்கத் தீர்மானிக்கப்படடிருப்பதாக தெரியவருகிறது.

ஜனாதிபதியின் அனுமதியுடன் நடைமுறைக்கு வரவுள்ள இத்திட்டத்தினால் கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் ஊக்குவிக்கப்படுவதுடன் கஷ்டப்பிரதேசங்களில் சென்று பயிற்றுவிப்பதற்கும் ஆசிரியர்கள் முன்வருவார்கள் எனவும் இதனால் கஷ்டப்பிரதேசப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைகள் நீங்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ-4,64)

# பேச்சுவார்த்தை இடைநிறுத்தப்பட்டதால் இலங்கையில் சுமுகநிலை வெகுவாகப் பாதிப்பு

## மத்தியவங்கி பதில் ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையை இடைநிறுத்திய கடந்த ஏப்ரல் மாத காலப் பகுதிக்குப்பின் இலஙகையில் சுமுகமான ஒரு சூழ்நிலை காணப்படவில்லை என மத்திய வங்கியின் பதில் ஆளுநர் டபிள்யு. ஏ.விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் நாட்டின் நிரந்தர தீர்வுக்காக ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தாலே நாடு எதிர்பார்க்கும் உயர் பொருளாதார நிலையை எட்ட முடியும்.

இலங்கையில் கடந்த இரு தசாப்த காலமாக நிலவி வந்த யுத்தத்தினால் நாட்டின் பொருளாதாரம் பாதிப்புற்றது. அதனை மீளவும கட்டியெழுப்பி உறுதியானதொரு பொருளாதாரக் கொள்கையைப் பேண வேண்டும.

இதனை அடைவதற்கு இலங்கையில் மக்கள் விரும்பும் சமாதான நிலைமை தோன்ற வேண்டும். 20ஆண்களுக்கு மேலாக இங்கு நிலவிவந்த போர் மேகத்தினால் நாட்டின் பொருளாதாரம் மிகவும் சீர்குலைந்து போய் இருந்தது.

ஆனால், 2002ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் ஏற்பட்ட சமாதானச் சூழ்நிலையினால் நாட்டின் பொருளாதாரம் ஓரளவு வலுவடைந்து காணப்பட்டது.

இதன்படி இந்த ஆண்டின் முதல் 3மாதங்களில் 6.2சதவீதம் வளர்ச்சியடைந்து காணப்பட்டது. தொடர்ந்து வந்த அடுத்த காலாண்டில அது 5.5 சதவீதமாகக் குறைந்து காணப்பட்டது.

தற்போதுள்ள ஸ்திரமற்ற அரசியல் போக்கினால் உள்நாட்டு, வெளிநாட்ட முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்குத் தயங்குகின்றனர். இதனால் நாட்டின் பொருளாதாரத்தைத் தொடர்ந்து அபிவிருத்தி செய்யமுடியாதுள்ளது.

ஆகவே அரசாங்கம் இலங்கையின் எதிர்காலத்தையும், மக்களின் நலனையும் கருத்தில் கொண்டு அரசியல் நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என விஜயவர்த்தன கேட்டுக்கொண்டார்.

(உ-121)

## இலங்கையின் அடிப்படைக் கட்டமைப்பு விருத்திக்கு ஈரான் உதவும்

(கொழும்பு)

இலங்கையில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்கும், இலங்கைக்கும்- ஈரானுக்கும் இடையிலான உறவுகளை பலப்படுத்துவதற்கும் தமது அரசு என்றும் தயாராகவே உள்ளது என ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான ஈரானியப் பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு அண்மையில் கொழும்பு வந்த ஈரானியப் பிரதிவெளிவிகார அமைச்சர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசிய போதே இதனைத் தெரிவித்தார்.

பொருளாதார கலாசாரத்துறைகளில் பரஸ்பர தொடர்புகளை மேலும் விஸ்தரிப்பது பற்றியும் ஈரானிய பிரதி வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

(உ-60,10)

### தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

இறைவனிடம் சரணாகதி அடைந்து நம்பிக்கையுடன் அவனையே நம்பியிருந்தால் எல்லாம் கைகூடும். அப்படிப்பட்ட ஒருவருக்கும் கடவுளின் தரிசனம் கிடைப்பது உறுதி. அப்படி இல்லாமல் ஆன்மீக சாதனைகளை நிறுத்தி வட்டாலோ முன்னேற்றம் நின்று விடும்.

சுவாமி விவேகானந்தர்

## மொறட்டுவ பல்கலையின் துணைவேந்தர் தமிழீழ மாணவர் பேரவையினருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் துரைராஜா ஞாபகார்த்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக யாழ். வருகை தந்திருந்த மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் தயந்த எஸ். விஜயசேகர நேற்று முன்தினம் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கேட்போர் கூடத்தில் மாணவர் தரப்புத் தலைவர்களுடன் சந்தித்துப் பேசினார்.

மொறட்டுவ பேராசரியர், திறன் அபிவிருத்தி வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வி அமைச்சின் செயலாளருமாவார்.

மாணவர்களைச் சந்தித்து தொழில்நுட்பக் கல்வி தொடர்பான விவகாரங்கள் பற்றிக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத்தலைவர் ப. பகீரதரன்,பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செ.செல்வக்குமார், தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ந.யோகராஜன் மற்றும் மாணவர் பேரவை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

மாணவர்களுக்கு, தொழில்நுட்பக் கல்வி தொடர்பான தேவைகள் பற்றியும், கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியை அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்ப நிறுவனமாக மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கிளிநொச்சியில் அமையவுள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின பொறியியல் பீடத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்துமாறும் இச் சந்தர்ப்பத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அத்துடன் தற்போது சமாதான சூழல் இருக்கின்ற போதும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்,இடம்பெயர்ந்த மக்கள் பிரச்சினைகள் மற்றும் இராணுவமும், இராணுவப் புலனாய்வுத் துறையினரும் திட்டமிட்டு மேற்கொள்ளும் கலாச்சார பண்பாட்டு சீரழிவு நடவடிக்கைகள் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டது.

# புலிகளிடம் ஈழத்தைக் கையளிக்கும் நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்படும்

## ஜெயாநந்தமூர்த்தி எம்.பி. எச்சரிக்கை

(திருநெல்வேலி)

தமிழீழ விடுதலைப் புலிகளால் கோரப்படும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை வழங்க அரசு தவறுமானால் அவர்களுக்குத் தமிழீழத்தைக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.ஜெயாநந்தமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை யாழ். குடாநாட்டுக்கு வருகை தந்திருந்த அவர் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

இச் சந்திப்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் தமிழ் மக்களுக்கான விடுதலையை சிங்கள அரசு 'தங்கத் தட்டில் வைத்துத் தரமாட்டாது. எமக்கான விடுதலையையும் உரிமையையும் நாமே பெற்றுக் கொள்ள வேண்டும். பாராளுமன்றத்தில் முன்னர் இருந்தவர்கள் எமக்கான விடிவினைப் பெற்றுத்தரவில்லை. இதன் காரணமாகவே நாங்கள் பாராளுமன்றம் சென்றோம்.

பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்து கொண்டு ஒட்டு மொத்தத் தமிழ் மக்களின் விடிவுக்கான விடுதலைக்காக சர்வதேச சமூகத்திற்கும் நாம் அழுத்தம் கொடுப்போம் இதுவே எமது நிலைப்பாடாகும்.

மேலும் ஈழத் தமிழர்களின் பிரச்சினைகள் குறித்தும் இவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் குறித்தும் நாம் பல்வேறு தரப்பினருடனும் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றோம்.அத்துடன் இது விடயம் குறித்து இந்திய அரசியல் தலைவர்களுடனும் பேசுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் விரைவில் இந்தியா செல்லவுள்ளோம் எனவும் குறிப்பிட்டார்.

யாழ்குடாநாட்டிற்கு விஜயம் செய்த அவர் யாழ்குடாநாட்டின் தற்போதைய நிலைபரம் குறித்துக் கேட்டறிந்தார்.

இதனையடுத்து மறுநாள் வெள்ளிக்கிழமை கைதடிப்பகுதிக்கு விஜயம் செய்து அப்பகுதி மக்களைச் சந்தித்து அவர்களின் பிரச்சினைகள் குறித்தும் ஆராய்ந்தார். (உ-43)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் இந்தியா செல்வர்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த மாதம் இந்தியாவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழகம் செல்லும் இவர்கள், அங்கு கலைஞர் கருணாநிதி உள்ளிட்ட தலைவர்களைச் சந்திக்கவுள்ளனர். இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் குறித்தும் அவர்கள் கலந்துரையாடவுள்ளனர்.

அதேவேளை சமாதான பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஆதரவையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கோருவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ச)

## ஈ.பி.டி.பி மீது...

சாட்டியுள்ளது.இக் குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர்.ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்றபோது திருநகரைச் சேர்ந்த கிராமவாசிகள் இருவரை மோதிச் சென்றதாகவும் இதற்குத் தனிப்பட்ட பகைமையே காரணமெனவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து பிரதேச வாசிகள் சிலர் நியாயம் கேட்க முற்பட்ட போது அவர்களின் மீது துப்பாக்கி காட்டி ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் மிரட்டியதாகவும் இதனையடுத்து ஆத்திரமடைந்த மக்கள் அவர்களைத் தாக்கியதாகவும் புலிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து மோட்டார் சைக்கிளை விட்டுவிட்டுத் தப்பிச் சென்ற ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் பொலிஸாரின் உதவியுடன் சென்று மோட்டார் சைக்கிளை மீட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது இதேவேளை காயமடைந்த றீகன் என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர. சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். இவருக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது ()

## வெள்ளவத்தையில் தீ; ஒருவர் கருகி மரணம்

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தையில் வர்த்தக நிலையம் ஒன்றில் நேற்றுக் காலை ஏற்பட்ட தீவிபத்தில் ஒருவர் தீயில் கருகி மரணமானார்.

தீவிபத்தில் உயிரிழந்தவர் சம்மாந்துறைப் பிரதேசத்தில் வசிப்பவர் என்றும் இவர் ஐந்து நாட்களுக்கு முன்னரே கொழும்புக்கு வந்திருந்ததாகவும். பொலிஸார் தெரிவித்தனர்.

மின்பொறியியலாளர்கள் மற்றும் அரசாங்கப் பொறியியலாளர்களின் உதவியுடன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## எரிபொருள் நிரப்பு நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ப.நோ.கூ.சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையம் எதிர் வரும் 7ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு காங்கேசன்துறை வீதி உடுவிலில் திறந்து வைக்கப்படவுள்ளது.

சங்கத் தலைவர் சி.குமாரவேல் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, நிர்வாக சேவைப் பொறுப்பாளர் சி.விஜிதரன், வடக்குக் கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் இ.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

## அ.இ.த.காங்கிரஸில்..

உடனடியாகக். கைவிடுமாறு அரசிடமும் எதிர்க் கட்சிகளிடமும் கோருவது, வடக்குக் கிழக்கில் வாழும மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக விடுதலைப் புலிகளுக்கு இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை வழங்குமாறு கோருவது ஆகிய இரு தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. (உ-19)

## ஐ.தே.க...

களை வீசி மோதலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்து கிங்குராங்கொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கிங்குராங்கொட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ச-8)

# கருணா அரசியலில் ஈடுபட ஜனநாயக நாட்டில் இடமுண்டு

## இடதுசாரித் தலைவர்கள் கருத்து

(கொழும்பு)

கருணா அரசியல் நீரோட்டத்தில் இணைவதற்கு எடுத்துள்ள முடிவைத் தாம் வரவேற்பதாக இடதுசாரிக் கட்சித் தலைவர்கள் தெரிவிக்கின்றனர். மீன்பிடி நீரியல் வளத் துறை அமைச்சரும் ஜே.வி.பி எம்.பியுமான சந்திரசேன விஜயசிங்க தெரிவிக்கையில் ஓர் அரசியல் கட்சியை ஆரம்பிக்கும் உரிமை எவருக்கும் உண்டு. இது ஒரு ஜனநாயக நாடு எனவே இத்தகையதொரு முடிவை ஆதரிப்பதில் தவறேதும் இல்லையென்றார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவிக்கையில்; வடக்குக் கிழக்கின் ஆயுத பாணிக் குழுக்களான ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்றவை அரசியலில் பிரவேசித்திருப்பது போன்று கருணாவும் பிரவேசித்திருக்கலாம். கருணாவின் கொள்கைகளில் பெரும் மாற்றம் இருக்காது வடக்குக் கிழக்கில் ஏனைய குழுககள் எவ்வாறு தமது உரிமைகளுக்காகப் போராடுகின்றனவோ அதே போன்று தமிழரின் நலன்களுக்கான போராட்டத்தில் கருணா ஈடுபடுவதால் வித்தியாசமிராது.

இராணுவத் தந்திரோபாயங்களுக்குப் பதிலாக அவர் அரசியல் தந்திரோபாயங்களைப் பயன்படுத்தி இலக்கையடையலாமென்றார்.

யாழ்.மாவட்ட எம்பி. மாவை சேனாதிராசா தெரிவிக்கையில் அரசியலில் பிரவேசிக்க முன் கருணா மூன்று விடயங்கள் பற்றித் தெளிவு பெற வேண்டும். வடக்குக் கிழக்கு தமிழர் தாயகம் என்று ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். தனது கொள்கைகளை முன்வைக்க வேண்டும், தன்னையொரு போராளியாக அல்லது அரசியல்வாதியாக இனங்காட்டிக் கொள்ள வேண்டும். இதைவிடுத்து கிழக்கில் இராணுவ ரீதியாக இயங்கியபடியே கருணா எப்படியொரு கட்சியை அமைகக லாமெனவும் அவர் வினாவினார்.(ந-6)

## சர்ச்சைக்குரிய...

தமிழர்களின் 'ஒற்றுமை புலப்படுகின்றது' எனப் பேசிக் கொண்டிருக்கப் பின்னால் ஒரு புலிஉறுப்பினர் 'எம்மைப் பற்றி மட்டும் கூறும்' என ஒரு பிஸ்டலைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்.

சமாதானத்தை விரும்பும் பல்கலைக் கழக மாணவர் குழுஎன இதன் அடியில் எழுதப்பட்டுள்ளது. மேற்படி துண்டுப் பிரசுரத்தை அச்சடிக்கும் உத்தரவை யார் இட்டார் எனத் தெரியாமல் இருக்கிறது. ஆனால் ஊழியர்களுடன் கலந்துரையாடி விட்டு இதுபற்றி அறிவிப்பதாக அரச அச்சகர் நெவில் நாணயக்கார சண்டேரைம்ஸுக்கு தெரிவித்திருக்கிறார். பின்னர் தான் இதுபற்றி விசாரித்ததாகவும் ஆனால் அதில் அடங்கியுள்ள விடயங்கள் எமக்குத் தெரியவில்லையென்றும் கூறியிருக்கிறார்.

அரச அச்சக உயர் அதிகாரியினால் தான் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் நோக்கம் தெரியவில்லை. ஆனால் இவை வடகிழக்கில் பாவிக்கப்படவிருப்பதாகக் கூறப்படுகின்றது. (ந-6)

## கருணா...

ஏதும் இல்லை. நாம் இலங்கையின் இறைமை, ஆட்புல ஒருமைப்பாடு, ஒற்றுமை என்பவற்றை மதிக்கிறோம். சகல பிரிவு மக்களுக்கும் தீர்வைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும்.

சகல சமயங்களும் பாதுகாக்கப்படல் வேண்டும். குறிப்பாக அதிகாரப் பரவலாக்கம் போன்றவற்றால் முஸ்லிம்கள் பிரதிகூலங்களை அனுபவிக்க வேண்டியேற்படலாம். இத்தகைய நிலை தவிர்க்கப்படல் வேண்டும். புலிகளின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கை இறுதித் தீர்வினுள் உள்ளடக்கப்படல் வேண்டும். தீர்வு ஜனநாயக வழியில் அமைதல் வேண்டும். கருணா அரசியலில் இணைவது வரவேற்கத் தக்க விடயம. இந்தியா புலிகள் பக்கமாக பேசவில்லை என்பதால் பேச்சுக்களில் அனுசரணையாளர்களாக செயற்பட முடியாது. இவ்வாறு நிருபம் சென் கூறியுள்ளார்.(ந-6)

## கரும்புலிகள்...

புலிகள் தின நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இன்றைய கரும்புலிகள் நாளை முன்னிட்டு ஒவ்வொரு கோட்ட, பிரதேச செயலகங்களிலுமுள்ள சன் சமூக நிலையங்கள் மற்றும் பொது நிறுவனங்களில் கரும்புலிகளின் திருவுருவப் படங்களுக்கு மலரஞ்சலி செலுத்துமாறு யாழ்.பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுள்ளது.

பல்வேறு பகுதிகளில் இருந்தும் நெலலியடியில் இடம் பெறும் நிகழ்வில் கலந்து கொள்ளச் செல்லும் மக்களுக்கு வாகன வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று பிற்பகல் 4 மணிக்கு சகல வர்த்தக நிலையங்களையும் மூடி கரும்புலிகள் நாள் நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் கேட்டுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் கரும்புலிகள் தினம் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச-19)

## தடகளப்...

நேற்று மாலை நடைபெற்றது.

தமிழீழ விளையாட்டுத் துறைத் துணைப் பொறுப்பாளர் இன்பன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவிற்கு யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக் கழகத் துணை வேந்தர் எஸ்.மோகனதாஸும் கலந்து கொண்டனர் நிகழ்வில் ஆசியுரைகளும், சிறப்புரைகளும் இடம் பெற்றன.

விளையாட்டுத் துறையில் தேசிய ரீதியில் சாதனைகள் பல புரிந்த பழம் பெரும் வீரர் வைத்திலிங்கம் வாமதேவன் தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுபபாளர் பாப்பாவினால் பதக்கம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டார். நிகழ்வின் இறுதியில் இரவு 7.30 மணியளவில் பெரும் திரளான மக்கள் கண்டுகளிக்க வாண வேடிக்கைகள் இடம் பெற்றன.(ச-19)


THE ROYAL COLLEGE OF JAFFNA

SPOKEN ENGLISH மற்றும் இலக்கணம், கடிதம் தனிப்பிரிவு
By விக்னேஸ்வரன் ஆச்சாரி
426(302) K.K.S. வீதி யாழ்.
பிளாக் வீதி சங்கானை




கருணாவின் விவகாரமும் அம்பலமாகும் இரகசியங்களும்
-விதுரன்

அடிப்படை வசதிகளுக்காக ஏங்கும் புங்குடுதீவு மக்கள்
-க.சதீபன்

ஆப்கானில் ஜனநாயகம் மலருமா?
-பேதுரு யேசுதாசன்

சினிமாச் சிதறல், மௌனத்தின் தேடல்கள், சிறுகதை, வியாசரின் பதில்கள் இன்னும் பல அம்சங்களுடன்

சங்கு நாதம்


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.07.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரியின் வாரமலர்

விலை :-16.00

# சங்கு நாதம்

05 - 11ஜுலை 2004

Sankunatham

பக்கங்கள் - 20

சங்கு :-04 வள்ளுவர் ஆண்டு 2035 தொலைபேசி :- 2223378 நாதம் :- 17




அரசியல் - அறிவியல் - ஆன்மீகம் அதுவே உங்கள் சங்குநாதம்.

# கருணாவின் விவகாரமும்





கிரந்தம் முற்றிப் பௌந்தரமாக்கிய கதையாக கருணா விவகாரம் அமைந்து விட்டது. விடுதலைப்புலிகள் அமைபபிறகு எதிராகச் செயற பட்ட கருணாவை, விடுதலைப புலிகளின் தலைமைப்பீடம் தமது அமைப்பிலிருந்து வெளி யேற்றியிருந்தது.

பிரதேசவாதத்தை முன் வைதது கருணா அறிககைவிட டது முதல் அவர் கொழுமபிற குத் தபபிச்செலவது வரையான சமபவங்கள் யாவும் இபபோது அமபலததிற்கு வந்துளளது.

## இரு இன ஒத்துழைப்பு

ஈழத்தமிழர்களின் உரிமைகளை நசுக்குவதில் சிங்களப் பேரினவாதம் முனைப்புடன செயற்படுவது பற்றியே பேசிக்கொணடிருநத தமிழ்மக களுக்கு கருணா வவகாரத்தல் பேரதிர்ச்சி காத்திருந்தது.

தமிழ்மக்களின் ஒற்றுமையைக் குலைத்தும், தமிழ்த் தலைமைகளைப் பிரித்தும் தமது திட்டங்களை நிறைவேற்றி வந்த சிங களப்பேரினவாதத் திற்கு எதிராகத் தமிழமக்கள் ஆயுதப்போராட்டம் நடததியபோது, அந்தப போராட்டத்தை மழுங கடிபபதில் முஸலிம் இனமும,




சிங்களத்துடன் இணைந்து கொணடமையே பேரதிாசசிக கான காரணமாகும். மிகவும் வலுவானநிலையில் தமது கோரிக்கையை முன்வைத்து ஆயுதப்போராட்டம் நடத்திய போது, அந்தப் போராட்டத்திற்கு ஈடுகொடுக்கமுடியாத சிங் களத தலைமைகள் விடுதலைப புலிகளுடன் யுத்தநிறுத்த உடன படிக்கையைச செயயவேண்டிய தேவை ஏற்படடது.

விடுதலைப்புலிக்ளுடன் யுத்தம் நடத்துவது சிங்கள இராணுவத்திறகே இழபபை ஏற் படுத்துமென்ற உண்மையை கடநதகால அனுபவஙகளிலிருந்து சிங்கள ஆட்சியாளர்கள் புரிந்துகொள்வதற்குக் கால தாமதமெடுததபோதிலும, அதனை உன்னிப்பாக அவதானித்த சர்வதேச சமூகம் புரிந்து கொண்டு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுததது. இவவாறு இராணுவத்திற்கேற்பட்ட இழபபு, சர்வதேச அழுத்தம காரணமாக இலஙகை அரசு விடுதலைப புலிகளுடன் யுத்தநிறுதத உடன் பாட்டைச் செயயவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியது.

இலங்கை அரசின் சமாதான முயற்சிகளுக்குச் சந்தாபபம வழஙக நினைதத விடுதலைப்புலிகள் அரசுடன புரிநதுணாவு ஒப்பந்ததததை மேற கொண்டனர்.

## அரசின் கபடத்தனம்

விடுதலைப்புலிகளுடன் யுத்தநிறுத்தப் புரிந்துணாவு ஒப் பநததததை அரசு மேற்கொண் டிருந்தாலும் வடககுக கிழககு இணைந்த சுயாடசியைத தமிழ் மக்களிடம் வழஙகுவதல் அர சுககு உடன்பாடிருக்கவிலலை.

வடக்கையும் கிழக்கையும் பிரித்துவிடுவதே தமிழ் மக்களின் பலத்தைப் பலவீனப் படுத்தும் ஒரேவழி என அரசு கருதிக்கொண்டது.

சிங்கள அரசின் அதே சிந்தனையால் முஸ்லிம் தலைமைகளும் செயறபடத் தொடங்கின விடுதலைப்புலி களுடன் சமாதானப பேசசுக களை முன்னெடுத்துச்செல்லும் அதேவேளை விடுதலைப்புலி களுககுள் பிளவை ஏற்படுத்து வதிலும் அரசு மிகத தீவிரமாக ஈடுபட்டது.

அரசின் கபடத்தனமான சிந்தனைக்கு ,கருணாவும் உடந்தையாகினாா். இங்கு தான் முஸ்லிம் தலைமையின சதித்திட்டம் வெளிப்படத் தொடங்கியது.

## அலியாகிர் உதவ'

பிரதேசவாதத்தை முன் வைதது விடுதலைப்புலிகளின் தலைமைக்கு எதிராகக் கருத் துக்கூறி பெரும் குழப்பத்தை உண்டுபண்ணிய கருணா எதிர் பார்த்ததற்கு மாறாக கிழக்கு மாகாணத்தைவிட்டு வெளி யேறியிருந்தார்.




பிரதேசவாதத்தை முன் வைத்து விடுதலைப்புலிகளுக்கு எதிராக கருத்துக்களைக் கொட்டித்தள்ளிய கருணாவுககு தலைவர் வே.பிரபாகரன் பொதுமன்னிப்பு வழங்கி, அவரை வெளிநாட்டில் செனறு வாழ்வதற்கும் சநதர்ப்பம் கொடுத்திருந்தார்.

எனினும், தலைவர் பிரபாகரனால் வழங்கப்பட்ட பொதுமன்னிப்பை கருத்தில் எடுத்ததுபோல் காட்டிக்கொளளாத அவர் பின்னர் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்கமுடியாமல் கிழக்கை வட்டு கொழும்பிற்குத் தப்பிச சென்றாா.

கருணா கிழக்கிலிருந்து பாதுகாப்பாக எப்படிக் கொழும்பிற்குச் சென்றாா் என்ற கேள்வியின் மத்தியில் இப் போது மறைந்திருந்த இரகசியங்கள் வெளிப்படத் தொடங்கியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பியான அலியாகிா மௌலானாவே கருணாவைப் பாதுகாப்பாகக் கொழும்பிற்குக் கூட்டிச்சென்றாா என்ற உண்மையை உரியவரே ஏற்றுக்கொண்டுள்ளார்.

அவ்வாறு கருணாவைக் கொழும்பிற்குக் கூட்டிச செல்வதற்குக காரணம கருணா தனது பால்ய நண்பன் என்பதற்கு அப்பால் கருணாவை கிழக்கிலிருந்து வெளியேற்றுவதற்கு உதவிசெய்யுமாறு




கருணாவிடமிருந்து தப்பி வந்த பெண் போராளிகள்

புலிகளின் கோரிக்கைப படி கருணாவை அவர் கொழும்பிற்குக் கூட்டிச்சென்றிருப் பாராயின் அதுபற்றி புலிகளிடம் தெரிவித்திருப்பது அவரின் கடமையாக இருந்திருக்கும். ஆனால் அவர் அதைச் செய்யவில்லையென்பதிலிருநது உண்மைநிலை எனனவாக இருக்குமென்பதைப் புரிந்து கொள்வதில் எவருக்கும் சிக்கல் இருக்கமுடியாது.

விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்திய ரணில் அரசு அந்தப பேச்சு வார்த்தைக் காலங்களிலேயே கருணாவைத் தனது வலைக்குள் வீழ்த்திக்கொண்டது. இது விடயத்தில் முன்னாள் அமைச்

# அம்பலமாகும் இரகசியங்களும்



சா் மிலிந்த மொறகொடவின் பங்களிப்பு அதிகமாக இருந்ததெனினும் கருணாவுடன நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்த அலியாகிரின் பங்களிப்பும் கணிசமானதென்பதை மறுப்பதற்கில்லை.

விடுதலைப்புலிகளுடன் சமாதானப பேச்சுக்களை முன் னெடுத்துசசெல்லும் அதேநேரம் கருணா மூலமாகக் கிழக்கில் பிரதேசவாதத்தைத் தூண்டிவிடுவது வடக்குக் கிழக்கு இணைப்பை உறுதிசெயயும சர்வஜன வாக்கெடுப்பைத் தோற்கடிப்பதற்கு உதவியாக இருக்குமென அரசு கருதியது. எனினும் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐககிய தேசிய முனனணி அரசு, கருணாவுடன சேர்நது தீட்டிய சதிநாடகத்தை அரங்கேறறமுடியாதவாறு ரணிலின் கட்சி தேர்தலில் தோலவி கண்டிருந்தது.

இதனால் விடுதலைப் புலிகளை எதிர்த்தால் கருணாவுக்கு தாம் செய்யக்கூடியதாகக் கூறப்பட்ட உதவிகளை விடுதலைப்புலிகள் தம்மிடம் கேட்டுக்கொணடதாகவும் அலியாகிா மௌலானா கூறியுளளாா.

எனினும் அலியாகிரிடம் விடுதலைப்புலிகள கேடட காலத்திற்கும அவர் கருணாவிற்கு உதவிசெய்த காலத்திற்குமிடையே நணட இடைவெளி உண்டெனறும் தாம் கேட்டபோது அலியாகிர் மௌலானா அதைச செய்யவில்லையெனவும் விடுதலைப்புலிகள் கூறியுள்ளனர்.

ஆக,. கருணா மூலமாகக கிழக்கு மாகாணத்தை பிரிபபதில் ஐக்கிய தேசிய முனணி அரசு முயற்சிசெய்துள்ளதென்பதும் அந்த முயற்சிக்கு அலியாகிா மௌலானா உதவி செய்துள்ளார் என்பதும் இப் போது புலனாகின்றது.

கருணாவைக் கொழும்பிற்குக் கூட்டிச்சென்ற விவகாரம் சூடுபிடித்தது மட்டுமன்றி அது தென்னிலங்கை அரசியலிலும் எவரும் எதிர்பார்க்காத வகையில் பெரும குழப்பததை ஏற்படுத்தியுள்ளது.

## கட்சியைக் காப்பாற்ற அலியாகிர் முயற்சி

கிழக்கிலிருந்து பாதுகாப்பான முறையில் கருணாவைக கொழும்பிறகுக கூட்டிசசென்றது விடுதலைப்புலிகளின் கோரிக்கைக்கு அமைவாகவே நடைபெற்றதெனக கூறிக்கொள்ளும் அலியாகிா, கருணாவைக கொழும்பிற்குக் கூட்டிச்சென்ற விவகாரத்தை விடுதலைப்புலிகளிடம் தெரிவிக்காமல்விட்டது பெருந்தவறாகும்.

ரணிலால் செய்யமுடியாது போனது.

இந்நிலையில் கருணாவைக் கொழும்பிற்குக் கூட்டிச்சென்றுவிடுவதையாவது செயய வேணடுமென்பதாலேயே அலியாகிா் மௌலானா அதைச் செய்திருந்தார்.

கருணா மூலமாகக் கிழககைப் பிாித்துவிடுவது முஸலிம் மக்களின் நலனுக்குச சாதகமாக இருக்குமென்பது அலியாகிா் உள்ளிட்ட முஸ்லிம் தலைமைகளின் திட்டம். இத்திட்டம் இப்போது பிசுபிசுத்துப்போக, தான் மாட்டுப்பட்டாலும் பரவாயில்லை தனது கட்சியையும், ரணில் விக்கிரமசிங்காவையுமாவது காப்பாற்றிவிட்வேண்டுமென அலியாகிர் முடிவெடுத்தார்.

அதற்காகக் கருணாவைக் கொழும்பிற்குக் கூட்டிச்சென்ற விவகாரம் ரணில் விக்கிரமசிங்காவிற்குத் தெரியாதெனவும், தனது நடவடிக்கையால் கட்சிக்கு ஏற்படட இக்கட்டான நிலைமைக்காகத் தான் கவலைப்படுவதாகவும் கூறினார்.

## விதுரன்

ஆனால், கருணா விவகாரம் ரணில் விக்கிரமசிங்காவிற்குத் தெரிந்த விவகாரம் என்பதில் எந்த ஐயமுமில்லை. இருந்தும் ஒரு பொய்யை மறைப்பதற்காகப் பல அறிக்கைகளை விடவேண்டியிருப்பது அரசியலின் அடிப்படைப் பண்பு எனபதால கருணாவுககும தனக்கும் எந்தத் தொடர்புமில்லையென ரணில் விக்கிரம சிங்கா விடுதலைப்புலிகளுக்குக் கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.


எதுவாயினும் கருணாவுடன் கொழும்பிற்குத் தப்பிச் சென்ற நான்கு பெண் புலிப் போராளிகள் மீண்டும் விடுதலைப்புலிகளுடன் இணைநதுள்ளனர். இவாகள் நிச்சயம கருணாவுடன் சிங்கள அரசியல் கட்சி, மற்றும் முஸ்லிம் தலைவர்களுக்கு இருந்த இரகசியத் தொடர்புகளை அம்பலப் படுத்தவே போகின்றார்கள்.

* * *

# அடிப்படை வசதிகளுக்காக ஏங்கும் புங்குடுதீவு மக்கள்



சேதமான நிலையில் காணப்படும் கட்டில்கள்




பிரசித்தி பெற்ற சிவன் ஆலயம்

சப்த தீவுகளில் ஒன்றாக விளங்குவது புங்குடுதீவு. இங்கு 12 வட்டாரங்களைக்கொண்ட பிரிவுகள் உள்ளன. பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் வாழும் இக்கிராமத்தில் மக்களின் அடிப்பண்ட வசதிகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலை தோற்றுவிக்கப்படவில்லை.

1990ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் 1996ஆம் ஆண்டிற்குப் பின் மீளக்குடியமர்ந்து வருகின்றனர். அவ்வாறான நிலையில் அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு உதவி வழங்கும் நிறுவனங்கள் பின்நிற்கின்றன.

**14 வருடங்களாக இயங்காத வைத்தியசாலை**

12 வட்டாரங்களிலுமுள்ள மக்களின் மருத்துவத்



வெளிநோயாளர் பகுதி

தேவைகளை 2ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஒரேயொரு வைத்தியசாலையே பூர்த்தி செய்து வந்தது. அதுவும் புங்குடுதீவு மக்கள் இடம்பெயர்வுக்குப் பின்னர் பாழடைந்த மண்டபமாக மாறிவிட்டது.

மாவட்ட வைத்தியசாலைகள் எவ்வாறு சிறப்பாகச் செயற்படுகின்றனவோ அதேபோன்று 14வருடத்திற்கு முன்னர் புங்குடுதீவு வைத்தியசாலையும் செயற்பட்டது. ஆனால் இன்று பற்றைகள் நிரம்பிய ஒரு காடாக அது காட்சிதருகின்றது.

நோயாளர் விடுதிகள் சேதமடைந்து காணப்படுகின்றன. நோயாளர்களைத் தாங்கும் கட்டில்கள் துருப்பிடித்து, பாவனைக்கு உதவாத நிலையில் உருக்குலைந்துள்ளன. ஏனைய தளபாடங்கள் அனைத்தும் ஒரு அறையினுள் பூட்டப்பட்டு பழுதடைந்து போயிற்று. ஏன் இந்தநிலை? புங்குடுதீவு மக்களின் வைத்திய வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு உரிய தரப்பினர் ஏன் பின்னடிக்கின்றார்கள் என்பது புரியாத புதிராகிவிட்டது.

**நேரடி விசிற்**

சாதாரண காய்ச்சலுக்கு மருந்தெடுப்பதிலிருந்து, மகப்பேறு மற்றும் வேறு நோய்களுக்கு மருந்தெடுப்பதற்கு அப்பகுதி மக்கள் யாழ்.போதனா வைத்தியசாலையையோ அல்லது வேறு வைத்தியசாலைகளையோ நாடவேண்டிய நிலை பரிதாபத்திற்குரியது.


அன்றாட உழைப்பில் சீவியம் நடத்தும் மக்கள் போக்குவரத்திற்காகப் பணம் செலுத்தி யாழ்ப்பாணம் வந்து மருந்தெடுப்பதென்பது விரக்தியடைந்த மக்களை மேலும் விரக்திக்குட்படுத்துமேயன்றி அது ஆற்றுப்படுத்த மாட்டாது.



புங்குடுதீவில் காணப்படும் பனைவளம்

புங்குடுதீவு தென்னிந்தியத் திருச்சபையின் போதகர் அம்பலவாணர் அவர்களின் முயற்சியின் காரணமாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் வைத்தியசாலையை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலையில் வெளிநோயாளர் பகுதி இயங்கிவருவதாக மக்கள் தெரிவித்தனர்.

ஆனாலும் ஒழுங்கான முறையில் செயற்படவில்லை. வைத்தியசாலை விடுதி, அம்புலன்ஸ் வண்டி போன்ற வசதிகளுடன் முன்னையது போல் வைத்தியசாலை திரும்புவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கேட்டுக் கொள்கின்றனர்.




அம்புலன்ஸின் வரவுக்காகக் காத்திருக்கும் தரிப்பிடம்

**திலீபன் மருத்துவமனை**

புங்குடுதீவு மக்களின் வைத்தியவசதியை ஓரளவு பூர்த்தி செய்யக்கூடிய வகையில் மருத்துவ வசதியில்லை என்ற வேதனையை ஆற்றுப்படுத்தக்கூடிய வகையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரிவின் தியாகி தீலிபன் மருத்துவமனை கடந்த ஏழு மாதங்களாக பெருங்காட்டுப் பகுதியில் செயற்பட்டு வருகின்றது.

இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 75பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். மருத்துவப் பிரிவுப் போராளி வண்ணன் இங்கு வைத்தியராகக் கடமையாற்றி வருகின்றார்.

**கல்வி நிலை**

புங்குடுதீவில் பத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இங்கு பெருமளவான மாணவர்கள் கல்வி கற்கின்ற போதிலும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதால் மாணவர்களின் கல்வி பின் தள்ளப்படுகின்றது. கல்விச் செல்வத்திற்குக் குறைவில்லாத புங்குடுதீவில தற்போது மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் அருகி வருகின்றன.

கல்வி வளப்பற்றாக்குறை, ஆளணி வசதியீனங்களே மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைகின்றன. பிற இடங்களிலிருந்து செல்லும் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் போக்குவரத்துக் கஷ்ரங்கள், மாணவர்களின் ஒழுங்கான கல்வி புகட்டலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகப் பெற்றோர் தரப்பில் கவலை தெரிவிக்கப் படுகிறது.

**தார் இல்லாத வீதிகள்**

இலங்கையிலேயே மிக நீண்ட தாம்போதியாகக் காணப்படுவது புங்குடுதீவையும், வேலணையையும் இணைக்கும் தாம்போதியாகும். அத்துடன் "நெடுந்தீவு, நயினாதீவு போன்ற இடங்களுக்குச் செல்லும் மக்கள் இதனூடாகவே தமது பயணத்தை மேற்கொள்ள முடியும். இவ்வாறான பிரதான வீதியைக் கொண்டுள்ள புங்குடுதீவில் வீதிகள் திருத்தப்படாமல் குண்டும் குழியுமாகக் காட்சிதருகின்றது. சேதமான வீதிகளில் சில திருத்தப்பட்டும், சில பகுதி திருத்தப்படாமலும் அரைகுறை வேலைகள் முடிந்துள்ளன.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத் திருவிழாக் காலத்தில் பெருமளவான வாகனங்கள் இதனூடாகச் செல்கின்றன. வீதிகள் சேதமாகக காணப்படுவதால் விபத்தை எதிர்நோக்கவேண்டிய அபாயமும் ஏற்பட்டுள்ளது.

**குடிநீர்த் தட்டுப்பாடு**

இப்பகுதி மக்களுக்கு குடிநீர்ப்பிரச்சினை ஒரு சாபக் கேடாகவே உள்ளது. மழைகாலத்தில் குடிநீர்ப் பிரச்சினை ஓரளவு தீர்க்கப்பட்டாலும், கோடைகாலங்களில் குடிநீர்ப் பிரச்சினை தீர்வுகாண முதல் இருந்த காவிரி நீர்ப் பிரச்சினையாகவேயுள்ளது.



ஆதரவளித்துவரும் தீயாகதீபம் த்லபன் மருததுவமனை

குடிநீர் எடுக்கவேண்டுமாயின் வேலணையிலுள்ள சாட்டிப் பிரதேசத்திற்குச் சென்றே நீரைப் பெற்றுக்கொள்ள முடியும். எனினும் வேலணைப் பிரதேச சபையின் நடமாடும் நீர்த்தாங்கிகள் மூலம் புங்குடு தீவு மக்களின் குடிநீர்த் தேவை ஓரளவு பூர்த்திசெய்யப்படுகி ன்றது. 12வட்டாரங்களிலும் நீர்த்தாங்கிகள் அமைத்து தேவையான நேரம் நீரைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதே அப்பகுதி மக்களின் வேண்டுகோளாகும்.

(18ஆம் பக்கம் பார்க்க...)

க.சதீபன்

# ஆப்கானில் ஜனநாயகம் மலருமா?

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆப்கானிஸ்தானில் பொதுத்தேர்தல்கள் நடாத்தப்படவிருக்கின்றன. அதற்கான ஆயத்தங்களில் ஆப்கானிஸ்தானின் இடைக்கால அரசாங்கமும் ஐக்கிய நாடுகள் சபையும் ஒருங்கிணைந்து அதிவேக முயற்சியில் இறங்கியுள்ளன.



சுமார் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ஆயுதக்கலாசாரத்தின் கொடுமைகளால் அவதிபபடும் ஆப்கான் மக்களுக்கு செப்ரெம்பர் தேர்தல்கள் விடிவைக் கொண்டுவருமா? எனபதை உலகம் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறது.

ஆப்கானின் ஆயுதக் கலாசார வரலாற்றில் தலிபான்களின் ஐந்துவருட ஆட்சி அந்நாடடின் இருண்டகாலம் என்று வருணிக்கப்படுகிறது.

## தலிபான்கள்

சோவியத் ரஷ்யாவின் ஆதரவுடனும் அந்நாட்டுப் படைகளின் முண்டு கொடுப்புடனும் 70களில் ஆட்சிபுரிந்துவந்த டாகடா றஜீப காப,லிலுள்ள ஐ.நா தூதரகத்தில் தலிபான்களால் சுட்டுக்கொல்லப்பட்டுத தூக்கிலிடப்பட்டபோது உலகம் தலிபான்களை நிமிர்ந்துபார்த தது.

பாகிஸ்தானின் செல்லப்பிள்ளையாக வளர்ந்த தலிபான்கள் சோவியத் ரஷ்யாவுக்குச் சிம்மசொப்பனமாக விளங்கிய முஜாஹிடீன் தலைவரான ஹெக்மட்ரயாரைக்கூட வெற்றிகரமாக ஓரங்கட்டினர்.

கிராமப்புற முஸ்லிம் மதகுருவான முல்லமுஹமட் ஓமரின தலைமையிலான தலபானகள் 1998இல் ஏனைய முஜாஹிடீன் குழுக்களை ஓரம்கட்டி ஆப்கானிஸ்தானின் 90% பிரதேசத்தைத தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனா. அப்போதைய ஜனாதிபதி புர் ஹானுதீன் ரபானயும் அவரது அமைச்சர்களும் காபூலை விட்டுத் தப்பியோடினர்.

தலிபான்களை அங்கீகரிப்பு நாடுகள் மூன்றுதான். அவை சவுதி அரேபியா, ஐக்கிய அரபு ராட்சியம், பாகிஸ்தான் என்பவையே அந்நாடுகள். தலிபான்களுடனான ராஜீய உறவுகளை இறுதியில் முறித்துக்கொண்ட நாடு பாகிஸ்தான் ஆகும்.

உண்மையில் ஆட்சியதிகாரத்தை ஏற்ற தலிபான்கள் ஆரம்பத்தில் சட்டம் ஒழுங்கை நிலை



நாட்வடுவதிலும் ஊழலை ஒழிப்பதிலும் மிகத் திறமையாகச் செயற்பட்டனர். அதனால் மக்களாதரவு அவர்களுக்குப் பெருகியது. அதற்குமப்பால் ஆப்கானிஸ்தானின் பெரும்பான்மை ,இனத்தவர்கள் பஷ்ருன் இனத்தவராவர். தலிபான்கள் இப்பிரிவைச் சார்ந்தவர்களாதலால் அவர்களுக்கு ஆதரவு கூடியது.

## தலிபான்களின் தவறும் முடிவும்

முல்லா ஓமாரின் சர்வாதிகாரப் போக்கும் மாற்றுக் கருத்துடையோரைச் சகித்துக் கொள்ளாத தன்மையும் அவரது அமைப்புக்கள் முரண்பாடுகளை ஏற்படுத்தியது.


அடிப்படைவாதப்போக்கும் கடுமையான இஸ்லாம் மதச்சார்ப்புச் சட்டங்களும் அதன் அடிப்படையிலான பொதுத்தண்டனைகளும் மக்களை பீதிகொள்ள வைத்தது. தொலைக்காட்டி, இசைத் தட்டுக்கள், சினிமா என்பன முற்றாகத் தடைசெயயப்பட்டு பத்து வயதிற்கு மேற்பட்ட பெண்கள் பாடசாலை செல்வதும் தடைசெய்யப்பட்டது. ஆண்கள் தாடி வளர்க்கும்படியும் பெண்கள் முகத்தை மூடிப் பர்தா அணியும்படியும் கட்டாயச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தலிபான் பொலிஸார் கைக்கொண்ட முறையால் அவ் இயக்கம் உலகலாவிய ரீதியிலும் உள்ளூரிலும் வெறுப்பைச் சந்தித்தது.

செப்ரெம்பர் தாக்குதலின் சூத்திரதாரியான பின்லேடனுக்குப் புகலிடம் வழங்க முன்வந்த தலிபான்களை அமெரிக்கா சிதறடித்தது. அத்துடன் தலிபான்களின், கண்மூடித்தனமான ஆட்சி முடிவுக்கு வந்தது.

## ஆப்கானும் ஜனநாயகமும்

2001 ஜனவரி 4ஆம் திகதி தலிபான்கள் அமெரிக்காவால் தூக்கி வீசப்பட்டதுடன் ஜனநாயகத்திற்கான காற்று அங்கு வீசத்தொடங்கியது.



ஆயினும் மேற்கத்தேய .பணியிலான ஜனநாயகம் பற்றிய கனவுகள் அந்நாட்டில் மீண்டும் அதிதவிரமாகப் புத்துயிா எடுககும தீவிரவாதத தாக்குதல்களால் பெரும் அச்சுறுத்தல்களுக்குள்ளாகி வருகிறது. குறிப்பாக தேர்தல் டாப்புகளைப் புதுப்பிக்கும் அல்லது புதிதாகப் பதியும் பணியில


பேதுரு யேசுதாசன்
B.A (Hons) pol.science
ACIM (uk), Dip. in Journalism

ஈடுபட்டிருபபோரை தலிபான்கள் குறிவைத்துத தாக்குவதன் மூலம் தேர்தல் ஒன்றே நடைபெறாமற் தடுக்கும் முஸ்தீபில் அவர்கள் இறங்கியுள்ளமை தெளிவாகத் தெரிகிறது. இது எவ்வளவுதூரம் சாத்தியப்படுமென்பதைப் பார்ப்போம்.

ஆப்கானிஸ்தானின் தென்பகுதியின் பெரும் பிரதேசம் இடைக்கால அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. தலைநகரம் காபூலும் அதற்கப்பாலுள்ள பிரதேசங்களும் ஜனாதிபதி ஹமீட் கராஸியின் கரங்களில் இருக்கின்றன. ஆனால் வடபிராந்தியத்தின் பெரும்பாலான பகுதிகளில் ஆயுதக்குழுக்களே ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

ஆப்கானின் வாக்காளர்களில் ஐந்தில் மூன்றரை வீதமானவர்கள் பெண்கள். இவர்களில் ஏறத்தாழ அரைவாசிக்கு மேற்பட்டோர் வாக்காளர் பட்டியலில் தமது பெயர்களைப் பதிந்துவிட்டனர். ஏனையோர் மிகவும் ஆர்வமாகத் தமது பெயர்களைப் பதிவதில் முனைப்பாக இருக்கின்றனர்.

இங்குதான் தலிபான்கள் மிகவும் கொதிப்படைந்துள்ளனர். இந்த ஆர்வத்தை எப்படியாவது தடைசெய்வதில் அவர்கள் திடசங்கற்பம் பூண்டுள்ளனர். இதன் வெளிப்பாடாக அடுக்கடுக்



கான தாக்குதல்களை தேர்தல் பணியாளர் மீது தொடுத்துள்ளனர்.

## கராஸியும் நேட்டோவும்

இந்தத் தாக்குதலால் பீதியடைந்துள்ள இடைக்கால ஜனாதிபதி மொஹமட் கராஸி அமெரிக்கா தலைமையிலான நேட்டோவின் உதவியை நாடியுள்ளார். நேட்டோவும் ஏற்கனவே இருக்கும் தனது ஆறாயிரத்து ஐநூறு துருப்பினருடன் மேலும் ஆயிரத்து ஐநூறு துருப்பினரை அனுப்பியுள்ளது. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை வரும் நவம்பரில் எதிர்கொள்ளும் ஜோர்ஜ புஷ் ஆப்கானின் மக்களாட்சி குறிப்பிட்ட தினத்தில் மலர்வதை உறுதிசெய்வார் என்பதில் ஐயமில்லை.

அமெரிக்காவின் விசுவாசியும் எதிர்கால அரசை அமைக்கக்கூடியவர் என்று கருதப்படுபவருமான ஜனாதிபதி மொஹமட் கராஸியும் தேர்தலில் போட்டியிடுகிறார். 2004ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசிடம் அவா ஆட்சியை ஒப்படைக்கவேண்டும். உலக ஜனநாயக நீரோட்டத்தில் ஆப்கானும் இணையும் நாளை உலகம் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றது.

உலக முதலாளித்துவம் மற்றும் மேலைத்தேய ஜனநாயக முறைக்கும் எதிரான இஸ்லாமிய அடிப்படைவாத சக்திகள் ஆப்கானில் ஜனநாயகம் மலர இடம்கொடுப்பார்களா? என்ற ஐயப்பாடு சிலரிடம் காணப்படுகின்ற போதும், நேட்டோவும் அமெரிக்காவும் தலிபான்களையும் ஏனைய முஜாஹிடீன் குழுக்களையும் முற்றாக அழிப்பதற்குப் பதில் சிறுசிறு தாக்குதல்களை நடாத்தும் குழுக்கள் என்ற நிலை



யில் வைத்திருக்க விரும்புவது தெளிவாகவே தெரிகிறது.

சதாம் ஹுசைனின் சகாப்தம் முடிந்த கையோடு ஈராக் நிர்வாகம் சுதேசிகளிடம் கையளிக்கப்பட்டுளள நிலையில் காலப்போக்கில் சுதேச தவிரவாதம் பற்றிய சுய பரிசோதனையின் அவசியம் ஈராக்கியர்களிடம் தோன்றவே செய்யும். இது ஏற்கனவே ஆப்கானியர்களிடம் ஆரம்பமாகிவிட்டது.

செப்ரெம்பர் தேர்தல்களின் பிற்பாடு ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கத்தின் காத்திரமான செயற்பாட்டின். மூலம் ஜனநாயகத்தின் தாற்பரியங்கள் ஆப்கானிஸ்தானியர்களிடம் விதைக்கப்படலாம்.

# ஒலிம்பிக்

## கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கையில்...




1936, 1948, 1952ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளின் இலச்சினைகள் (EMBLEM) முறையாக.

### 11வது ஒலிம்பிக் போட்டி

**பெர்லின் (BERLIN) 1936**

ஜேர்மனியின் சர்வாதிகாரி அடோலப் ஹிட்லர் (ADOLF HITLER) ஆரம்பித்து வைக்க இந்த ஒலிம்பிக் போட்டிகள் ஜேர்மனியின் தலைநகர் பெர்லினில் ஆரம்பமாகியது.

இதேவேளை ஒலிம்பிக் தீபத்தை தடகள விளையாட்டு வீரரான FRITZ SCHILGEN ஏற்றி வைத்தார். ஒலிம்பிக் சத்தியப்பிரமாணத்தை பாரம்தூக்கும் வீரரான RUDOLF ISMAYR செய்து வைத்தார்.

1936ஆம் ஆண்டு ஓகஸ்ட மாதம் முதலாம் திகதி ஆரம்பமான இவ் ஒலிம்பிக் போட்டிகள் அம்மாதம் 16ஆம் திகதி வரையும் நடைபெற்றன. ஆக 15 நாட்களே இந்த ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் 129




11ஆம், 14ஆம், 15ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிக்காக வடிவமைக்கப்பட்ட சுவரொட்டிகள் முறையே.


போட்டி நிகழ்வுகளுக்காக 49 நாடுகளைச் சேர்ந்த 3963 போட்டியாளர்கள் பங்குபற்றினர். இதில் 331 பெண்களும், 3632 ஆண்களும் அடங்குவர்.

இந்தப் பதினொராவது ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்க நாட்டைச்சேர்ந்த கறுப்பினத்தவரான JESS OWENS நான்கு தங்கப்பதக்கங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

1936ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டிகள் முதன் முறையாகத் தொலைக்காட்சித் திரைகளில் காட்டப்பட்டன. பெர்லின் அரங்கின் வெளிப்புறத்தின் நாலாபுறங்களிலும் 25 இராட்சத திரைகள் வைக்கப்பட்டன. இதன் மூலம் அரங்கிற்குள் உட்பிரவேசிக்க முடியாத பலரும் வெளியில் இருந்து ஒலிம்பிக் போட்டிகளைக் கண்டுகளித்தனர்.

CANOEING என்றழைக்கப்படும் படகோட்டிப் போட்டிகள், கூடைப்பந்தாட்டப் போட்டிகள் (BASKET BALL), குழுக் கைப்பந்தாட்டம் (TEAM HAND BALL) என்பன இவ்வாண்டில் ஒலிம்பிக் போட்டிகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. POLO எனப்படும் விளையாட்டுப்போட்டி இறுதியாக இவ் ஒலிம்பிக் போட்டியில் விளையாட அனுமதிக்கப்பட்டது.

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த MARJORIE GESTRING என்ற 13வயது வீராங்கனை SPRING BOARD DIVING என்றழைக்கப்படும் நீச்சல் சாகஸப்



1948, 1952ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் ஒலிம்பிக் தீபம் ஏற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட விளக்குகள் (TORCH).

போட்டியில் தங்கப்பதக்கம் வென்றதன் மூலம் மிக இளவயதில் இப்பிரிவில் தங்கப்பதக்கம் வென்ற வீராங்கனை என்ற சாதனையைப் படைத்தார். இதுவரை இந்த தனிநபர் சாதனையானது வரலாற்றுப் பதிவேட்டில் உள்ளது.

மேலும் இவ்வாண்டு பெர்லினில் GARMISCH- PARTEN KIRACHEN என்ற இரு நகரங்களை இணைக்கும் BAVARIAN TOWNS இல் இடம்பெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை நோக்குதல் அவசியமாகக் காணப்படுகிறது.




1948ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் ஆறு பிரிவுகளில் வெற்றியீட்டிய (FLYING HOUSE WIFE என அழைக்கப்பட்ட) நெதர்லாந்து நாட்டின் BLANKERS - KOEN

இப்போட்டிகளில் கலந்து கொண்ட நோர்வே நாட்டின் SONJA HENIE என்ற வீராங்கனை பிற்காலத்தல் ஹொலிவூட்டில் நடித்து உலகப் புகழ்பெற்றார். இவர் CHAMONIX எனப்படும் பனிச்சறுக்கு விளையாட்டில் மிகத் திறமையானவர்.

1924ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் இவர் தனது 11வயதில் கலந்துகொண்டார். 1928ஆம் ஆண்டு போட்டியில் பதக்கம் வென்று, தனது 23 ஆவது வயதில் (1936ஆம் ஆண்டு போட்டிகளில்) மூன்று பதக்கங்களைப் பெற்றார்.

பனிச்சறுக்கு விளையாட்டை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட THIN ICE (1937) SUN VELLEY SERENADE (1941) போன்ற ஹொலிவூட் படங்களில் இவர் நடித்தார். இவரது அழகும், திறமையும் அனைவரையும் மயக்கியது. ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற ஹொலிவூட் நடிகையாகிய இவர் வீராங்கனை என்ற பெருமையையும் பெற்றார். இதே போலதான் ஆண்களில் அமெரிக்காவின் விஸ்மூலலரைப் பற்றி நாம் கடந்தவாரம் பார்த்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இவ்வளவு கால ஒலிம்பிக் போட்டிகளின் பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பெற்றுவந்த அமெரிக்கா இம்முறை 56 பதக்கங்களைப் பெற்று இரண்டாம் இடத்துக்குத் தள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த 11வது ஒலிம்பிக் போட்டியை நடாத்திய ஜேர்மனி 33தங்கம், 26 வெள்ளி, 30 வெண்கலம் உட்பட 89பதக்கங்களைப் பெற்று முதலிடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் உலக மகா யுத்தம் காரணமாக அடுத்த இரண்டு ஒலிம்பிக் போட்டிகள் இடம் பெறவில்லை. 12வருடங்களுக்குப் பிறகு 1948ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி லண்டனில் ஆரம்பமானது.

### 14வது ஒலிம்பிக் போட்டி

**லண்டன் (LONDON) 1948**

14ஆவது ஒலிம்பிக் போட்டி 1948ம் ஆண்டு நடைபெற்றது. இந்த ஒலிம்பிக் போட்டியானது ஜூலை மாதம் 29ம் திகதி ஆரம்பித்து, ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதிவரை நடைபெற்றது.


1948ம் ஆண்டு நடைபெற்ற இந்த ஒலிம்பிக் போட்டியே முதன் முதலாக ஒலிம்பிக் நடைபெற்ற அரங்குக்கு வெளியே உள்ள தொலைக்காட்சிகளில் ஒளிபரப்புச் செய்யப்பட்டன. ஆனால் அந்த நேரம் இங்கிலாந்தில் சிலரே தொலைக்காட்சியைத் தம்வசம் வைத்திருந்தார்கள்.

இந்த 14வது ஒலிம்பிக் போட்டியில் 136போட்டி நிகழ்வுகள் நடைபெற்றன. அத்துடன் 59 நாடுகளைச் சேர்ந்த 4104 போட்டியாளர்கள் (390 பெண்கள், 3714 ஆணகள்) கலந்துகொண்டனர்.

CONOEING என்றழைக்கப்படும் படகோட்டும் போட்டியில் முதன் முதலாகப் பெண்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். டென்மார்க் (DENMARK) நாட்டைச் சேர்ந்த HAREN HOFF இந்தப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டியதன் மூலம் முதலாவதாக இப்போட்டியில் தங்கப்பதக்கம் வென்றவர் என்ற பெருமையைப் பெற்றார்.

தடகள போட்டி (ATHLETES) நிகழ்வுகளைப் பொறுத்தவரை நெதர்லாந்து (NETHERLAND) நாட்டைச் சேர்ந்த FANNY BLANKERS -KOEN ஆறு பிரிவுகளில் பங்குபற்றி ஆறு பிரிவுகளிலும் வெற்றி பெற்றார். ஆனாலும் அந்தநேரம் இருந்த ஒலிம்பிக் போட்டி விதிமுறைகளின்படி KOEN நான்கு பிரிவுகளுக்கே அனுமதிக்கப்பட்டார். 200m, 80m HURDLES, 100m DASH, 4x100m RELAY ஆகிய அந்த நான்கு பிரிவுகளிலும் அவர் வெற்றியீட்டினார். இரண்டு குழந்தைகளுக்குத் தாயான இவர் அந்நேரம் "FLYING HOUSE WIFE" என எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்டார்.

17வயதுடைய அமெரிக்க நாட்டைச் சேர்ந்த BOB MATHIAS, DECATHLON போட்டிகளில் பங்குபற்றி பதக்கம் வென்றதன் மூலம் இப்பிரிவில் (DECATHLON)புதிய உலகசாதனை ஒன்றினை நிலைநாட்டினார்.



1936ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டி முதன் முதலாக ஒளிபரப்பு செய்யப்படும் காட்சி



11ஆவது ஒலிம்பிக் போட்டியும், 15ஆவது ஒலிம்பிக் போட்டியும் நடைபெற்ற விளையாட்டு அரங்குகள்.

### நேயல்

இரண்டாம் உலக யுத்தங்களைக் காரணம் காட்டி ஜப்பானும், ஜேர்மனியும் இவ் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்ளவில்லை.

59நாடுகள் கலந்துகொண்ட இந்த 14ஆவது ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்கா (UNITED STATES OF AMERICA) 38 தங்கம், 27வெள்ளி, 19 வெண்கலம் என மொத்தமாக 84பதக்கங்களைப் பெற்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தைப் பெற்றது. இதற்கு அடுத்தபடியாக சுவீடன் (SWEDEN) மொத்தம் 44 (16தங்கம், 11வெள்ளி, 17வெண்கலம்) பதக்கங்களைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றது. பிரான்ஸ் (FRANCE) 10 தங்கம், 6வெள்ளி, 13 வெண்கலம் பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றது.

மொத்தமாக 27 பதக்கங்களைப் பெற்று ஹங்கேரியும் (HUNGARY), இத்தாலி (ITALY) யும் முறையே 4, 5 ஆம் இடங்களைப் பெற்றன. அத்துடன் 14வது ஒலிம்பிக் போட்டியை நடாத்திய பிரிட்டன் (GREAT BRITAIN) 3தங்கம், 14 வெள்ளி, 6வெண்கலம் உட்பட மொத்தமாக 23 பதக்கங்களைப் பெற்று, 6ஆவது இடத்தைப் பெற்றது.

### 15வது ஒலிம்பிக் போட்டி

**ஹெல்சிங்கி (HELSINKI) 1952**

1952ஆம் ஆண்டு பதினைந்தாவது ஒலிம்பிக் போட்டியானது பின்லாந்தின் தலைநகர் ஹெல்சிங்கியில் நடைபெற்றது. இவ் ஒலிம்பிக் போட்டியினை பின்லாந்தின் அப்போதைய ஜனாதிபதி JUHO PAASIKIVI உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

ஒலிம்பிக் தீபத்தினை PAAO NURMI ET HANNES KOLEHMAINEN ஏற்றிவைத்த அதேவேளை பதினைந்தாவது ஒலிம்பிக் போட்டியின் சத்தியப்பிரமாணத்தை ஜிம்னாஸ்டிக் விளையாட்டு வீரரான HEIKKI SABOLAINEN செய்துவைத்தார்.

இவ் ஒலிம்பிக் போட்டியானது ஜூலைமாதம் 19ம் திகதி ஆரம்பித்து ஓகஸ்ட் மாதம் 3 ஆம் திகதிவரை நடைபெற்றன. இதில் 149 போட்டி நிகழ்வுகளுக்காக 69நாடுகளைச் சேர்ந்த 4955 போட்டியாளர்கள் (519 பெண்கள், 4436ஆண்கள்) பங்கு கொண்டனர்.

(18ஆம் பக்கம் பார்க்க...)

# வியாசர் பதில்கள்

## வியாசர் அங்கிள்! மட்டக்களப்பில் நடைபெறும் கொலைகள் பற்றி உங்களது கருத்தென்ன?

*N.அபிராமி மூளாய்.*

*Dear vija !

இலங்கையின் சமாதானக் கப்பல் கரை சேருமா....?

**அமெரிக்க யுத்தக் கப்பல் தடுக்கிறதே.**

*ந.வாகீசன் சாவகச்சேரி.*

*வியாசரே!

பெண்கள் ஏன் ஆண் களைக் கண்டால் வெட்கப் படுகிறார்கள்?



**அட நாசமறுப்பு! இது இர்ாமர்-சீதை காலத்து கதை. இதை இப்ப கேட்டால்...**

*நந்தன் புலோலியூர்.*

*வியா!

நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் கேள்வி களோடு வந்துள்ளேன். நீண்ட பிரிவு எனக்கு வேதனை. உமக்கு எப்படி...?

**நந்தன் நான் மட்டும் சும்மாவா.... இருந்தேன்.. துயர்....வாயடைக்கிறது...**

*A.அஜித் விலவநதெரு.*

*வியா!

சோதனை மேல் சோதனை வந்தால்...?

**சொல்லாமல் சந்நியாசம் கொள்வதே மேல்.**

*K.யாழினி கொக்குவில்*

*வியா!

பூவில் வண்டு தேனெடுக்கும்போது களைத்துப் போவது பூவா? வண்டா?

**இழந்து களைக்கிறது பூ, உண்டு களைக்கிறது வண்டு.**

*S.நித்தியா கொக்குவில்.*

*வியா அங்கிள்!

காவலாக இருக்கும் வேலியே பயிரை மேயலாமா...?

**வேலி மேயக்கூடிய பயிராக இருந்தால் என்ன செய்வது.**

**அடுப்பிற்கு சாதம் வைத்துவிட்டு பானை இறக்கும் முறை உண்டல்லவா?**

## வியா அங்கிள்! காவலாக இருக்கும் வேலியே பயிரை மேயலாமா...?

*R.ஜோன்சன் நாவற்குழி*

*அன்பின் வியா!

ஒருத்தி என் கன்னத்தில் அறைந்துவிட்டாள். என்ன செய்வது?



**எல்லாம் வல்ல கர்த்தரே! உமது மகனாகிய ஜோன்சனுக்கு பாவை ஒருத்தி கன்னத்தில் அறைந்தாள். ஆண்டவரே! நீரே கூறியிருக்கிறீா மறுகன்னத்தைக் குடுக்குமாறு ஆமேன்...**

*M.இந்திரகலா யோகபுரம்*

*வியா!

உள்ளூர் மாப்பிள்ளையிடம் எல்லாத் தகுதியையும் எதிர்பார்க்கும் பெற்றோர், வெளிநாட்டு மாப்பிள்ளையிடம் ஏன் எதையும் எதிர்பார்ப்பதில்லை?

**எல்லாத் தகுதியையும் பணம் கொடுத்து விடுகிறது.**

*S.விதுஷன் வண்ணையூர்.*

*வியா மாமா!

மூன்றாம் உலகப் போர் நிகழ்ந்தால் நிலமை எப்படியிருக்கும்?

**நான்காம் உலகப் போர் நடக்கும் வாய்ப்பே இல்லாதிருக்கும்.**

*எஸ்.துவாரகன் நல்லூர்.*

*வியாசரே!

இளநீர் குடிக்காமல் கோம்பை சூப்பி மாட்டுப் பட்ட அனுபவம் உண்டா?

**என்ன துவாரகன் இவ்வளவு கெதியாக மறந்துவிட்டீர் நீா மாட்டுப்பட்டதை.**

*K.J.J.திலீபன் குப்பிளான்.*

*வியா!

காதலிப்பதற்கு ஒரு வழி சொல்லுங்களேன்?

**பரவாயில்லை, உமது கேள்வி எனக்கு ஆறுதல் தருகிறது.**

*Y.சுகன்யா சாவகச்சேரி.*

*வியா!

என்மனம் ஒடிந்து போய்விட்டது. நிமிர வழி ஒன்று சொல்லுங்களேன்?

**ஒடிந்தது நிமிர நல்ல கொப்பாகப் பார்த்துப் பிடித்துக்கொள்ள வேண்டும்.**

*ச.பிரபாகர் மல்லாவி.*

*வியாசரே!

சுயசரிதை எழுத என்ன தகுதி வேண்டும்?

**எழுதத் தெரிந்தால் போதுமானது.**

*J.K.திலீபன் ஏழாலை*

*வியா!

பெண்கள் ஒரு நேரம் கண்டால் கதைக்கிறார்கள். ஒரு நேரம் கண்டால் கண்டும் காணாத மாதிரிச் செல்கிறார்கள். இது ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா?



**யாருடன் போகும்போது கதைக்கிறார்களில்லை என்பதைக் கவனி திலீபா.**

*V.இளங்கோ கோப்பாய்.*

*வியாசர் அண்ணா!

யாருக்கும் தெரியக் கூடாத ரகசியுத்தை எங்கே வைத்துப் பாதுகாக்கலாம்?

**உள்ளம் என்ற பெட்டகத்தில்.**

*சி.நவீனா கரவெட்டி.*

*Vija uncle!

மனைவிக்கு வால்பிடிக்கும் கணவர்கள் குறித்து...?



**வாழத் தெரிந்த உத்தம புருஷர்கள்.**

*இ.தவசீலன் பொறப்பதி.*

*வியாசர் அங்கிள்!

மட்டக்களப்பில் நடைபெறும் கொலைகள் பற்றி உங்களது கருத்தென்ன?

**ஓம்.. மௌனமாயனமஹா ஓம்...உயிர் பக்குவமாயன மஹா**
**ஓம்... மாட்டிவைககும கேளவிகள் வேண்டாயனமஹா!**

*இ.தர்சினி நாவாந்துறை*

*வியா. அண்ணா!

மனிதர்கள் மாக்களாக மாறினால் எப்படியிருக்கும்?

**இப்ப மட்டும் என்னவாம்.**

*தே.விஜிதா திருநகர்.*

*டியர் வியா!

கண்ணதாசன் பாடல்களில் உங்களுக்குப் பிடித்த வரி ஒன்று கூறுங்களேன்?

**வீடுவரை உறவு....**
**வீதிவரை மனைவி...**
**காடுவரை பிள்ளை....**
**கடைசிவரை யாரோ...**

## Dear vija! இலங்கையின் சமாதானக் கப்பல் கரை சேருமா....?

# வாசகர் பதில்கள் இல — 15

## இறைவன் படைப்பில் விந்தையானது என நீங்கள் வியப்பது எதை?

@ இறைவன் படைத்த உலகம் பரந்து பிரிந்து கிடக்கிறது. தற்போது விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் புதிய கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டு உலகம் சுருங்கிக்கொண்டே வருகிறது. இறைவனால் படைக்கப்பட்ட மனிதனே மனித உயிர்களை உருவாக்கத் துணிந்துவிட்டான்.
இது எங்கேபோய் முடியுமோ அதுதான் வியப்பாக உள்ளது.
கந்த.ஞானமுத்து, கைதடி.

@சிந்துஜா,

இந்த உலகைப் படைத்தது இறைவன் தான். ஒத்துக்கொள்கிறேன்.

அப்படியானால் உலகையே படைத்த அந்த இறைவனைப் படைத்தது யார்? என்ற கேள்விக்கு விடை தேடுகிறேன். கிடைப்பதாயில்லை. விடை இல்லாக் கேள்வியை என் மனதில் படைத்ததுதான் எனக்கு வியப்பானது.

கு.தர்சினி,
மயிலங்காடு.

@ கடவுள் மனிதனைப் படைத்து பல்வேறு பாத்திரங் களைக் கொடுத்து நடிக்க வைக்கின்றார்.

அவனின் மரணம் குழந்தைப் பருவத்திலா? இளமைப்பருவத்திலா? முதுமைப் பருவத்திலா? எப்போது என்று தெரிவிக்காமல் விந்தையாக்கி விட்டார்.

நாம் வரும் போதும் ஏதும் கொண்டுவரவில்லை. போகும்போதும் கொண்டு போகவும் முடியாது என்பதை வியப்பாக்கிவிட்டார்.

பா.சிறிமோகன்,
பொறப்பதி.

@ இறந்துவிடுவோம் என்று தெரிந்துகொண்டும் வாழ ஆசைப்படுவதுதான் விந்தையிலும் விந்தையானது.

பா.செல்வராணி,
வட்டுக்கோட்டை.

@ பத்துமாதம் கருவோடு எமைத் தாங்கி உருக் கொடுக்கும் தாய்மையினை கண்டு வியக்கிறேன்.

நந்தன்,
புலோலியூர்.

@ ஆணாகவும் பெண்ணாகவும் படைக்கப்பட்ட இந்த மனிதவர்க்கத்தை விஞ்சிய படைப்பு எதுவும் இனிமேல் பூமியில் படைக்கப்படப் போவதில்லை. இதனை புதுமைப்படைப்பு எனக் கூறலாம்

N.அபிராமி, மூளாய்.

@ பிறந்த சில மாதங்களில் ‘அம்மா’ என்று அழைத்து ஏதேதோ புரியாத மொழி பேசும் குழந்தையை பார்த்தும்,
பிறந்த சில நிமிடங்களுக்குள்ளேயே தாயின் மடியைத் தேடிப்பிடித்து பால் அருந்திவிட்டு துள்ளிவிளையாடும் கன்றுக்குட்டியைப் பார்ததும்.
புதுக்கவி.

@ கல்லின் கீழ் தேரையை வைத்து அதற்கும் உணவளித்து வாழ்விக்கும் இறையின் செயல் தான் வியப்பானது.

S. ராணி

# வாசகர் பதில் இல - 17

## சராசரி வாழ்க்கை சராசரி வாழ்க்கை என்று எல்லோரும் கூறுகிறார்களே அப்படியென்றால் என்ன?

இக்கேள்வியை அனுப்பிய சங்குநாத வாசகன் R.காந்தன், யாழ்ப்பாணம்
உங்கள் பதில்கள் எமக்குக் கிடைக்கவேண்டிய இறுதித் திகதி 10 - 07 - 2004.
உங்கள் பதில்கள் வந்துசேரவேண்டிய முகவரி:-
‘வாசகர் பதில்’
சங்குநாதம்
இல- 15, வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

இலக்கிய நயம்

# விகடகவிகள்

வ. சின்னப்பா
தனங்கிளப்பு

வினோதமாக அல்லது விகடமாகச் சொல்லப்படும் கவிதையை 'விகடகவி' என்று அழைப்பர். விகடகவிகளைப் பாடும் புலவனையும் 'விகடகவி' என்றே அழைப்பர். விகடகவி என்ற சொல்லே முதலிலிருந்து வாசித்தாலும் இறுதியிலிருந்து வாசித்தாலும் சொல்லும் பொருளும் மாறுபடாத விகடம் உடையது.

விகடகவிகள் வேடிக்கையானவை; விளங்கிக்கொண்டால் தேனாக இனிப்பவை. பெரும்பாலும் இவை தனிப்பாடல்களாகவே உள்ளன. தனிப்பாடல்கள் புலவர்களின் உளளத்துணர்வுகளை உள்ளவாறே உணர்ந்து ருசிக்க உதவுகின்றன. அத்தகைய சில விகடகவிகளைச் சுவைத்துப் பார்ப்போம்.



## சிவனுக்கு உள்ளது அரைக்கண்ணே!

சிவனுக்கு மூன்று கண்கள் – முக்கண் உள்ளதென்பதுதான் நாமெல்லோரும் அறிந்த உண்மை. முக்கண் இருப்பதால் அவனை முக்கண்ணன் என்று ஆன்றோர் சொல்லுவர். ஆனால் புலவனொருவன், சிவனுக்கு முக்கண்ணுமில்லை அவன் முக்கணனும் அல்லன். அவனுக்கு முழுமையாக ஒரு கண்கூட இல்லை. அவனுக்குச் சொந்தமாக இருப்பது அரை(1/2)க் கண் மட்டும்தான் என்று நிறுவிக் காட்டுகிறான். இது விகடமில்லையா?

'முக்கண் என்று, அரனை – சிவபெருமானை, முன்னோர் – முன் உள்ளவர்கள் மொழிந்திடுவர். ஆனால், அக்கண்ணனுக்கு – அழகிய மாலை அணிந்த அவனுக்குச் சொந்தமாக இருப்பது அரைக்கண் மாத்திரம்தான் ஏனென்றால், சிவனை உமையொரு பாகன் என்பர். அப்படியானால் அவனது மூன்று கண்களில் ஒன்றரைக்கண், அவனது உடலில் சரிபாதியாக இருக்கும் உமாதேவியாருக்குச் சொந்தமாகிவிடும். மிகுதி இருப்பது ஒன்றரை(11/2)க்கண். அதிலேயும், ஊன் உண்ணும் வேடனாகிய கண்ணப்பன் முன்பு அப்பிய ஒருகண் போக, மிகுதி இருப்பது அரை(1/2)க்கண் தானே?' ஆகவே சிவனுக்கு அரைக்கண் என்பது நிரூபணமாகிவிட்டது.

"முக்கண் என்றரனை முன்னோர் மொழிந்திடுவர்
அக்கண்ணற் குள்ள தரைக்கண்ணே – மிக்க
உமையாள் கண் ஒன்றரைமற் றூன் வேடன்
கண்ணொன்று
அமையும் இதனால் அறி"

என்று வருகிறது அப் பாடல்.

## அனைதுக் கடவுள்க்கும், அடியார்க்கும் ஆறுதலை!

முருகப் பெருமானுக்குத்தான் ஆறுதலைகள் உள்ளன. அதனால் அவனை ஆறுமுகன் என்று சொல்லுகிறோம். இது உலகம் அறிந்த உண்மை.

ஆனால் விகடகவி ஒருவன், அந்த ஆறுமுகனான சண்முகனுக்கு மாத்திரமல்ல, சங்கரனாகிய சிவனுக்கும் ஆறுதலை; ஐங்கரனாகிய வீநாயகப பெருமானுக்கும் ஆறுதலை; சங்கைப் பிடித்தோனாகிய திருமாலுக்கும் ஆறுதலை; பித்தனாகிய சிவனது பாதத்தைப் படித்தோர்க்கும் ஆறுதலை என்று சொல்கிறான். இதை விகடகவி என்று சொல்லாமல் வேறென்ன கவி என்று சொல்லுவது?

"சங்கரற்கும் ஆறுதலை, சண்முகற்கும் ஆறுதலை
ஐங்கரற்கு மாறுதலை ஆனதே – சங்கைப்
பிடித்தோர்க்கும் ஆறுதலை, பித்த நின்பாதம்
படித்தோர்க்கும் ஆறுதலை பாா"

சங்கரனாகிய சிவனுக்கு கங்கை ஆறு தலையில் உள்ளது. ஆதலால் சிவனுக்கு ஆறுதலை. முருகப்பெருமானுக்கு ஆறுதலைகள் உள்ளன. விநாயகப் பெருமானுக்கு போகும் ஆறு – வழி எல்லாம் தங்கி இருக்க இடமுண்டு (ஐங்கரனுக்கு மாறுதலை – உடலுக்கு மாறுகொண்ட தலை – யானைத் தலை; மாறுதலை என்றும் பொருள் கொள்வர்) சங்கைப் பிடித்தவனாகிய திருமால் பாற்கடலில் பள்ளி கொள்பவர். அவனுக்கு ஆறுதலை; இருப்பிடம் பிரளய வெள்ளம். சிவனே நின் திருவடிகளைப் படித்தறிந்த மெய்யடியார்களுக்கும் நீ ஆறுதலைக் கொடுக்கின்றாய். ஆதலால் அடியார்களும் ஆறுதலை உடையவர்கள் ஆகிறார்கள். (ஆறுதல் – ஓய்வு)

## பன்றிக்கு மார்பிலே கொம்பு

பன்றிக்கு மார்பிலே கொம்பு என்றால் யார் நம்புவார்கள்? கொம்புள்ள மிருகங்கள் எல்லாவற்றிற்தும் தலையிலேதான் கொம்பு இருக்கும். சில மிருகங்களுக்குக் கொம்பே கிடையாது. கொம்பில்லாத அத்தகைய மிருகங்களுள் ஒன்று பன்றி. அதற்குத் தலையிலும் அல்ல, மார்பிலே கொம்பு இருக்கின்றது என்று அடித்துக்கூறி எம்மை அதிரவைக்கின்றார் புலவர். அதெப்படி என்றா கேட்கிறீர்கள்? பொறுங்கள் புலவர் நிறுவிக் காட்டுகின்றார் கேட்போம்.

'தெருமுட்ட – தெருக்கள் நிறையும்படி, பாளைகள் சிதறி விழுமாறு வளர்ந்துள்ள, பூகத்தருமுட்ட – கமுக மரங்களை முட்டும்படி, செவ்வாளை மீன்கள் தாவுகின்ற நீர் வளத்தினைக் கொண்ட திருமுட்டத்தூரிலே – திருமுட்டம் என்ற ஊரிலே, கண்டேன் ஒரு புதுமை பன்றிக்கு மாரிலே கொம்பான வாறு'

" தெருமுட்டப் பாளை சிதற வள்பூகத்
தருமுட்டச் செவ்வாளை தாவும் – திருமுட்டத்
தூரிலே கண்டேன் ஒரு புதுமை பன்றிக்கு
மாரிலே கொன்பான வாறு"

பன்றிக்கு மார்பிலே கொம்பு இருநததைப் புலவர், தாம் கண்டதாகச் சொல்கிறாரே தவிர, எல்லோரும் அவர் சொல்லியது உண்மை என்று ஏற்கும்படி அதை நிறுவிக்காட்டவில்லையே! ஓகோ, புலவர்பொய் சொல்கிறாரா? இல்லை இல்லை. அவர் சொல்வது முற்றிலும் உண்மை. பன்றிக்கு மார்பிலே கொம்பு இருக்கத் தான் செய்கிறது எப்படித் தெரியுமா?

முட்டத்தூரிலே இருப்பது திருமால் கோயில். அதில் கோயில் கொண்டிருப்பவர் திருமால். திருமால் உலக நன்மை கருதிப் பத்து அவதாரங்கள் எடுத்தவர். அவற்றுள் ஒன்று வராக அவதாரம். வராகம் என்றால் பன்றி. எனவே திருமால் பன்றி ஆகின்றார். திருமாலின் மார்பிலே இலக்குமி உறைகின்றாள். இலக்குமி பூங்கொம்பு போன்றவள். பெண்களைப் பூங்கொம்புக்கு உவமை கூறுவதுண்டு. கம்பராமாயணத்திலே கைகேயி அலங்கோலமாகக் கிடந்த நிலையை,

"தாவின் மாமணிக் கலன்முற்றுந் தனித்தனி சிதறி
..............................................
புவுதிர்ந்ததோர் கொம்பு எனப் புவிமிசை
புரண்டாள்"

என்று கம்பரும் பூங்கொம்பைப் பெண்ணுக்கு உவமையாக்கிப் பேசுகின்றார். எனவே கொம்பு இங்கு இலக்குமியைக் குறிக்கின்றது. ஆதலால் திருமாலுக்கு – பன்றிக்கு மார்பிலே இலக்குமி – கொம்பு. ஆகவே பன்றிக்கு மார்பிலே கொம்பு. புலவர் சொன்னது பொய்யா?

## சிவபெருமானின் உடைமைகள்

இந்த விகடகவி வினோதமாகவும் வேடிக்கையாகவும் இருககின்றது. திருமால் தலங்களுள் சிறந்தது திருவரங்கம். அந்தத்திருவரங்கம் தான் சிவனது மாட்டுக் கொடடிலாம். நான்முகனான பிரமனின் வாய்தான் சிவனது குதிரை லாயமாம். பக்தனாக மாறிய கண்ணப்பனின் வாய்தான் அவனது உணவு தயாரிக்கும் இடமாகிய மடைப்பள்ளியாம். திருமாலின் முகம் தான் சிவனது பூசைக்குரிய பூக்கள் மலரும் நீரோடையாம். சிறுத்தொண்டனது மனைவியின் திருவயிறுதான் சிவன் விரும்பும் காய்கறி காய்க்கும் தோட்டமாம். வாசம் மிகுந்த மலர்ப்பொழில சூழந்த தில்லையம்பலம்தான், நாரிபாகனாகிய சிவனுக்கு நாடக சாலையாம். எப்படி இருக்கிறது புலவரின் விகடகவி?

"ஏறுகட்டிய கொட்டில் அரங்கமே
ஈரிரண்டு முகன்வாயி லாயமே
மாறு கண்ணப்பன் வாய்மடைப் பள்ளியே
வாய்த்த ஓடை திருமால் வதனமே
வீறு சேர்சிறுத் தொண்டன் இல் லாள் உந்தி
வேட்ட காய்கறி காய்க்கின்ற தோட்டமே
நாறு பூம்பொழில் சூழ்தில்லை யம்பலம்
நாரி பாகற்கு நாடக சாலையே"

சிவன் முப்புரம் எரிசெய்த போது திருமால் இடபம் – எருத்து மாடு ஆகிச் சிவனைத் தாங்கினார். எனவே திருமால் – மாடு. ஆதலால் திருமால் இருக்கும் திருவரங்கம் சிவனுக்கு மாட்டுக்கொட்டில். அப்போது வேதங்கள் குதிரைகளாயின. ஆதலால் வேதங்களை ஓதுகின்ற திருமாலின் வாய் சிவனுக்குக் குதிரை லாயம். கண்ணப்பர் வாய் குதப்பிய இறைச்சியைப் படைத்தார். ஆதலால் கண்ணப்பன் வாய், சிவனுக்கு உணவு தயாரிக்கும் மடைப்பள்ளி.

திருமால் கண்ணை மலராகச் சாத்தினார். ஆதலால் திருமால் வதனம் சிவனுக்கும்பூ மலரும் நீரோடை. சிறுத்தொண்டரின் மனைவியின் வயிற்றில் வளர்ந்த பிள்ளைக்கறியைப் பெருமான் விரும்பினார். ஆதலால் அவள் வயிறு சிவனுக்குக் காய்கறித் தோட்டம். எப்படி இருக்கிறது விகட கவி?

## நடு எழுத்து அலங்காரம்

நடு எழுத்து அலங்காரம் என்பது ஒரு செய்யுள் அணி. இதை வைத்து விகடகவி சொல்கிறார் புலவர். பாடலில் புலவர் குறிப்பிட்ட சொற்பதங்களின் பொருள் தரும் ஏழு சொற்களில் இந்த அலங்காரம் அமைகிறது.

திருமால் வாகனம் – நாகாரி (குருடன்); நாவாய் – கலம் (ஓடம்); இராசி ஒன்று – கன்னி; சினை – கவடு (கிளை); தெவிட்டார் – ஆரார்; மாதுலன் – மாமன்; கோகிலம – பல்லி.

மேலே குறிப்பிட்ட நாகாரி, கலம், கன்னி, கவடு, ஆரார், மாமன், பல்லி ஆகிய இந்த ஏழு சொற்களின் நடு எழுத்தை எனக்குச் செய்தான் என்கிறார் புலவர். அதாவது, 'காலன் வராமல்' செய்தான் என்று அமையும்.

இச் சொற்களின் முதலும் இறுதியுமான எஞ்சிய பதினான்கு எழுத்துக்களையும் தானே கொண்டான் என்றார்.

அதாவது,

1.நாரி – (பெண்) ஒரு பாகத்திருத்தினான்.

2.கம் – (கபாலத்தை) கையில் ஏற்றான்.

3.கனி – ஒரு மதலைக்கு (விநாயகருக்கு) அளித்தான்.

4.கடு – (நஞ்சு) உண்டான்.

5.ஆர் – (மாலை) ஆத்திமாலை பூண்டான்.

6.மான் – பரிவாய் – அன்பாய் ஒள் கரத்து – ஒளி பொருந்திய கரத்து அமைத்தான்.

7.பலி – (பிச்சை) உகந்தான் – விரும்பி ஏற்றான்.

பைம் பொழில் தில்லையில் ஆடும் பரமன் இவற்றைச் செய்தான்.

"திருமால் வா கனம், நாவாய், இராசி ஒன்று,
சினை, தெவிட்டார், மாதுலன், கோ கிலம்,
இவ்வேழின்
உருவாம் சொல்நடுஎழுததை எனக்குச் செய்தான்
உகந்துபதி னான்கினையும் தானே கொண்டான்
ஒருபாகத் திருத்தினான், கையில் ஏற்றான்
ஒருமதலை தனக்களித்தான், உண்டான்,
பூண்டான்,
பரிவாய் ஒண் கரத்தமைத்தான், உகந்தான்,
இந்தப்
பைம்பொழிற்றில் லையுள் ஆடும் பரமன்தானே"

மேலே குறித்த விகடகவிகள் அனைத்தும் காளமேகப் புலவரின் கவி வண்ணங்களே.

# வேளை வந்த போது...

சிறுகதை

த. ராஜினி
அத்தாயர்

நாள் முழுவதும் உழைத்துக் களைத்த மானிடர்களுக்கு ஓய்வைக் கொடுப்பதற்காகவே இறைவன் இராப்பொழுதைப் படைத்திருந்தான். அன்றைய அந்த ரம்மியமான இராப்பொழுது விரட்டியடிக்கப்பட்டு அதிகாலைப் பொழுதை சேவல்களின் கொக்கரக்கோ ஓசையும் பல்லினப் பட்சிகளின் கீதங்களும் இனிமையுடன் வரவேற்றுக்கொண்டிருந்தன. ஆனால் செல்லப்பாவுக்கு அன்றைய ராத்திரி சிவராத்திரியாகவே இருந்தது. மனம் நிம்மதியற்று சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தது.

மூத்த மகள் ராதிகாவை நாளை ஐந்தாவது முறையாக பெண் பார்க்க வருகிறார்கள். இந்த முறையாவது சரிப்பட்டு வரவேண்டுமென்று அவரது மனம் பாற்கடலானை மன்றாடிக்கொண்டிருந்தது.

பெண்பிள்ளையைப் பெற்றால் அப்பிள்ளைக்கு திருமணம் செய்து கொடுக்கும் வரைக்கும் பெற்றோருக்கு நிம்மதியேது. ராதிகாவை முதன்முறையாக பெண் பார்த்த மாப்பிள்ளை பெண் பார்த்து ஏழு நாட்களின் பின் விபத்தொன்றில் இறந்துவிட்டான். அன்றிலிருந்து ராதிகாவை வாழ்வதற்கே அதிஷ்டம் இல்லாதவள் என்று ஊரார் கதைக்கத் தொடங்கிவிட்டார்கள். ராதிகாவைப் பெண் பார்க்க வருபவர்களுக்கெல்லாம் தேவையற்ற வீண் வார்த்தைகளைச் சொல்லி அவர்களை விரட்டியடித்தார்கள்.

'நாளை ராதிகாவைப் பெண்பார்க்க வருபவர்களுக்கு என்னென்ன க்தை சொல்லி விரட்டியடிக்கப் போகிறார்களோ' என்று நினைத்தே அவரின் இராத்தூக்கம் பறிபோயிருந்தது. வீடிகாலை வேளை கிட்டத்தட்ட 2 மணித்தியாலங்கள் தான் உறங்கியிருப்பார். அதற்கிடையில் செல்லப்பாவின் மனைவி காமாட்சி வந்து எழுப்பினாள்.

''என்னங்க, இண்டைக்கு பிள்ளையைப் பெண்பார்க்க வாறாங்க. இப்பவும் நீங்க தூங்கிக்கிட்டு இருந்தா எப்படி. எழும்பி அலுவல்களைப் பாருங்கோ'' எனக் கூறவும் எழுந்த செல்லப்பா தனது காலைக் கடன்களை முடித்துவிட்டு அன்றைய அவசர வேலைகளில் மூழ்கினார். மாப்பிள்ளை வீட்டாரை அழைப்பதற்கு ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.


மாப்பிள்ளை வீட்டார் அனைவரும் பஸ்ஸில் வந்து இறங்கினார்கள். ராதிகாவை ராதிகாவின் தங்கை கார்த்திகா அலங்கரித்துக் கொண்டிருந்தாள்.

செல்லப்பாவுக்கும் காமாட்சிக்கும் ராதிகா, கார்த்திகா என அழகான இரு பெண்பிள்ளைகள் மாத்திரமே. ராதிகா மாப்பிள்ளை வீட்டார் அனைவருக்கும் தேநீர், பலகாரங்கள் கொடுத்துவிட்டு பெற்றோர் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள்.

ராதிகா பெண்களுக்குரிய அனைத்துப் பண்புகளும் நிறையப் பெற்றதுடன் பார்ப்பதற்கு அழகாகவும் இருப்பாள். அவளைவிட அவள் தங்கை கார்த்திகா இன்னும் அழகாயிருப்பாள். இவர்களுக்கும் வரும் வழியில் யாரோ ராதிகாவைப் பற்றிச் சொல்லியிருக்கவேண்டும். ஆனாலும் யாரோ சொ...தைப் பற்றிச் சொல்லாமல் மறைக்கும் தோரணையில, பெண்பார்க்க வந்துவிட்டு திரும்பிப் போவது சரியல்ல என்பதால் ராதிகாவுக்குப் பதிலாக கார்த்திகாவை பெண் கேட்டார்கள்.

அத்துடன் அந்தச் சம்பந்தமும் குழம்பிப்போனது. மாப்பிள்ளை வீட்டார் போனபின் வீட்டில் அனைவரும் கவலையுடன் இருந்தார்கள். அம்மா அப்பா அக்காவிற்கு கார்த்திகாதான் ஆறுதல் கூறினாள். 'ஏன் இப்படியெல்லாம் நடக்க வேண்டு'மென்ற ஏக்கம் இருந்தாலும் ராதிகாவுக்கு இன்னும் விதி வரவில்லையென்று எண்ணியதால் பழையபடி அவர்கள் வீட்டில் சந்தோஷம் தொற்றிக்கொண்டது.

கார்த்திகா பல்கலைக்கழகத்தில் Management 3ஆம் வருடத்தில் படித்துக்கொண்டிருந்தாள். பல்கலைக்கழகத்துக்கு அருகில் அவளது நண்பிகளுடன் அறையெடுத்துத் தங்கியிருந்தாள். அக்காவிற்கு திருமணம் நடக்காமல் தடைப்பட்டு வருவது அவள் மனதில் தீராத கவலையாய் இருந்தது. எப்படியேனும் கஷ்ரப்பட்டாவது அக்காவின் திருமணத்தை நடத்த வேண்டும் என்று நினைத்தாள்.



Management இல் 4ஆம் வருடத்தில் படித்துக்கொண்டிருந்த மாதவன் கார்த்திகாவுக்கு நல்ல நண்பனாக இருந்தான். அந்தப் பல்கலைக்கழக வளாகத்திலே கார்த்திகா கதைத்துப் பழகும் நண்பனாக மாதவன் இருந்தரன். கார்த்திகா தனக்குத் தேவையான ரியூட்ஸ், நோட்ஸ் எல்லாவற்றையும் மாதவனிடம்தான் வாங்குவாள். அதே போல் அவனும் தனக்குத் தேவையானவற்றை கார்த்திகாவிடம் வாங்குவான்.

அன்றொருநாள் பல்கலைக்கழகத்தில் வகுப்பு முடிந்து கார்த்திகா வெளியேறி வரும்போது மாதவன் எதிர்பாராமல் கார்த்திகாவைச் சந்தித்தான்.

''என்ன கார்த்தி, சைலண்டா போறாய்?'' என வினாவியவாறே கார்த்திகாவுக்கு அருகில் வந்தான்.

''எனக்குப் பொருளியலில் ஒரு ரியூட்ஸ் தேவைப்படுது. உன்னைத் தேடிக்கொண்டே இருந்தன். ஆனால் உன்னைக் காணமுடியவில்லையே'' என மாதவன் சொல்ல,

''அப்படியில்லை நான் வாற மாதிரித்தான் கம்பசுக்கு வாறன். சனி ஞாயிறு தான் வீட்டை போறனான். கிளாஸ் ஒன்றும் கட்பண்ணவில்லை. நான் வாறேன். பிரண்ட்ஸ தேட.ப்போகிறார்கள். நாளைக்கு ரியூட்ஸ் கொண்டுவந்து தாறன்'' என்று சொல்லிவிட்டுச் சென்றாள்.

இன்றுதான் கார்த்திகா மாதவனோடு குறுகியநேரம் கதைத்துவிட்டு சென்றிருக்கிறாள். மாதவனும் கார்த்திகாவும் ஒரு வருடத்துக்கும் மேலாக மனதில் சலனமின்றி உண்மை நண்பர்களாக பழகுகிறார்கள். இருவரும் அரட்டை அடிக்கத்தொடங்கினால் நேரம் போவது தெரியாமல் கதைப்பார்கள்.

இன்று கார்த்திகா நிற்காது உடனே போவது மாதவனுக்கே ஒருமாதிரி இருந்தது. 'கார்த்திகாவுக்கு ஏதாவது பிரச்சினையோ' எனப் பலவிதமாக யோசித்தான். கொஞ்ச நாட்களாக மனம் ஒருநிலையில் நில்லாது சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்தது. காரணம் கார்த்திகாவை நண்பி என்ற நிலையிலிருத்தாமல் அதைவிட உரிமையுடன் கூடிய மனைவி என்ற நிலையில் நிறுத்த அவனது மனம் ஆசைப்பட்டது. அவனின் இந்த எண்ணம் சரியா தப்பா என்று அவனுக்குத் தெரியவில்லை. காாத்திகா போன்ற நல்ல குணமுள்ள பொறுமையான பெண்ணைத் துணைவியாக அடைந்தால் இல்லறம் சிறந்துவிளங்கும் என்று அவன் நினைத்தது நிஜமே. கார்த்திகா என்னைப்பற்றி என்ன நினைத்தாலும் பரவாயில்லை. ஆனால் இந்தக் கிழமைக்குள் இதைப்பற்றிப் பேசியேயாகவேண்டும் என்று நினைத்தான். 'என்னைப் போல அவள் மனமும் சஞ்சலப்படுமா?' என யோசித்தான்.

அடுத்தநாள் கார்த்திகா ரியூட்டைக் கொண்டுவந்து மாதவனிடம் கொடுத்துவிட்டு வகுப்புக்குச் சென்றுவிட்டாள். அன்று கதைக்க வசதியில்லாமல் போய்விட்டது. அடுத்தநாள் மாதவனுக்கு கார்த்திகாவுடன் கதைக்க நேரமிருந்தது. இருவரும் ஒரு மரத்தின கீழ் அமர்ந்தார்கள். படிப்பு பற்றியும் பொது விடயங்களையும் கதைத்து முடித்தபின் மாதவனுக்கு கார்த்திகாவிடம் முடிவைக கேட்கவேண்டும் என மனம் துடித்தது. சிறிதுநேர மௌனத்திற்குப் பின் மாதவன் கேட்டான்.

''கார்த்தி, நான் ஒரு விடயம் கேட்பேன். என்னைத் தவறாக நினைக்காதே'' என்றான்.

''எதுவென்றாலும் தைரியமாகச் சொல்'' என்றாள் கார்த்திகா.

''கார்த்தி, இப்ப கொஞ்ச நாளா உன்னை உயிருக்குயிராய் விரும்புறன். உன் முடிவு என்னவென்று அறியலாமா?'' எனக் கேட்கவும் அதிர்ச்சியில் கார்த்திகாவுக்கு வார்த்தைகளே வரவில்லை. வந்த வார்த்தைகளும் தடுமாறின.

''மா...தவன், நான் இப்பவும் உங்களை பிரண்ட் ஆகத்தான் நினைக்கிறேன். உண்மையைச் சொல்லப்போனால் இப்போது என்னுடைய திருமணத்தைப் பற்றியே மறந்து போயிருக்கிறன். அக்கா ராதிகாவின் திருமணம் நடக்கவேணும் என்பதே என்னுடைய நோக்கம். வாழ்வதற்கே தகுதியில்லை என்று நினைத்து அக்காவின் திருமணத்தைக் குழப்பிற...கள் பொறாமைப்படும் படியாக அக்கா ராதிகாவின் திருமணத்தை நடத்திப் பார்க்கவேண்டுமென்றுதான் ஆசையாக இருக்குது. ஏன் வெறி என்றுகூடச் சொல்லலாம். அக்காவுக்கு என்னைவிட 3 வயது அதிகம். நான் இப்பொழுது இங்கு வந்ததே என்னுடைய அக்காவின் திருமணத்தைப் பற்றி உம்மோடு கதைக்கத்தான். அக்காவின் போட்டோவும் என்னிடம் இருக்கு. அம்மாவும் அப்பாவும் அக்காவுக்கு மாப்பிள்ளை பார்த்து களைத்துவிட்டார்கள். அக்காவுக்கு ஏற்ற நல்ல வரனை நீங்கதான் தேடித் தர வேணும்.

ஊரார் என்ன சொன்னாலும் அதை நம்பாமல் அக்காவைக் கண் கலங்காமல் பார்க்கக்கூடியவராக இருந்தால் அதுவே போதும்'' எனச் சொல்லும்போதே ஒருபோதும் மற்றவர்முன் அழுதிராத கார்த்திகாவின் கண்களிலிருந்து கண்ணீர் கன்னங்களில் தவழ்ந்து நிலத்தை முத்தமிட்டது.

கார்த்திகா அழவும் மாதவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ''என்ன கார்த்தி, சின்னப்பிள்ளை மாதிரி அழுது கொண்டு.... உங்கடை உறவினர், அயலவர் மாதிரி மற்றவையும் முட்டாள் கதைகளையும் மூடநம்பிக்கையையும் நம்புவினமே. எங்கடை பெரியம்மா விசாலாட்சிக்கு சத்தியன் என்று ஒரே மகன். பாங்கில் வேலை செய்கிறான். உங்கட அக்காவிலும் ஒரு வயது கூடவென்று நினைக்கிறன். உங்கட அக்காவின் போட்டோவைத் தா. சத்தியன் எனக்கு அண்ணா என்பதைவிட நல்ல நண்பன் என்று சொல்லலாம். நாங்களிருவரும் அப்படித்தான் பழகுறம். அடுத்தமுறை சந்திக்கும்போது அவன சம்மதத்துடன் நல்ல முடிவாகச் சொல்லுறன். நீ கவலைப்படாமல் போ'' என்றதும், கார்த்திகா போவதற்கு திரும்பினாள்.

''கார்த்தி, நான் கேட்டதற்கு முடிவு...'' என இழுத்தான் மாதவன்.

''அக்காவின் திருமணம் முடிந்தபிறகு அப்பா, அம்மாவிடம் கேளுங்கோ'' எனச் சொல்லிவிட்டுச் சென்றாள். கார்த்திகா இவ்வளவு நாளும் மாதவனை விரும்பவில்லை என்றாலும் மாதவன் செய்யப்போகும் உதவிக்காக அவனுடைய காதலை ஏற்கத் தயாராக இருந்தாள்.

அன்றே வீட்டிற்கு சத்தியனை அழைத்து ராதிகாவின் விடயம் பற்றிப் பேசினான் மாதவன். புன்னகையுடன் இருந்த ராதிகாவின் போட்டோவைப் பார்த்ததும் சத்தியனுக்கு பிடித்துப்போனது. தாய் விசாலாட்சியும் மகனின் விருப்பத்திற்கு தடைசொல்லாது சம்மதித்தாள்.

எல்லோரையும் விட மாதவன் தான் சந்தோசத்துடன் இருந்தான். ராதிகாவின் திருமணத்தை நடத்தி முடித்தால்தானே தனக்கும் கார்த்திகாவுக்கும் திருமணம் நடக்கும் என்கிற நினைப்புத்தான் அவன் சந்தோசத்திற்குக் காரணம்.

அடுத்தநாளே ராதிகா வீட்டுக்குப் போய் பொம்பிளை பார்த்து கல்யாணநாளும் குறிக்கப்பட்டது. அன்றே மாதவன் - கார்த்திகா திருமணம் செய்வதற்கும் இரு வீட்டாரும் சம்மதம் தெரிவித்தனர். இருவரதும் பல்கலைக்கழகப் படிப்பு முடியத் திருமணம் எனச் சொல்லியிருந்தார்கள்.

மாதவனின் தமக்கை கீதாவும் திருமணம் முடிந்து புகுந்த வீட்டுக்குச் சென்றுவிட்டாள். பரமகுரு-பார்வதி தம்பதிகளுக்கு இப்போது ஒரேயொரு கடைக்குட்டி மகனாக மாதவன் இருந்தான். மகனுக்கு நல்ல வாழ்க்கைத் துணை கிடைத்ததில் பூரித்துப் போனார்கள் மாதவனின் பெற்றோர்.

கார்த்திகாவின் குடும்பமும் ராதிகாவிற்கு திருமணம் சரிப்பட்டு வந்ததோடு, கார்த்திகாவிற்கும் மாதவனை நிச்சயம் செய்ததில் மகிழ்ச்சியில் திளைத்தார்கள்.

ராதிகாவுக்கு திருமண நாள் குறிக்கப்பட்டதிலிருந்து உறவினர்களும் ஊரவர்களும் சத்தியனின் வீட்டிற்குப்போய் ராதிகாவைப பற்றி வம்பளந்தார்கள். எல்லோரையும் நல்ல பேச்சுடன் துரத்தியடித்தனர் சத்தியனும் விசாலாட்சியும். அதன்பின் நல்ல மூகூர்த்தத்தில் ராதிகா - சத்தியன் திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறியது. மாதவனும் கார்த்திகாவுமே திருமணத்தை முன்னின்று நடத்தினார்கள்.

செல்லப்பாவுக்கும் - காமாட்சிக்கும் இப்போது கவலை என்பதற்கே இடமின்றிப்போனது. மாதவனும் கார்த்திகாவும் பல்கலைக்கழகத்தில் நன்றாகப் படித்துக் கொண்டிருந்தார்கள்.

காலங்கள் நகர்ந்தன. மாதவனுக்கு பட்டமளிப்பு விழா முடிந்துவிட்டது. கார்த்திகாவிற்கு இன்னும் ஒரு வருடமே இருந்தது. 'கார்த்திக்கு எப்போது படிப்பு முடியும்' என மாதவனின் மனம் ஏங்கிக்கொண்டிருந்தது. அவனது ஏக்கம் இன்னும் ஒரு வருடத்தில் நீங்கும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

# மௌனத்தின் தேடல்கள் – 16

## சாகச வீரர்களின் கூடாரமானது!

நாட்டினுயர் மன்றம்!
நாட்டுமக்கள்
தெரிவு செய்தோர்
கூடும் மன்றம்!
சட்டமியற்றும் மன்றம்!
சட்டத்தைப் பேணுமன்றம்!
நாட்டையாளுவோரின்
நாடாளுமன்றமின்றோ
செங்கோலை முடக்கி
கொடுங்கோலாக்கிய
சாகச வீரர்களின்
கூடாரமானது!

மாருதி,
ஆவரங்கால்.

## யுத்தம்

சமாதானம் வேண்டாம்
யுத்தம் வேணும் என்று ஆர்ப்பாட்டம்
செய்தோர் எல்லாம்
அரசியலில் நுழைந்ததால் தானே
பாராளுமன்றமும் இன்று
யுத்த மன்றமாக மாறியுள்ளது.

S.K.பாலன், அளவெட்டி.

## அரச பாரம்பரியம்

அரச பாராளுமன்ற அவைக்கூடத்தில்
அரசனும் இல்லை ஆண்டியுமில்லை
அராஜகமே மேலோங்கி அவையில்
ஆதிக்கம் செலுத்தப் போகிறதா?
காலாகாலமாகக் கட்டிக்காத்த
அரச பாரம்பரியம் அழிந்தொழிந்தனவா
வீதியில் நடக்கும் விபரீதங்கள்
மன்றுக்குள்ளேயுமா?
புத்தம் சரணம் கச்சாமி
புத்த பிக்குமாரை காப்பாற்று!

கந்த.ஞானமுத்து. கைதடி.

## பாராளுமன்றம் பாதியானது

பார்க்கும் போது வட்டமேசை
அழகாகத்தான் தெரிகின்றது
அங்கே நடந்துமுடிந்த திடீர்த்
தாக்குதல்களால் – அதிர்ச்சியில்
இருக்கிறது பாராளுமன்றம்
எல்லோரும் சேர்ந்து ஒருவனைத் தாக்க
யாருமே எதிர்பார்க்கவில்லை
எதிரே நின்றவர் ஓடிச்சென்று
செங்கோலைத் திருடிச் செல்லவே
அவ்வளவு பிரச்சினையிலும் யாரோ ஒருவர்
அதனைக் கண்டு ஓடிச்சென்று கேட்கவே!
அதன் மகிமையறியாது
உலக்கையைத் தூக்கிச் செல்வதுபோல்
ஒரு நாட்டின் உயிரையே
தூக்கிச் சென்றானே!

M.இந்திரகலா,
யோகபுரம்.

## மனச்சாட்சியின் இருப்பிடங்கள்?

இவை வெற்றுக் கதிரைகள் அல்ல
மக்கள் வாக்கு எனும் உழி கொண்டு
செதுக்கப்பட்ட மனச்சாட்சிகளின்
இருப்பிடங்கள் - ஆனால் இதில்
இருப்பவர்களுக்கு மட்டும் - இவை
ஏனோ மறந்துபோய் விடுகின்றன
இதனால்தான் இன்னமும் நம் இருப்புக்கள்
மாறாமல் இடம்பெயர்ந்தபடி....
எம் இருப்புக்கள் மாறும் வரை இந்த
இருக்கைகளை நம்ப நாம் தயாரில்லை.

நந்தன்,
புலோலியூர்.

## கேலிக்கூத்து


தேர்தலில் வாக்குக் கேட்டு
வெற்றிபெற்ற - மக்கள்
பிரதிநிதிகள் ஒன்றுகூடி
கருமம் ஆற்றும் ஜனநாயகச்
சின்னமாம் மரபு பேணும்
இலங்கை நாட்டின் பாராளுமன்றம்
இன்று அடிதடி ரகளை
என கேலிக்கூத்து ஆனதே!

வீ.யூட்சி,
ஊர்காவற்துறை.

## பாருங்கள் பாராளுமன்றத்தை!

விலங்கு வாழ்க்கை நிலையிலிருந்து
விடுதலை பெற்ற மனிதவின
குழுக்களெல்லாம் குழுமங்களாகி
பாரிலுள்ளோருக்கானது பாராளுமன்றம்
அரசுக்கானது அரசாங்கம்
எல்லாரும் எல்லாம் பெற்று
வாழ்வதே சிறப்பு
சமாதான மலர்கள் கூட
தேம்பித்தேம்பி அழுகின்றன
மதஇன மொழி வெறியால்
கட்சிவல்லரசுகள் போட்டதிட்டத்தால்
தமக்குள்ளே மோதிக்கொண்டனர்
கதிரைகளைத் தக்கவைக்க வந்தோர்
கதிகலங்கிப் போனதால்
நாய்கள் கூட காவலின்றி
பாருங்கள் வெறிச்சோடிக்கிடக்கிறது.

இரா.குமரகுரு,
பண்டத்தரிப்பு.



## தீர்வு என்ன?

அழகாயஒழுங்கமைத்திருக்கும்
ஆசனங்களிலே
ஒய்யாரமாய் உட்கார்ந்திருந்து
அரசியல்பேசும் அதிகாரிகளே
இங்கே...
உங்கள்முன் வைத்திருப்பது
நிம்மதி தரும்
நிரந்தர சமாதானத்தின் தீர்வா?
அல்லது...
தற்காலிக சமாதானத்தின்
ஒப்பந்த மறலா?!

கு.தர்சினி,மயிலங்காடு.

## காக்கைகளின் மோதலினால்....

பாராளுமன்றத்தில்
அரசியல்வாதி வேஷம் போட்டு
பதவிக்காய்
காத்திருந்த காகங்கள்
தம்மினத்துடன் தாம் மோத
அவை போட்ட எச்சத்தால்
நாறிக்கிடக்குது பாரீர்
பாராளுமன்றம்!

வி.எஸ்.ஜீபத்,
மல்லாவி.

## ஐயமேது?

கலவரம் செய்வதில்
வல்லமை படைத்தவர்கள்
அரசியலில் நுழைந்தால்
பாராளுமன்றமும் கூட
கலவர மன்றமாக மாறுவதில்
ஐயமேது.

K.மீனா,
அளவெட்டி.

## பித்தலாட்டம்

ஆடத் தெரியாதவர்கள்
மேடை சரியில்லை என்றது போல்
அரசியல் தெரியாதவர்கள் எல்லாம்
ஆட்சிக்கு வந்தால்
பாராளுமன்றம் தலைகீழாகி
பித்தலாட்டம் போடுவதற்கு
முழுக்காரணமும் வாக்களித்த
மக்களாகிய நாமே.

S.K.குணபாலன்,
அளவெட்டி.

## பார்க்கும் கண்களுக்கு...

இதுவும் பார்ப்பதற்கு
இன்டோர் ஸ்ரேடியம்தான்
இப்போது.....
பார்வைக்கு மட்டுமல்ல
பந்தாட்டமும் நடக்கிறது.

சுஜரி,ஆவரங்கால்.

## யாருமற்று

பகுத்தறிவு உள்ளவரென்று
பாராளுமன்றம் போனவர்கள்
ஆட்சிக் கதிரைக்கு அடிபட
ஆட்சிப்பீடம் சின்னாபின்னமாகி
வீதியிலே நகைப்புக்கு இடமாக...
ஆட்சியைத் திருடமுடியாத
மனிதனோ
திருடினான் செங்கோலை
அரசியல்வாதிகளின்
வாதங்களைக் கேட்டு
சலித்துப்போன பாராளுமன்றமோ
வெறிச்சோடிக் கிடக்கிறது
நீதி சொல்ல யாருமற்று!

M.சந்திரகலா,
யோகபுரம்.

## இரண்டாம்தர பிரஜைகள்

மதமாற்றப் பிரேரணையின்
நிஜங்களின் நிழல்களாய்
தலைநிமிர்ந்து நிற்கிறது
வெள்ளரசு மரம் மட்டும்
சாக்கடையாய் இன்றிருக்கும்
சட்டமியற்றும் மன்றுதனில்
நாம் இன்னும் கூட
இரண்டாம்தர பிரஜைகள்தான்.

எஸ்.டபிள்.ரி.தர்ஸன்,
மல்லாவி.

## நா(டு) ஆளுமன்றம்

ஜனநாயக நாட்டில்
மக்களுக்காக மக்களால்
தெரிவுசெய்யப்பட்ட
பிரதிநிதிகள் கூடி
மக்கள் நலன் காக்கும்
திட்டங்களை
வகுக்கும் மன்றிது
ஆனால்....
இன்றோ
நாடாளப்படுவதற்குப் பதிலாக
நாவால் வாக்குவாதங்கள்
மட்டுமா?
அடிதடி.....
இதுதான் இன்றைய
ஜனநாயகம்!

S.ராணி,
யாழ்ப்பாணம்.

## என்ன இது?

என்ன இது?
நடன அரங்கா?
நாடக சபாவா?
பேச்சுவார்த்தை மேடையா?
பாராளுமன்றமா?
எதுவுமே புரியவில்லை.
பேச்சுவார்த்தை மேடை எனில்...
உரியவர்கள் கூடி
மீண்டும் பேச்சைத் தொடங்க
இறைவனை வேண்டுவோம்.
பாராளுமன்றம் எனில்
இன்றிருப்பது போல- இது
என்றுமே வெறுமையாய்
இருக்கட்டும்
அப்போதாவது எமது நாடு
அமைதியாய் இருக்கிறதா?
சுபீட்சம் அடைகிறதா?
என்று பார்ப்போம்.

புதுக்கவி.

## மெளனத்தின் தேடல்கள் – 18



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் உள்ளத்து உணர்வுகளை *மக்ச்சிறிய* கவிதைகளாக்கித் *தபாலட்டையில்* சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

**கிடைக்கவேண்டிய இறுதித்திகதி** - 10.07.2004
அனுப்பவேண்டிய முகவரி:- மௌனத்தின் தேடல்கள் - 18
சங்குநாதம்
15, வெள்ளாந்தெரு, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

## மறந்துவிடாதீர்!

பாராளுமன்றப் பதவிகளை
மக்களின் வாக்குகளால்
பற்றிப் பிடிப்போரே!
நீங்கள் மக்களுக்கு
வழங்கிய வாக்குறுதிகளை
நிறைவேற்ற
மறந்துவிடாதீர்கள் - ஏனெனில்
நாளை தேர்தல் என்றால்
மக்களிடம்தான் நீவிர்
மன்றாட வேண்டிவரும்!

S.சுதா.யாழ்ப்பாணம்.

## இடம்பிடிக்கும் மட்டும்

ஆட்சிக் கதிரைகளில்
இடம்பிடிக்க
அள்ளி வீசுவார்கள்
வாக்குறுதிகளை....
கதிரையில் அமர்ந்துவிட்டால்
அவையெல்லாம் மறந்துபோகும்
அரசியல்வாதிகளுக்கு.....
இதுதான் ஜனநாயக நாட்டின்
அரசியல்வாதம்....!

A.ரோகினி,கொக்குவில்.

## உபதேசம்

மக்கள் பிரதிநிதிகள்
நாங்களென்று
மார்தட்டி கதிரைபிடித்தோரே!
இன்றுங்களுடையது(கதிரை)
நாளைவேறொருவருடையதாகிறது
மறுநாள்....
இன்னொருவருடையதாகிறது
இது வெறும் பகவத்கீதை
உபதேசமல்ல - என்றென்றும்
எல்லோருக்குமுரியதே
என்றுணர்ந்து
உங்களுடையதாக இருக்கும்போதே
நன்மை செய்யப் பாருங்கள்....
மக்களுக்கு!

துவாரகா,
திருநெல்வேலி.

## கேள்வி?

வாக்குறுதிகளை
அள்ளிவீசி
மக்களிடம் வந்து
வாக்குக் கேட்டார்கள்
மக்களின் புள்ளடியால்
கதிரையில் அமர்ந்தார்கள்
தங்களுக்குள்ளே
சண்டை பிடிப்பவர்கள்
எப்படித்தான்
அழிவில் செல்லும்
நம் நாட்டைக்
கட்டி எழுப்புவார்கள்?

இன்பராஜ்,
மசாலையூர்.

# மானஸ்தன்

## திரைவிமர்சனம்

அந்தக் கிராமத்தில் செல்வாக்குடைய பெரிய மனிதர் விஜயகுமாருக்கு இரண்டு மகன்கள். சரத்குமார், அப்பாஸ். அப்பாஸ் சென்னையில் படிக்கிறார். சரத், படிக்காதவர். கிராமத்தில் விவசாயம் பார்க்கிறார்.



சரத், விஜயகுமாரின் மகனலல என்ற உண்மையை அப்பாஸின் பாட்டி சாகும் சமயத்தில் கூறுகிறார். அதைக்கேட்டு ஆத்திரம் அடையும் விஜயகுமார், சரத்தை வீட்டிலிருந்து வெளியேற்றுகிறார்.

சிவாஜி, கமல், ரஜினி, விஜயகாந்த் என பல்வேறு நடிகர்களையும் ஏற்கனவே இந்தக் கதையில் பார்த்துவிட்டோம். இப்போது புதிதாக சரத்குமாரைப் பார்ப்பதுதான் இப்படத்தின் விசேஷம் (?)

படத்தின் 'சர்ப்ரைஸ்' சாக்ஷிதான். இவர்களுக்கெல்லாம் கிளாமராக நடிக்க மட்டுமே தெரியும் என்று சொல்பவர்கள் சாக்ஷியின் நடிப்பைப் பார்க்க வேண்டும். நடிக்கவைத்தால் எங்களாலும் நடிக்க முடியும் என நிரூபித்திருக்கிறார்.

படம் முழுவதும் சரத்குமார் அழுது கொண்டேயிருப்பது 'ரூமச்'. அப்பாஸ் சில இடங்களில் ஓ.கே. பல இடங்களில் ஓவர்.

இளம் நடிகர்கள், காக்க ராதாகிருஷ்ணனிடம் நடிப்புக் கற்கலாம். இந்த வயதிலும் கலக்குகிறாரே காக்கா! மகன் மன்சூர்அலிகான் பார்க்கக் கூடாது என மதுப்போத்தலை மறைப்பது, சரத்தை வீட்டிலிருந்து வெளியேற்றியதை அறிந்து வேதனைப்படுவது என தனது பாத்திரத்துக்கு உயிர் கொடுக்கிறார்.

தன் மகன் இல்லை என அறிந்து சரத்தை வீட்டை விட்டு விஜயகுமார் வெளியேற்றுவதை நம்பலாம். கொலைசெய்யத் துணிவதாகக் காட்டியிருப்பது நம்பும்படியாக இல்லை.

மானஸ்தன் சரத்குமார், வீட்டைவிட்டு தன்னை வெளியேற்றிய உடனே ஊரைவிட்டுப் போயிருக்கலாம். அல்லது சாக்ஷி இறந்த பிறகாவது போயிருக்கலாம். தம்பி வந்த பின், எல்லோரையும் ரயில் நிலையத்தில் அலைய வைத்துவிட்டுப் போகிறாரே.

ஒரேவிதமான மெட்டுகளைப் போட்டு ரசிகர்களை வாட்டிவதைக்கும் எஸ்.ஏ.ராஜ்குமார், இதிலும் அதே 'ஜீம்பா' வேலை காட்டியிருக்கிறார்.

வடிவேலு காமெடி சில இடங்களில் மட்டும் ரசிக்கலாம். அவரும் இயக்குநர் பாரதியும் கூட்டணி சேரும் காட்சிகள் இம்சை.

சாக்ஷி இறப்பது, சரத் ஊரைவிட்டுச் செல்வது என ஏதோ புதிதாகச் செய்யவிரும்பிய பாரதி, கதையையும் புதிதாக யோசித்திருக்கலாம்.



# நடிகைகளில் என்னைக் கவர்ந்தவர் ஸ்ரீதேவி: 'மன்மதராணி'



ஃபைவ் ஸ்டார் உணவு வகைகளைவிட எனக்குப் பிடித்தது புளியோதரைதான். பெங்களூர் ராஜராஜேஸ்வரி ஆலயத்தில் பிரசாதம் கொடுத்தார்கள். அதன் சுவைக்கு ஈடு இணை ஏது? என்கிறார் தமிழில் 'மன்மதராணி' பட்டம் வாங்கிய சாயாசிங்.

உலகிலேயே ஊட்டிதான் எனக்குப் பிடித்த இடம். அதேபோல் சினிமா நடிகைகளில் என்னைக் கவர்ந்தவர் மூன்றாம் பிறை ஸ்ரீதேவி. அப்படத்திலிருந்து நான் அவருடைய ரசிகை. தேவதையைப் போன்றிருக்கும் அவரின் நடிப்பு மற்றும் முகபாவனைகளுக்காக அவருடைய படத்தை நிறைய முறை பார்த்திருக்கிறேன்.

சிகப்பு மற்றும் நீல வண்ண உடைகளையே விரும்பி அணிவேன்.

தூங்கும்போது எஸ்.பி.பாலசுப்பிரமணியம் மற்றும் லதா மங்கேஷ்கரின் பாடல்களைக் கேட்டுக் கொண்டே தூங்குவேன்.

அசைவ உணவுகளை படத்தில் பார்ப்பது கூட எனக்குப் பிடிக்காது. கிச்சடியைப் பார்த்தால் ஓட்டமெடுப்பேன் என நீண்ட பட்டியலையே வாசிக்கும் சாயாசிங் படிப்பது பத்தாம் வகுப்பு.

# சினிமாச் சிதறல்




# உதவிக்கு எந்தக் 

மூன்று நாயகர்கள் நடித்த அந்தப் படம் பப்ப
அதன் இயக்குநர் கம் தயாரிப்பாளர். இப்போது கடும் நஷ்ட
திருப்பித்தரவேண்டும்' என்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள
இதுவரை எந்தச் சங்கத்திலும் ஒட்டாமல் ஒதுங்கியே
விக்கு எந்தக் கதவைத் தட்டலாம் என்று யோசித்து காண

# கோலிவுட் டயரி

கோலிவுட் ஹீரோ, ஹீரோயின்கள், இயக்குநர்கள் முதல் டெக்னீஷியன்கள் வரையிலான அனைவரின் முகவரி மற்றும் தொலைபேசி விவரமும் ஒரு நூலுக்குள். இதில் ரீ.வி மற்றும் மொடலிங் உலகத்தைச் சேர்ந்தோரின் விவரமும் உண்டு.

விக்டரி எனும் பெயரில் இந்த டயரியை வெளியிட்டுள்ளது ஃப்ரெண்ட்ஷிப் அசோசியேட்ஸ். இதன் இந்திய விலை ரூ 300.



# ஒரு பாடல் மட்டும்

'7ஜி ரெயின்போ காலனி' படத்தில் 'ஜனவரி மாதம்' பாடலை மட்டும் இன்னும் செல்வராகவன் படமாக்கவில்லை. நமிதாவுக்காகக் காத்திருக்கிறார். இந்தப் பாடல் முடிந்ததும் படத்தின் ஷூட்டிங் ஓவர்.

## வெளிநாட்டில் விஜய்

'மதுர' படத்துக்காக நியூசிலாந்து பறந்துள்ளார் விஜய். ஒரு வாரம் ஷூட்டிங் முடித்துவிட்டு சென்னை திரும்புவார். கமலின் 'வசூல் ராஜா'வுக்குப் போட்டியாக ஓகஸ்டில் களத்தில் இறங்குகிறார் 'மதுர'.

# அப்பாவை 'தொந்தரவு' பண



இதுவ
அப்பா தியாகரா
தான் இருந்தார்.
லிருந்து மகனின்
ளைக் கவனிப்ப
தியாகுதான். இ
சினிமாவில் சிறு
திடுமெ
வெளியில் இருப்
தொடங்கிய பிரசா
மாற்றிவிட்டார்.
விவகாரங்களைத் தானே கவனிக்கிறார். அ
பண்ணுவதில்லை!



மச்சி
துஷ்யந்த்- பூஜா

# ...கீ கதவைத் தட்டலாம்?

...படம் பப்படமாகிவிட்டது. ஏகப்பட்ட விலைக்கு அதை விற்றிருந்தார் ...டும் நஷ்டத்தைச் சந்தித்திருக்கும் விநியோகஸ்தர்கள், 'பணத்தைத் ...க்கிறார்களாம்.

...துங்கியே இருந்த தயாரிப்பாளருக்கு இப்போது தர்மசங்கடம். உத ...த்து...காண்டிருக்கிறார்.



'சதுரங்கம்'
ஸ்ரீகாநத், சோனியா அகாவா...

# ...வு' பண்ணுவதில்லை!

இதுவரை பிரசாந்த் தனது ...பா தியாகராஜனின் அரவணைப்பில் ...ன் இருந்தார். கால்ஷீட் கொடுப்பதி...ந்து மகனின் அன்றாட அலுவல்க...க் கவனிப்பது வரை எல்லாமே ...குதான். இடையில் பிரசாந்துக்குச் ...மாவில் சிறு சறுக்கல்.

...திடுமென தான் ஒரு ஏகாந்த ...ளியில் இருப்பதைப் போல உணரத் ...டங்கிய பிரசாந்த், இப்போது ரூட்டை ...றிவிட்டார். கால்ஷீட் மற்றும் கதை ...க்கிறார். அப்பாவைத் தொந்தரவு

# கமலின் 'ஹொபி'

கமலிடம் உங்கள் 'ஹொபி' என்ன என்று கேட்டோம். 'சந்தோஷமாக இருப்பது, சினிமாவைப்பற்றிச் சிந்திப்பது' என கிறார் வசூலராஜா.

'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்' படப்பிடிப்பில் இரவு பகலாக ஈடுபட்டிருககிறனா் கமல் அன்ட் ய,னிட்.

படம் ஓகஸ்ட் 12ஆம் திகதி திரைக்கு வருகிறது.

முகப்பில்
கமல் - ஸ்நேகா



# விரைவில் வருகிறது காதல் FM

'போய்ஸ்' படத்தில் நடித்த மணிகண்டன், ஷிவானிசிங் நடித்துவரும் 'காதல் FM' விரைவில் திரைக்கு வருகிறது.

சூரியன் FM இல் ரேடியோ ஜாக்கியாகப் பணிபுரியும் இளைஞனும் கல்லூரி மாணவியும் ரேடியோ நிகழ்ச்சி மூலம் சந்திக்கின்றனர். பின் அவர்களிடையே காதல் மலர்கிறது. இதுவே படத்தின் கரு என்கிறார் இயககுநர் ஜெயப்பிரகாஷ்.

அரவிந்த், கருணாஸ், வையாபுரி, செம்புலி ஜெகன, அஜய்ரத்னம், அருள்மணி ஆகியோரும் இப்படத்தில் நடிக்கின்றனர்.

# பழைய படம்; புதிய பாலிஷ்!

'சர்வர் சுப்பு' என்கிற படத்தில் விவேக் ஹீரோவாக நடிக்கிறார் என்கிற அறிவிப்பு வெளியானது தெரிந்ததே. நூறு தொழிலாளர்கள் சேர்ந்து படத்தைத் தயாரிக்கிறார்கள் என்று விளம்பரப்படுத்தியிருநதாாகள். ஆனால் இதுபற்றி விசாரித்தபோது, ஏற்கனவே முக்கால்வாசி எடுத்து முடிக்கப்பட்ட ஒரு படத்தைத்தான் இப்படித் தூசிதட்டி இருக்கிறார்கள் என்பது தெரியவந்தது. பழைய படம் என்றால் எடுபடாது என்பதற்காகத் தான் புது 'பாலிஷ்' போட்டு விளம்பரப்படுத்தினார்களாம்.

## ஜக்குபாய் நாயகி பூமிகா?

சூப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் புதிதாக தயாரிக்கவிருககும் 'ஜக்குபாய்' படத்தின் நாயகியாக பூமிகா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என ரஜினிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

* * *

சௌந்தர்யா நடித்த கடைசித் தமிழப் படமான 'மதுமதி' இந்த மாதம் திரைக்கு வருகிறது.

* * *

'மதுர', 'திருப்பாச்சி' படங்களுக்குப் பின் குழந்தைகளுக்கான படம் ஒன்றில் நடிக்கத் திட்டமிட்டிருக்கிறாராம் நடிகர் விஜய்.

* * *

வில்லன் நடிகர் பொன்னம்பலம் தயாரிப்பாளராகிறார். பட அறிவிப்பை விரைவில் எதிர்பார்க்கலாம்.

# ராணியின் பார்வை...



பாலிவுட்டில் அவ்வப்போது ஹீரோக்களுடன் சேர்த்துப் பேசப்படுவோர் வரிசையில் தற்போது சேர்ந்திருக்கும நடிகை, ராணி முகர்ஜி.

சமீபத்தில் மும்பையில் நடந்த ஒரு விழாவில் ராணியை சந்தித்து பல மணிநேரம் பேசிக் கொண்டிருந்தார் ஜெயா பச்சன். 'புடவையில் நீ அழகாக இருக்கிறாய்' என்றும் கூறியிருக்கிறார்.

உடனே பத்திரிகைகள் 'அமிதாபின் மருமகளாகிறார் ராணி' என எழுத ஆரம்பித்துவிட்டன. இதைக்கேட்டுப் பொங்கி எழுந்துவிட்டாராம் ராணி. அபிஷேக்கும் நானும் நல்ல நண்பர்கள்தான் எனக் கூறியிருக்கிறார்.

சில மாதங்களுக்கு முன் இயக்குநர் கரண் ஜோஹருடன் இணைத்துப் பேசப்பட்டபோதும் இதே பதிலைத்தான் தந்தார் ராணி.

இருவரும் ராணியின் ராஜாக்கள் இல்லை என்பது உறுதியாகிவிட்டது.

*ராணியின் பார்வை யார் பக்கமோ...*



கிளாப்ஸ்
சிவசுரேஷ்-பாயல்

# சாதிக்கும் சந்தோஷி

சாதாரண நடுத்தர குடும்பத்திலிருந்து சினிமாவுக்கு வந்தவர் இயக்குநர் ராஜ்குமார் சந்தோஷி. வாய்ப்புத்தேடி ஏகப்பட்டவர்களை சந்தித்தபோது, இவருக்கு சான்ஸ் கொடுத்தவர் நடிகர் சன்னி தியோல்.

இப்போது பாலிவுட்டில் அதிகப் படங்களை கையில் வைத்திருக்கும இயக்குநர் இவர்தான். இவரது லட்சியப் படமான 'மஹாபாரத' (மகாபாரதக் கதை) அடுத்த ஆண்டு தயாராகிறது. இப்படத்தின் பட்ஜெட் எவ்வளவு தெரியுமா? ரூ.100கோடியாம்.

# கவிதைக் கலசம்

## தேடல்



கண்முன்னே பரந்தவுலகம்
என் கண்களிற்குள்....
விழி நீர் துடைத்து
வழி தனையுணர்த்திட
முகம்தெரியாத முகவரியொன்று
தொலைந்து விட்டதென்று
என் தேடல்கள் தொடர்கிறது...
புன்னகை தவழ
புகைப்படத்தோடு அச்சிடுவதற்கு
இது
காணாமல்போனோர் பட்டியலல்ல...

உறுதியான நினைவுகளை
இறுதிவரை பகிர்ந்துகொள்ள
ஏங்கும் இதயமிது....
எவனோ கிறுக்கிய
என் தலையெழுத்தின்
விளக்கத்தை யுணர்த்திட - உன்
கையெழுத்துக்காய் காத்திருக்கும
கண்ணீர்த்துளிகள்...
இனி
என் தேடல்கள் - உன்
பதில்களிற்காய் காத்திருக்கும்.

*ரமேஸ்,வல்வெட்டித்துறை.*

## அறியப்படாத முகவரிகள்

ஆயிரம் ஓசைகளிற்கு அப்பால்
அமைதியான ஓர் இரவின்
சலனமற்ற பொழுதுகளைக்
கொள்ளையிட்ட இராக்கால முகாரி
எங்கும் என்றுமே
கேட்கப்பட்டிராத சோகப்படலம்
காற்றின் மொழிபெயர்ப்பால்
காதுகள் இரவல் வாங்க
இதயத்தின் ஓர் மூலையில்
முள்ளாய்த் தைத்தபோதுதான்
உணர்ந்துகொண்டேன்
அழிக்கப்பட்ட உறவுகளின்
அறியப்படாத முகவரிகள்
இன்னும் இங்கே
தேடப்பட்டுக்கொண்டிருப்பதை....

M.சுதாகர்,பருத்தித்துறை.

## நம் காதலும்



அன்பே!
நீல வானில்
சிறகடிக்கும்
சிட்டுக் குருவிகளாய்
நம் காதலும்
சிறகடிக்கிறதே
பெரும் புயல்
வீசியும் - நம்
காதல் சிறகுகளுக்கு
தூக்கம் வரவில்லை
ஏன் தெரியுமா?
நம் காதலும்
சுயம்வரத்தில் - அல்ல
கல்லறையில்
முடிவதற்காய்...

எஸ்.ராஜ்.
கோவிலடி.

## இறைவனுக்கு ஓர் கடிதம்



எழுதுகிறேன் இறைவா
உனக்கோர் கடிதம்!
முப்பொருளும் அறிந்து
மூவுலகை ஆளும் முதல்வன் - நீ
முழுமையாகப் படித்து முடிவொன்று சொல்லு
விண்ணுலக வீட்டில் நீ வீற்றிருக்கிறாய் என்று
எண்ணுலக மக்கள் உரைக்க யான் கேட்டு
திருவாளர் இறைவனார் தேவலோகம் என்ற
சரியான முகவரிக்கு உனக்கோர்
கடிதம் எழுதுகிறேன்
பூர்வீககாலத்து புராண இதிகாசங்கள்
சொல்லும் நீ அடியவர்க்கு நேரில் வந்து
அற்புதங்கள் செய்தாயாமே - இன்று
நீயேன் அப்படிச் செய்வதில்லை
என்றுதான் கேட்கிறேன்
அதற்குத்தான் உனக்கோர்
கடிதம் எழுதுகிறேன் - இறைவா
நீ கல்லாகி, சிலையாகி, விக்கிரகமாய்
இருப்பதன் மர்மம் என்ன?
பேசாமல் இருக்கின்றாயே பெருமானே
உன் மௌன பாஷையின் அர்த்தத்தை
யார்தான் அறிவார் - இறைவா
அறிகிறேன் அறிகிறேன் இறைவா
அன்றைய மனிதர்க்கு அறிவென்பது இல்லை
இன்றைய மனிதர்கள் உன்னையும் மிஞ்சி
பைத்தியக்காரர் என பட்டமளித்து
வைத்தியசாலைக்கு வழியும் காட்டிவைப்பார்
என்றுதான நீ கல்லாகி சிலையாகி இருக்கின்றாயோ
இறைவா!
அவதார புருஷர்க்கு அருளையே கொடுத்து
நலமாக நாம் வாழ நல்லருளை வழங்கிடுவாய்
அதற்குத்தான் இறைவா - உனக்கு
நற்றமிழால் ஓர் கடிதம் வரைந்தேன்
நாத்திகனும் நான் அல்ல நையாண்டி
செய்பவனும் நான் அல்ல
ஆத்திகனாய் உன்பாதம்
அடிபணிந்து வேண்டுகிறேன்
நல்லருளைத் தருவாயே!

*புயல், வட்டுக்கோட்டை.*

## தீபமே....!

தீபமே
உன்னை ஏற்றமாட்டேன்
உன்னை உருக்கி
ஒளி தருகிறாய்
என்பதற்காகவல்ல!
இருகரம் கொண்டு
ஏற்ற நினைக்கிறேன்
எனினும் - என்
இன்னொரு கரமாய்
இருப்பவள்
கரம் கொடுக்க மறுப்பதால்
விட்டுவிடுகிறேன்.

க.சுபதீபன்,நவாலி.

## உண்மை இதுதாங்க

ஆட்களுக்கும் பெயருக்கும்
அரசாங்க உத்தியோகம்
புரி(செய்)கின்றேன் என்ற
பெருமைதான் மிச்சம்
எடுக்கமுடிந்த கடன்களையும்
ஏற்கனவே எடுத்தும் விட்டேன்
கிடைக்கின்ற சம்பளம் - கடன்
கழித்தேதான் வருகின்றது
எடுக்கிற சம்பளத்தை - நான்
எண்ணிட்டுப் பார்த்தால்
பலசரக்கு வேண்டி எடுத்த
பக்கத்துக் கடைக்கே போதாது
வாழ்க்கைச் செலவுமிப்போ
வானுயர்ந்தே போவதனால்
வெட்கத்தைப் பக்கம் வைத்து
விடுமுறை நாட்களில் நான் - கூலி
வேலை தேடிப் புறப்பட்டேன்
ஜொப் செய்யும் நீ - எங்களை
ஜோக் செய்ய வந்தீரா என்று
உதாசீனம் செய்யிறாங்க
உத்தியோகக்காரன் என்தன்
உண்மைநிலை இதுதாங்க.

நியாயவாதி.

## குட்டிச் சுவர்க்கம்



கீழ்த்தரமாய்ப் பேசுவார்கள்
கிராமத்தை ~ ஆனால்
கிராமம் இல்லை அது
குட்டிச்சுவர்க்கம்!
கிணற்றில்
நீர் வெட்டு இல்லை...
ஊற்றுக்கண்களே உள்ளன
மின்சாரத் தடை
ஏற்படாது....சுடர் விடுவது
விளக்குகள்!
சுவாசிப்பது சுகாதாரக்காற்று
வாகனப்புகை இல்லை...
வானம் பொழிந்தால்
துர்நாற்றம் வராது
மண்வாசம் மனதை மயக்கும்!
கீழ்த்தரமாக நையாண்டி செய்வோரே
கிராமத்தில் குறைதான் என்ன?
ஆடை அணியும் விதம்
குறைவில்லாமல் நகரம் தொடாத
சிகரத்தில்!
காதலிக்கும் விதம்கூட கண்ணியம்தானே?
கீழ் இறக்கிப் பேசுவதற்கு
கிராமத்தில் குறை இல்லை
கிராமவாசி இல்லை அவன்
சுவர்ணவாசி ~ சுவர்க்கத்தில் வாழ்பவன்.

தமிழ்ப்பிரியன்,
தெல்லிப்பழை.

## சிரிப்பில் சிந்திப்பு...! 20



வீடு வந்த சுப்பரும் மகனிற்கு பெண் பார்க்க
தரகரிடம் சென்றாரே
தேடு கின்றார் சுப்பரும் தரகர்
இருந்த வீட்டினையே
மாடு மேய்த்த பையனும் தரகர்
வீட்டினைக் காட்டவே
ஓடு இல்லா குடிசையும் இன்று மாளிகையாய்
காட்சிதரவே
கூடு சேர்த்து வைக்கும் தரகரை காண சுப்பரும்
ஓடியும் வந்தே
பாடுபட்டு 'ஏஸி' கதவையும் திறந்து உள்ளே
புகுந்தாரே
வீடு நிறைந்த 'மாபிள்' நிலத்தால் சுப்பரும் வழுக்கி
வந்தே
சூடு நிறைந்த 'ரீ' குடித்தே 'ரீ.வி' பார்த்திருந்த
தரகருடன் மோதி விழுந்தாரே...

(சுப்பர் வருவார்)

பொன்.சுகந்தன்,
நெல்லியடி.

## உயர்வும் தாழ்வும்

நான் தாழ்ந்தவன் என்ற உணர்வே மிகத் தவறானது. சில துறைகளில் சிலர் உயர்வாக இருக்கலாம். சிலர் தாழ்வாக இருக் கலாம். பாடுவதில் ஒருவர் உயந்தவராக இருக்கலாம். நடனத்தில் ஒருவர் உயர்ந்தவராகவிருக்கலாம். ஒருவர் விவசாயித்தில் சிறந்த திறமை பெற்றிருக்கலாம். ஒருவர் வியாபாரியாகவிருக்கலாம். இவர்கள் பிற தொழில்களில் அல்லது கலைகளில் பிறருக்கு தாழ்ந்வர்களாக இருப் பார்கள். இதனால் தாழ்ந்தவன் என்னும் பொதுவான உணர்ச்சியானது பொருளற்றதாகும். சிலந்தி வலைபோல வலை பின்னவும் தூக்கண் குருவி போல கூடுகட்டவும் தெரியாததால் மனிதர்கள் அவற்றைவிட தாழ்ந் தவர்களென்று சொல்லலாமா? ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் மற்றவர்களைவிட தரம் குறைந்தவராக இருப்பது இயற்கைதான். இத னால் அவர் தாழ்ந்தவரென்பது பொருந்தாது. மனிதர் அனைவரும் சரிநிகர் சமானமே என்பதுதான் உண்மையாகும். இதை மனதில் கொள்ள வேண்டும். தாழ்வுணர்ச்சி நினைவை அகற்றவேண்டும். எத்தனை வகையான துறைகளில் மற்றவர்களைவிட நான் தாழ்ந்தவன் என்று எண்ணிப்பார்ப்பது தேவையற்றதாகும். சிலவகையில் திறமையற்றிருக் கலாம். அதேசமயம் சில துறைகளில் பிறரை விட உயர்ந்தும் இருக்க லாம். அமைதியாக நினைத்துப் பார்த்தால் மற்றவர்களைவிட பல வகை யில் நீங்கள் உயர்ந்தவர்காளகவே இருப்பது உங்களுக்கு விளங்கும்.

## வாசகர் ♥ நாதம்

வலம்புரியின் வாரமலராய்
வாரம் ஒருமுறை வலம்வந்து
வாசகர்களை பரவசப்படுத்தும்
வாரமலர் சங்குநாதமே!
உன்பணி இனிதே தொடர்க
சங்குநாதத்தில் இடம்பெறும்
எல்லா விடயங்களும் தரமானவை
அந்தவகையில் சிறுகதைகள்
குறிப்பிடத்தக்கவை.
மேலும் ஒலிம்பிக் போட்டிகள்
பற்றிய கட்டுரைகள்
வலம்புரி சங்குநாதத்தில்
வெளிவருகின்றமை பாராட்டுக்குரியது
சங்குநாதத்தின் புனிதமான பணி
இனிதே தொடரட்டும்
வாழ்க சங்குநாதம்
வளர்க உன்புகழ்
தொடர்க உன்பணி.

T.S.சயந்தன்,
வட்டுக்கோட்டை.

சங்குநாதமே!
உன் வருகையை வாரந்தோறும்
எதிர்பார்த்துக் காத்திருக்கும் வாசகர்
வரிசையில் நானுமோர் வாசகி
அரசியல் அம்சங்களால் உலகநடப்பு
விளையாட்டுச் சாதனைகள்
வியாசர் பதிலில் சிறிய நகைப்பு
அறிவைப் பெருக்கும் இலக்கிய நயம்
சிறுகதைகள் சினிமாவுலகம்
கவிதைத்தொகுதி, மகளிர் உலகம்
இவற்றை அலங்கரிக்கவும்
சிந்தனையைத் தூண்டவும்
மௌனத்தேடல்
குறுக்கெழுத்துப்போட்டி இவையாவுமே
என்னை கவர்ந்தவை மட்டுமல்ல
உன் பணியும் பல்லாண்டு காலம்
தொடர என் வாழ்த்துக்கள்

இ.மாலதி, பருத்தித்துறை.

ஈழத்தின் நித்திலமாய் ஜொலிக்கும்
சங்கின் இனிய நாதமே!
உன் வரவிற்காய் தினந்தோறும்
ஏங்கித் தவிக்குது என் விழிகளே!
உன் பக்க அமைப்புகள் யாவும் அருமை
எந்தையும் தாயும் என்ற
தொடர் நவீனத்தை எமக்களித்த
ஆசிரியருக்கு நன்றிகள் பல
அரசியலில் யாருக்கும் அஞ்சாது
உண்மையை உண்மையென
உரைக்கும் உனது வீரம் மென்மேலும்
வளரவேண்டும்
உனது பணி இவ்வுலகில் சிறப்பாகத்
தொடர வேண்டும்.

ச.பிரபாகர்,
மல்லாவி.


**SANKUNATHAM**

**S** சாந்தம்
**A** அன்பு
**N** நட்பு
**K** குறும்பு
**U** உள்ளம் தொடும்
கருத்து
**N** நகைச்சுவையுணர்வு
**A** அன்பை வளர்க்கும்
கருத்து
**T** தமிழர் மட்டுமல்ல
**H** எவ்வினரும்
**A** ஆர்வமாகப் படிக்கும்
**M** மறுமலர்ச்சி தரும்
பத்திரிகை.

K.றம்மியதர்சினி,
மானிப்பாய்.

இனிய மாலைப்பொழுது கடற்கரையிலே இதமான தென்றல் நெஞ்சுக்கு இனிமை சேர்க்கக் கடல் அலைகள் கரையைத் தொடுவதற்கு வந்து ஏமாற்றமடைந்து திரும்பிச் செல்வதைப் பார்த்தபடி மணலில் கால்கள் புதைந்திருக்க தன் கை விரல்களினால் மணல் மீது ரஞ்சித், சங்கீதா என்று எழுதி ரசித்தபடி அமர்ந்திருந்தாள் கீதா என்கின்ற சங்கீதா.

# காதலெனும் சோலையிலே.....



சங்கீதா தாய் தந்தையருக்கு ஒரேமகள். இதனால் மிகவும் செல்லப்பிள்ளையாக வளர்ந்துவந்தாள். சிறுவயதிலிருந்தே படிப்பிலும் சரி, விளையாட்டிலும் சரி மிகவும் கெட்டிக்காரியாக விளங்கியதுடன் மட்டுமல்லாது துணிச்சல் மிக்கவளாகவும் இருந்தாள். பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்த அவள் வேலைக்காய்க் காத்திருந்தாள். வேலை விளம்பரங்களைப் பார்த்தும், கேட்டறிந்தும் விண்ணப்பங்களை அனுப்பி வந்தாள். அவளுடைய முயற்சி வீண்போகவில்லை.

அவள் விண்ணப்பங்கள் அனுப்பியவற்றுள் ஒரு கம்பனியிலிருந்து நேர்முகப்பாட்சைக்கு அழைத்திருந்தார்கள். பரீட்சைக்குச் சென்றபோது அவளைப் பரீட்சிப்பதற்காய் அமர்ந்திருந்த கம்பனியின் முதலாளியே ரஞ்சித். பலவிதங்களில் வினாக்களை எழுப்பியபோதும் அவற்றுக்கு மிகவும் சாமர்த்தியமாகப் பதிலளித்தாள். அதனால் அவ்வேலை அவளுக்கே கிடைத்தது.

அவள் வேலைக்குச் செல்ல ஆரம்பித்தாள். இயல்பாகவே அவள் எல்லோரிடமும் சகஜமாகப் பழகுவதனால் எல்லோருக்கும் அவள் மேல் மதிப்பு இருந்தது. கம்பனியில் ஏதாவது தீர்மானங்கள் எடுப்பதாய் இருந்தாலும் அவளையே நாடுவர். ரஞ்சித்தைப் பற்றிக் கூறவும் வேண்டுமா? சங்கீதா அவனுடைய இதய தேவியாக வலம் வந்தாள். எத்தனை நாள் மூடி மறைப்பது. எனவே ஒருநாள் தைரியமாகச் சங்கீதாவிடம் கேட்டுவிட்டான்.

“கீதா, எனக்கு சுத்தி வளைச்சுப் பேசத்தெரியாது. நேரடியாகச் சொல்லுறன். உங்களை எல்லோரும் திருமதி ரஞ்சித் –சங்கீதா என்று அழைக்க உங்களுக்கு சம்மதமா?” என்று கேட்டவுடன் கீதாவுக்கு தன் காதுகளையே நம்பமுடியவில்லை. சற்றுநேரம் மௌனமாக அமர்ந்திருந்தவள் பின்னர்,

“எனக்குச் சம்மதம். என்னுடைய அம்மா அப்பாவும் சம் மதிப்பினம். என்னுடைய ஆசைக்கு குறுக்க நிற்கமாட்டினம். ஆனால்....” இழுத்தாள்.

அவளின் சம்மதம் என்ற வார்த்தையைக் கேட்டு மனதில் ஆயிரக்கணக்கான பட்டாம்பூச்சிகள் சிறகடித்துப் பறக்க மகிழ்ச்சியடைந்த ரஞ்சித், அவள் ‘ஆனால்....’ என்று இழுத்ததும்,

“என்ன கீதா எதுவானாலும் பரவாயில்லை சொல்லுங்கோ” என்றான். கீதாவும்,

“நீங்கள் பெரிய பணக்காரர். ஆனால் நான்... உங்கட அப்பா அம்மா சம்மதிப்பினமோ தெரியேல்லை. பிறகு ஏன் வீணாக ஆசையை வளர்க்கவேண்டும் எண்டுதான் யோசிக்கிறன்” என்றாள். அவள் கூறி முடிக்கும்வரை பொறுமையாகக் கேட்ட அவன்,

“ப்பு,.... இவ்வளவுதானா? நான் பயந்திட்டன். கீதா சத்தியமா நான் உங்களை மனப்பூர்வமாகக் காதலிக்கிறன். நிச்சயமா உங்களைத்தான் கட்டுவன்” என்று அவளது தலையில் அடித்து சத்தியம் செய்தான். இதன்பிறகும் அவனுடைய காதலை ஏற்காமல் இருக்க அவளால் முடியவில்லை. எனவே அவளும் அவனைக் காதலிக்க ஆரம்பித்தாள்.

இருவரும் காதலிக்க ஆரம்பித்து இருவருடங்கள் ஓடிவிட்டன. சங்கீதாவின் வீட்டில் பெற்றோர் பச்சைக் கொடி காட்டிவிட்டனர். எனவே அவள் ரஞ்சித்திடம், “என்ன ரஞ்சித், நான் எங்கடை வீட்டை சொல்லிச் சம்மதம் வாங்கீட்டன். நீங்கள் எப்ப உங்களுடைய அம்மா அப்பாவிடம் சொல்லப் போறீங்கள்? எத்தனை நாளைக்குத் தான் அவர்களிடமிருந்து மறைக்கப் போறீங்கள்.. சொல்லுங்கோவன்...” என்று கேட்டாள். ரஞ்சித் புன்னகையுடன்,

“ஏன் கீதா, பயமா இருக்கா? நான் உன்னைக் கைவிட்டிடுவன் என்று நினைக்கிறியா? இவ்வளவு காலமா பழகியும் நீ என்னில வைச்சிருக்கிற நம்பிக்கை இவ்வளவு தானா?” என்று கேட்டவுடன், அவள் பதறியபடி

“இல்லை ரஞ்சித், உங்களில எனக்கு நம்பிக்கை இருக்குது. ஆனாலும் பயமா இருக்குது. ஒருவேளை நீங்கள் எனக்குக் கிடைக்காமல்போனால் பிறகு...” மேலே சொல்லமுடியாது தவித்தாள். அவளின் தவிப்பைப் புரிந்துகொண்ட ரஞ்சித்,

“கீதா sorry. நீ இவ்வளவுதூரம் சொன்னதுக்குப் பிறகும் நான் அம்மா அப்பாட்டை சொல்லாமல்விட விரும்பேல்லை. இன்றைக்கே அவர்களுக்குச் சொல்லி நாளைக்கு அவர்களின்ர சம்மதத்தோடதான் வருவன் போதுமா? நாளைக்கு இதேநேரம் சந்திப்பம்”

* * *

கடல் அலைகள் வேகமாக அடித்ததனால் காலில் நீர் சில்லிட்டதும் திடுக்கிட்ட கீதா சுயநினைவுக்கு வந்தாள். சுற்றுமுற்றும் பார்த்தாள். அவளுக்குச் சற்றுத்தொலைவில் இருந்த கல்லில் அமர்ந்தபடி சிறு கற்களை எறிந்துகொண்டிருந்தான் ரஞ்சித்.

ரஞ்சித்தைக் கண்டதும் கீதா எழுந்து அவனுக்கருகில் சென்று பதட்டத்துடன்நின்றாள். ஆனால் அவனோ மௌனமாக அமர்ந்திருந்தான். எனவே மௌனத்தைக் கலைத்த அவளே,

“என்ன ரஞ்சித், ஏன் பேசாமல் இருக்கிறீங்கள்? அம்மா அப்பாட்டை சொல்லிட்டீங்களோ? என்ன சொன்னவை?” என்று தவிப்புடன் கேட்டாள்.

அவனோ, “ம்... கீதா நான் அவர்களிடடைச் சொன்னனான். ஆனால்..” என்று பீடிகைபோடவே,

சங்கீதா, “ரஞ்சித் நிப்பாட்டுங்கோ. உங்களால சொல்லமுடியாது. நானே சொல்லறன். உங்கட பெற்றோர் உங்களுக்கு வேற ஒரு பெண்ணைப் பார்த்து, கட்டினா அவளைத்தான் கட்டோணும் இல்லாட்டி நாங்கள் செத்திடுவம் எண்டு சொல்லியினம். அதனால நீ என்னை மறந்திடு என்றுதானே சொல்லப்போறீங்கள். சொல்லுங்கோ இது தானே ரஞ்சித் நீங்கள் சொல்ல நினைச்சது. சொல்லுங்கோ..” என்று திரும்பத் திரும்ப கேட்டாள். ஆனால் ரஞ்சித்தோ மௌனமாய் தலையைக் குனிந்தபடி அமர்ந்திருந்தான்.

அவன் மௌனமாய இருப்பதைக் கண்ட கீதாவுக்கு கோபத்துடன் பொறுமையிழந்தாள். கடலுக்குள் விழலாம் போல எழுந்த உணர்வுகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு,

“ரஞ்சித் எல்லா ஆண்களுமே இப்படித்தான். ஆரம்பத்தில பழகேக்கை நீ இல்லை என்றால் நான் இல்லை என்று கதைப்பினம். பிறகு... ஏன் ரஞ்சித் தெரியாமல்தான் கேட்கிறன் நீங்கள் என்னை நேசி என்று சொல்லியவுடன் நேசிக்கிறதுக்கும் மற என்று சொல்லேக்கை மறக்கிறத்துக்கும் என்ரை இதயம் என்ன லைற் சுவிச்சோ. பரவாயில்லை. கடைசியில உங்கட பணக்காரப் புத்தியைக் காட்டிட்டிங்கள். ஆனால் அதுக்காக நான் கவலைப்பட்டு என்னுடைய வாழ்வைப் பாழாக்கமாட்டன். என்னுடைய உயிரைப் போக்குற அளவு நான் கோழையும் இல்லை. உங்களுக்கு எதிரிலேயே நான் சந்தோஷமா வாழ்ந்து காட்டுவன். Ok. bye உங்களுக்கும், உங்கட காதலுக்கும்” என்று மூச்சுவிடாமல் பேசி முடித்தவள் அவனுடைய முகத்தைக்கூடப் பார்க்கப் பிடிக்காமல் விறுவிறுவென நடந்து சென்றாள்.

கீதா தன் கண்களை விட்டு மறையும் வரை பார்த்துக்கொண்டிருந்த ரஞ்சித், ‘கீதா என்னை மன்னிச்சிடு. உன்னைப் பற்றி எனக்கு நல்லாத் தெரியும். நான் உன்னைப் புரிஞ்சுகொண்ட அளவு நீ என்னைப் புரிஞ்சுகொள்ளவில்லை. நன்மைக்குத்தான்...

கீதா நான் நேற்று அம்மா அப்பாட்டை சொன்னவுடன் தான் எனக்கு ஒரு உண்மையை அவை சொன்னவை. நான் உயிரோட இருக்கப் போறதே இன்னும் கொஞ்சநாள்தான். ஏனெண்டால்... எனக்குப் புற்றுநோய் நல்லகாலம். நேற்றாவது தெரிஞ்சுது. உன்னிடம் எப்படிச் சொல்வது என்று நினைச்சுக் கொண்டு வந்தனான். ஆனால் என்ரை பிரச்சினையை நீயே இலகுவாக தீர்த்துவிட்டாய். என்னை நீ வெறுத்திட்டாய். இதுபோதும் எனக்கு. நீ எங்கை இருந்தாலும் சந்தோஷமா இருக்கவேணும். அதுதான் என்னுடைய ஆசை. ஆனால் என்னுடைய மனசில நான் சாகும் வரை உன்னுடைய நினைவுகள் மட்டும்தான் இருக்கும்’ என்று வாய் விட்டு புலம்பியவனின் கண்களில் இருந்து கண்ணீர் ததும்பியது.

**த. தனரூபினி**
**பருத்தித்துறை**

## இவ்வார சிறுகதைகள்

# சினேகிதியே உனக்காக...!



ப்ரியமானவனே!
என் புன்னகைகள்
நிஜமானபோது
அருகில் எவருமில்லை
பொய்யான போது
நீ இருக்கிறாய்
அதுவும் நிழலாக
உன்னை நினைக்கவும்
முடியவில்லை
மறக்கவும் சக்தி இல்லை
என்ன செய்வேன்
என் உயிரே!

என எழுதி முடித்து பேனாவை மூடிய மிதிலாவால் தன் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. விசும்பலுடன் வெளிப்பட்ட அழுகையை கதறி அழுதுவிட்டால் எங்கே அம்மா காரணம் கேட்டு விடுவாளோ என்ற பயத்தில் மௌனமாகவே அழுதவாறு ஜன்னலினூடாக வானத்தைப் பார்த்தாள். அதோ கருமுகில் கூட்டத்துடன் மழை வரப் போவதை உணர்ந்தியது அவளின் மனதைப் போல.

“மிதிலா” என்ற குரல் கேட்டு சட்டெனக் கண்ணீரைத் துடைத்துவிட்டு நிமிர்ந்தவளுக்கு தூக்கிவாரிப் போட்டது.

“என்னடி இப்படிப் பார்க்கிறாய்” என்ற சிவாவின் கேள்வியால் சுயநினைவுக்கு வந்தவள் “வாடி என்ன இந்தப் பக்கம்” என்று கேட்டுவிட்டு பொய்யான ஒரு புன்னகையை வலுக்கட்டாயமாக உதிர்க்க முயற்சித்தாள். பாவம்! அதுவும் அவளை ஏமாற்றிவிட்டது ராமபாலனைப் போல.

“என்னடி ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?” என்றாள் சிவா.

“ஒன்றுமில்லையடி” என்றவளுக்கு மேற்கொண்டு என்ன பேசுவது என்று புரியவில்லை. சிறிது நேரம் மிதிலாவுடன் அளவளாவி விட்டுச் சென்றாள் சிவா. போனவளையே பார்த்துக்கொண்டிருந்த மிதிலாவால் பெருமூச்சொன்றை விடுவதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியவில்லை.

சிவாவும் மிதிலாவும் ஆரம்பம் முதல் ஒன்றாகவே கற்று இன்று உயர் தரத்தில் கலைப்பிரிவில் கற்றுக்கொண்டு இருப்பவர்கள். சிறு வயது முதல் நண்பிகளாகி விட்டதாலோ என்னவோ ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொண்டனர். எந்த ஒரு விடயத்திலும் கருத்து வேறுபாடு கூட ஏற்பட்டதில்லை. இப்படிப் பட்டவர்களின் வாழ்வில் தான் விதி ராமபாலன் எனும் பெயரில் விளையாடத் தொடங்கியது.

ஆம் அப்போதுதான் ராமபாலன் கலைப்பிரிவுக்கு தமிழ்ப்பாட ஆசிரியராக வந்தார். அவரைக் கண்ட முதல்நாளே மிதிலாவின் மனதில் ஏதோ ஒரு உற்சாகம் பிறப்பதை உணர்ந்தாள். அது ஏன் என்று அவளுக்குப் புரியவில்லை...

மிதிலா கலகலப்பானவள். யாரிடமும் இலகுவில் பழகி விடுவாள். அவளிடம் பெரிய அழகொன்றும் இல்லைத்தான். ஆனால் அவளை ஒருமுறை பார்த்தால் மீண்டும் மீண்டும் பார்க்கத்தூண்டும் ஏதோ ஒரு கவர்ச்சி. இதை யாராலும் மறுக்கமுடியாது.

ராமபாலன் வகுப்புக்கு வரும் போதெல்லாம் மிதிலாவின் மனது பதறும். ஏன் என்று அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதுவரையில் புரியாதிருந்த தமிழ்ப்பாடம் பாலனின் வருகையால் புரிந்துகொள்ள முடிந்தது. இவற்றினால் மிதிலாவின் மனதில் விதையாக விழுந்த காதல் மெல்ல மெல்ல மரமாக வளரத் தொடங்கியது. பாடசாலைக்கு முக்கிய காரணம் இன்றி கட் அடிப்பதை நிறுத்தினாள். பாலனை ஆவலுடன் எதிர்பாாத்தாள்.

அன்றொருநாள் வகுப்பில சிவாவின் பேர்சை எடுத்து கண்ணாடியில் தன்னைப் பார்த்தவளுக்கு ஏதேச்சையாக ஏதோ ஒரு காகிதம் தட்டுப்படவே எடுத்துப் பிரித்துப் பார்த்தாள் மிதிலா.

வானமே அவளது தலையில் இறங்கியது போலிருந்தது. அவள் கால் தரையில் இல்லை. பூமி இரண்டாகப் பிழந்து அவளை உள்ளே பாதாளத்துக்கு கொண்டுபோவதைப் போல் இருந்தது.

ஆம். அவள் யாரை உயிருக்குயிராக நேசித்தாளோ, யாரோடு அவள் காலமெல்லாம் வாழ்க்கை என்ற வண்டியில் செல்ல விரும்பினாளோ அதே ராமபாலன் சிவாவுக்கு எழுதிய லவ் லெட்டர்தான் அது. ஒருவாறு சமாளித்துக்கொண்ட மிதிலாவின் கண்கள் தீர்க்கமான ஒரு முடிவைக் காட்டியது.

வகுப்புக்கு வந்த சிவா மிதிலாவின் முகத்தைப் பார்த்துவிட்டு “என்னடி எந்தக் கப்பல் டவுன்...” என்று கேலியாகக் கேட்டாள். விசயத்தை மிதிலா விளக்க இவ்வளவுநாள் மறைத்த குற்ற உணர்வுடன் தன் காதலை சிவா சொல்லிமுடித்தாள்.

“இவ்வளவு நாளும் இந்த விஷயத்தை மறைத்தது குற்றம் தான். பிளீஸ்டி...... என்னை மன்னித்துவிடு. எங்க இரண்டு பேரையும் நீதான் சேர்த்து வைக்க வேணுமடி” எனறாள் சிவா.

**சி. வேணி**
**மூளாய்**

தன்னை ஒருவாறு சுதாகரித்துக்கொண்ட மிதிலா பரீட்சைக்காகப் படிக்கத் தொடங்கினாள். பரீட்சையும் முடிவடைந்தது. சிவா வீட்டில் சிவாவுக்கு மாப்பிளை பார்க்கும் படலமும் தொடங்கியது. மிதிலா மெதுவாக சிவா -ராமபாலன் விஷயத்தை சிவா வீட்டினர்க்கு கூறினாள். சிவாவின் அம்மா அப்பாவின் வசைமாரிகளை வேண்டியும் நண்பிக்காக பாலனைப் பற்றி நல்ல விதமாக எடுத்துக் கூறி சம்மதம் பெற்றுக் கொடுத்தாள்.

(18ஆம் பக்கம் பார்க்க....)




# வாழு!

மானம் ஒன்றென வாழு - அதை
மறக்காமல் என்றென்றும் வாழு; நல்ல
தானம் கொடுத்து நீ வாழு - உந்தன்
தலைமுறை நிமிர்ந்திட வாழு!


ஊரின் நடுவினில் வாழு - நாளும்
உண்மையைச் சொல்லி நீ வாழு; உன்
பேர் என்றும் நிலைக்கவே வாழு - நாளும்
பெருமை புகழோடு வாழு!

கூடி உறவோடு வாழு - பல
கொடுமைகள் செய்யாது வாழு;
ஆடிப்பாடித் தினம் வாழு - தூய
அன்பு செலுத்தி நீ வாழு!


கல்வி கற்றிட வாழு - பல
கலைகள வளர்க்க நீ வாழு; நல்
சொல்தனை உரைத்திங்கு வாழு - உன்
மண்ணில சுகமாக என்றென்றும் வாழு!.

அபுதாபன்,
புதுக்குடியிருப்பு.

## இவை உங்களின் ஓவியங்கள்



அஜந்தன்
கிங்ஸ்டன். ச. பா. பாடசாலை



கிரிசான்
கிங்ஸ்டன். ச. பாடசாலை




சதஸ்
கி. ச. பாடசாலை.

# பொது அறிவு

1. மனித உடலில் இரத்தம் பாயாத ஒரே இடம் எது?
2. இலங்கையில் முதன்முதலில் ஸ்தாபிக்கப்பட்ட பெண்கள் கல்லூரி எது?
3. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற வாசகத்தைக் கூறியவர் யார்?
4. நமது நாட்டில் பறவையின் பெயருடன் ஊரின் பெயர்கள் இணைந்து வருகின்றன. அவற்றில் சில தருக?
5. வனவிலங்குகளுடன் வரும் ஊரின் பெயர்கள் சில தருக?
6. குரல் இல்லாத மிகப் பெரிய மிருகம் எது?
7. முதலாம் உலக மகாயுத்தம் எத்தனை ஆண்டுகள் நடைபெற்றது?

## குதிரையின் வயது



**குதிரையின் வயதை எப்படிக் கண்டுபிடிக்கிறார்கள்?**

அதன் பற்களைக் கொண்டு.

## வானவில்லின் உருவம்

**வானவில்லின் முழு உருவமும் அரைவட்டம் தானா?**

வானவில்லின் முழு உருவமும் முழு வட்டம் தான். நம் கண்களுக்கு இது அரைவட்டமாகத் தெரிகிறது அவ்வளவே. முழு வட்ட வானவில்லைப் பார்க்கவேண்டும் என்றால் விமானத்தில் இருந்து காணலாம்.

## ஒன்றுக்கு மேற்பட்ட இதயம்!



**ஒன்றுக்கு மேற்பட்ட இதயம் கொண்ட உயிரினம் ஏதாவது இருக்கிறதா?**

இருக்கிறதே! 'கட்டில்பிஷ்' என்று ஒரு மீன் வகை. கடலில் மட்டுமே வாழக்கூடியது. இதற்கு 3 இதயங்கள். இரண்டு இதன் செதில்களுக்கு கீழே. 3வது உடலக்கு நடுவில்.

## வெங்காயத்துக்கு எந்த நாடு?



**வெங்காயம் எந்த நாட்டில் தோனறியது?**

பல நாடுகள் இதற்கு உரிமைகோருகின்றன. இருப்பினும் எகிப்தில் பிரமிட் கட்டப்பட்ட காலத்தில் கட்டடப் பணிகளைச் செய்து வந்த அடிமைகளுக்கு உடல் வலிமைக்காக வெங்காயம் வழங்கப்பட்டதாம். வெங்காயத்தை எகிப்தியர் தெய்வமாகவே வணங்கினார்கள். பிரமிட்டுகளின் காலம் கி.மு 3000. எனவே எகிப்துதான் இதன் தாயகம்.

# கண்டுபிடியுங்கள்

கீழே தரப்பட்ட சொற்களில் மூன்று ஆங்கிலச் சொற்களும் இலக்கங்களாலான இரகசியக் குறியீடுகள் தரப்பட்டுள்ளன.

இவ் இரகசியக் குறியீடுகளைக் கருத்தில் கொண்டு நான்காம் ஆங்கிலச் சொல்லுக்குரிய இரகசியக் குறியீட்டை கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

**SOLD** - 3518 **LAME** - 1576
**MOST** - 7432 **MATES** ..........

1) 48327 2) 34821 3) 74128
4) 14825 5) 64351

## விடைகள்

பொது அறிவு
1. கண்ணின் கருவிழிகள்.
2. உடுவிலில் உள்ளது.
3. திருமூலர்.
4. கொக்குவில், கிளிநொச்சி, காக்கைதீவு, புறாப்பொறுக்கி.
5. ஆனைக்கோட்டை, ஆனையிறவு, பன்றித்தலைச்சி, கீரிமலை, நவக்கீரி என்பனவாகும்.
6. ஒட்டகச்சிவிங்கி.
7. 4 வருடங்கள்.

கண்டுபிடியுங்கள்
2 (34821)

# எது சொர்க்கம்?



காட்டிலே வாழ்ந்து வந்த குள்ளநரிக்கு காட்டுவாழ்க்கை போரடித்துப் போய்விட்டது. காட்டுக்கு வெளியே உள்ள நாடு நகரங்களைச் சுற்றிப்பார்க்க ஆசைப்பட்டது. இது பற்றி யாரை விசாரிக்கலாம் என யோசனை செய்தது. உடனே அதன் நினைவுக்கு வந்தது செங்கால் நாரை தான். நாரை காட்டை விட்டு வெளியேறி மாலையில் இரையோடு வருவதைப் பலமுறை பார்த்துள்ளது. எனவே நாரை தங்கியுள்ள மரத்துக்கு ஓடியது.

"நாரையண்ணே! நாரையண்ணே!" என்று குரல் கொடுத்தது. நாரை மரத்தில் இருந்து கீழே இறங்கி வந்து,

"என்ன குள்ளநரியாரே! இவ்வளவு தூரம்" என்றது.

"நாரையண்ணே! எனக்கு காட்டுவாழ்க்கை வெறுத்துவிட்டது. நாடு நகரங்களைச் சுற்றிப்பார்க்க ஆசைப்படுகிறேன். நீதான் எனக்கு யோசனை சொல்லவேண்டும்" என்றது.

"குள்ளநரியாரே! நான் இரை தேடி நெடுந்தொலைவு போகிறேன் என்றால் அது இறைவன் எனக்கு இட்ட விதி. உனக்குத்தான் காட்டிலேயே எல்லாம் கிடைக்கிறதே. நீ ஏன் காட்டைவிட்டு வெளியே ஆசைப்படுகிறாய். அது ஆபத்தில்தான் முடியும்" என்று செங்கால் நாரை.

"உனக்குச் சொல்ல விருப்பமில்லையென்றால் விட்டுவிடு" என்று சொல்லி கோபத்துடன் திரும்பியது குள்ளநரி.

"நான் உன் நல்லதுக்குத்தான் சொன்னேன் கோபித்துக் கொள்ளாதே. நாடு நகரங்களில் மனிதர்களும் ஆடு மாடு குதிரை நாய் கோழி போன்ற சில விலங்குகளும் வாழ்கின்றன" என்றது நாரை.

"ரொம்ப நன்றியண்ணே! என்றபடியே சந்தோசமாக ஓடியது குள்ளநரி.

வழியில் தனது நண்பனான கழுதையைப் பார்த்து நடந்ததைக் கூறி கழுதையையும் துணைக்கு அழைத்துக்கொண்டு காட்டைவிட்டு வெளியேறியது.

நகர எல்லைக்குள் கழுதையும் நரியும் வந்தன. அங்கே ஒரு சலவைத் தொழிலாளி ஆற்றில் துணிகளைத் துவைத்து மணலில் காயவைத்து விட்டுக் குளித்துக்கொண்டிருந்தான். குள்ளநரியும் கழுதையும் அவசரமாக ஓடிப்போய் ஆளுக்கொரு சட்டையை எடுத்து அணிந்துகொண்டு மனிதர்களைப் போலவே நடந்து சென்றன.

வழியில் சிறுவர்கள் கழுதை வாலில் தகர டின்னைக் கட்டி கழுதையை விரட்டிச் செல்வதைக் கண்டு இரண்டும் வருந்தின. அளவுக்கதிகமாக பாரம் இழுக்கமுடியாமல் காளை மாடு கல்றோட்டில் விழுவதைக் கண்டன. கண் எதிரிலேயே ஆடுகளை தோல் உரிப்பதைக் கண்டு கண்ணீர் விட்டுக் கதறின.

பொழுது சாய்ந்து இரவாகியது. மக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வதைக்கண்டு குள்ளநரியும் கழுதையும் அவர்கள் பின்னே சென்றன.

ஒரு கூடாரத்தினுள் எல்லோரும் நுழைந்தனர். நரியும் கழுதையும் அதற்குள் நைசாக யாருக்கும் தெரியாமல் நுழைந்து. அங்கிருந்த கதிரையில் உட்கார்ந்தன. அது ஒரு சர்க்கஸ் கூடாரம். கோமாளி ஒருவன் உள்ளே வந்து வேடிக்கை காட்டியதைக் கண்டு குள்ளநரியும் கழுதையும் சிரித்தன.

அடுத்து மூன்று குதிரைகள் வேகமாக ஓடிவந்தன. அவற்றை சாட்டையால் அடித்தபடியே ஒருவன் ஓடி வந்தான். குழந்தைகளும் பெரியவர்களும் சிரித்தனர். குள்ளநரியும் கழுதையும் துடித்தன.

"ஐயோ இவைகள் நம்மோடு வசித்த மிருகங்களாயிற்றே" என்று கண்ணீர் சிந்தின.

யானை ஒன்று சோகமாக உள்ளே வந்து கண்ணீர் விட்டு அழுதபடியே ஒரு ஸ்ரூலில் ஏறி இரண்டு கால்களையும் மேல்நோக்கித் தூக்கியபடி அமர்ந்தது. சிங்கமொன்று கண்ணீர் சிந்தியபடியே ஒரு ஸ்ரூல் மீது 4 கால்களையும் நெருக்கியபடி நின்றது.

"ஐயோ! காட்டுக்கே ராஜாவான உனக்கா இந்தக் கதி" என்று கழுதையும் நரியும் பரிதாபப்பட்டன.

கழுதை ஒன்று கண்ணீர் விட்டபடியே சைக்கிளை ஓட்டிக்கொண்டு உள்ளே நுழைந்தது. மூன்றுமுறை சர்க்கஸ் கூடாரத்தை வட்டமடித்தது. 4வது முறை வட்டமடிக்கும் போது தனது இனத்தைச் சேர்ந்த கழுதை ஒன்று மாறுவேடத்தில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துவிட்டது. சோகம் தாளவில்லை. "ஊ..." என்று ஊளையிட்டபடி கதறி அழுதது. கழுதை கதறுவதைக்கண்ட கழுதையும் நரியும் தாங்கள் மாறுவேடத்தில் இருப்பதையும் மறந்து "ஊ..." என ஊளையிட்டு அழுதன.

சர்க்கஸ் கூடாரம் களேபரமாகி விட்டது. கூடாரத்தினுள் ஏதோ புது மிருகம் வந்துவிட்டதென பயந்து எல்லோரும் ஓட சிலர் கையில் கிடைத்த தடியுடனும் இரும்புக் கம்பியுடனும் குள்ளநரியையும் கழுதையையும் துரத்தினர். உயிர் பிழைத்தால் போதுமென்று இரண்டும் காட்டை நோக்கி ஓடின. "நமக்கு என்றும் சொர்க்கம் நமது காடுதான்" என்று சொல்லிக்கொண்டு காட்டுக்குள் ஓடி மறைந்தன.



# மகளிர் உலகம்

## அழகே.... அழகு!

சில சின்னச் சின்ன அழகு நுணுக்கங்களைத் தெரிந்து வைத்திருந்தாலே போதும் மற்றவர்கள் திரும்பிப் பார்க்க வைக்கிற அளவுக்கு உங்களாலும் பேரழகியாக முடியும். இதோ சில அவசர அழகுக் குறிப்புகள்.

* அடுத்த நாள் காலையில் எங்கேயாவது வெளியில் செல்ல வேண்டுமா? அதற்கு உங்கள் ஹெயாஸ்ரைல் அட்டகாசமாகத் தெரியவேண்டுமா? முதல்நாள் இரவே தலையை நன்றாக வாரி சிக்கெடுத்து, மொத்த முடியையும் உச்சந்தலைக்கு முன் பக்கம் கொண்டுவந்து குதிரை வால் கட்டிக்கொண்டு படுத்து விடுங்கள். மறுநாட்காலை முன்னந்தலைப் பக்கம் கொஞ்சம் தூக்கியபடி அழகாகத் தெரியும்.



* ஏதோ ஞாபகத்தில் தலையில் கொஞ்சம் அதிகம் எண்ணெய் வைத்துவிட்டீர்களா? அடுத்தநாள் காலையில் தலைக்குக் குளிக்கக்கூட நேரமில்லையா? கவலையை விடுங்கள். எண்ணெய் அதிகமுள்ள இடங்களில் எல்லாம் கொஞ்சம் பவுடரைத் தூவித் துடைத்து விடுங்கள். அதிகப்படியான எண்ணெய்ப்பசை சரியாகிவிடும்.

* அடுத்தநாள் காலை செல்ல வேண்டிய பார்ட்டி மற்றும் விஷேசங்களுக்குத் தயாராக முதல் நாளே கொஞ்சம் மெனக்கெட்டால் போதும். படுக்கச்செல்லும் முன் கண்களுக்குள் ஒவ்வொரு சொட்டு விளக்கெண்ணெய் விட்டுக்கொள்ளவும். உதடுகளை பாலாடையால் நன்றாக மசாஜ் செய்துவிட்டு அப்படியே கழுவாமல் படுத்து விடவும். மறுநாள் காலை தலை முதல் கால்வரை பளபளப்பாகத் தோன்றும்.

* நாள் முழுக்க வெயிலில் அலைந்து கறுத்துப்போயாகி விட்டது. இந்த அழகில் எப்படி மறுநாள் காலை பார்ட்டிக்குப் போவது எனறு கவலையா? இரவே ஒரு கைப்பிடி ரோஜாப் பூ இதழ்களைக் கொதிக்கும் வெந்நீரில் போட்டு, இறக்கி அபபடியே ஆறவைத்து விடுங்கள். மறுநாள் காலை அதை வடிகட்டி அப்படியே முகத்தில் அடித்துக் கொள்ளுங்கள். முகம் ரோஜாப்பூ மாதிரியே சிவக்கும்.

* தலைக்குக் குளிக்கிற ஐடியாவில் இருப்பவர்கள் முதல் நாளே தலையில் எண்ணெய் வைத்து மசாஜ் செய்துவிட்டு, மறுநாள் காலை தலையை அலசிவிடலாம். இது தலைமுடிக்கும் ஆரோக்கியமானது என்பதுடன் தலையில் அதிக எண்ணெய் தேங்காமலும் காக்கும்.

## சமைத்துச் சுவைப்போம்

### Brova biscuit

**தேவையான பொருட்கள**

| | |
|---|---|
| முட்டை | - 2 |
| சீனி | - 1/4Kg |
| றவை | - 1/2Kg |
| பேரிச்சம்பழம் | - 1/4Kg |
| வனிலா | - 1 மேசை.கரண்டி |
| கஜ" | - 50g |

செய்முறை:-

முதலில் றவையை துப்பரவாக்கி வறுத்தெடுக்க வேண்டும். பின்னர் முட்டையையும், சீனியையும் ஒன்றாகச் சேர்த்து நன்கு அடிக்கவேண்டும். பேரிச்சம் பழத்தை விதை நீக்கி மசிக்கவேண்டும். பின்னர் அடித்த முட்டைக்குள் வறுத்த றவையையும் மசித்த பேரிச்சம் பழத்தையும் சேர்த்து வனிலாவையும் விட்டு பிசைந்து அதனை அளவான வட்டங்களாகத் தட்டி நடுவில் கஜு" வைத்து மாஜரின் பூசிய தட்டில் அடுக்கி பேக் பண்ணி பின்னர் எடுத்துப் பரிமாறலாம்.

## இன்றைய சூழலில் பெண் கல்வியின் முக்கியத்துவம்

(சென்றவாரத் தொடர்ச்சி....)

வளர்முக நாடுகளில் மகளிருக்காக சுகாதாரம், கல்வி மற்றும் சமூகநலத் திட்டங்களை மேற்கொண்டுள்ளனர். மகளிர் கல்வி அதிகரிப்பால், மகளிர் உற்பத்தித்துறை வளர்ச்சி, குடும்ப போசாக்கு, வறுமை ஒழிப்பு ஏற்பட்டுள்ளன. வாழ்வின் எல்லாத் துறைகளிலும் காணப்படும் தெரிவுகள் பற்றிய மகளிரின் அறிவு, ஆற்றல்களை அது விரிவடையச் செய்துள்ளது. எனவே மகளிர் கல்வி என்பது தார்மீக உரிமை மட்டுமன்றி நடைமுறைச் சமூகத்தின் தேவைப்பாடும் என விளக்குகிறது.

எந்த ஒரு வளர்முக நாடும் தன் எதிர்கால நலனை முன்னிட்டு மேற்கொள்ளக்கூடிய முக்கிய முதலீடு பெண்பிள்ளைகளுக்கு கல்வியூட்டல். நீட்ட காலத்தில் போசாக்கிலிருந்து குடும்பத் திட்டமிடல் வரையில், சிறுவர் ஆரோக்கியத்தில் இருந்து மகளிர் உரிமைகள் வரையில் அநேகமாக முன்னேற்றத்தில் அனைத்து அம்சங்களும் ஒரு நாடு அதன் பெண்பிள்ளைகளுக்கு கல்வியூட்டி வருகிறதா இல்லையா என்பதைப் பொறுத்தே நிர்ணயிக்கப் படுகிறது.



கல்வி ஒரு பெண்ணுக்கு அதிக விழிப்புணர்வையும் அதிக தெரிவுகளையும் உயர் அளவில் நம்பிக்கைகளையும் வழங்கமுடியும். கணவர் பார்வையில், குடும்பத்தின் பார்வையில், சமூகத்தின் பார்வையில் கல்வி ஒரு பெண்ணின் மதிப்பையும் அந்தஸ்தையும் உயர்த்துகிறது.

வளர்முக நாடுகளில் மகளிர் பாரம்பரிய தொழில் துறையில் மட்டுமின்றி ஆண்களின் ஏகபோகமாக்கப்பட்ட துறைகளிலும் பணியாற்றி வருகின்றனர். ஆரம்பத்தில் ஆசிரியத்தொழிலும், பின்னர் வைத்தியத்துறையின் பரவலாக்கத்தினால் வைத்திய தாதித் தொழில்களிலும் இன்று வழக்கறிஞர், விஞ்ஞானி, விவசாய நிபுணர், பொறியியலாளர், கட்டிடக் கலைஞர் முகாமை, கணனித்துறைகளிலும், ஏன் விமானிகளாகவும் மகளிர் தொழில் செய்து வருவதைக் காணமுடிகிறது. இவை கல்வி வளர்ச்சியை மட்டுமல்ல, பெண்கள் அடிமை நிலையிலிருந்து வெளியுலகோடு துணிவுடன் இடைவினை கொள்கின்றமையைக் காட்டுகிறது.

இந்தத் தற்துணிவைக் கொடுத்தது, கல்வியும், தொழில் நுட்பத்திறனுமே என்பது உண்மை.பெண்கள் சோம்பேறிகள் என்பது தூக்கியெறியப்பட்டுள்ளது. பாராளுமன்றங்களில் கூட மகளிருக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கப்பட்டதிலிருந்து மகளிரின் முன்னேற்றம் அறியமுடிகிறது.

பெண் அடிமைத்தனத்தின் சாபக்கேட்டை பாரதி பாஞ்சாலி சபதத்திலே அம்பலப்படுத்தும் போது,

"ஆடவர்க்கு ஒப்பில்லை மாதா<br>ஒருவன் தன் தாரத்தை<br>விற்றிடலாம்<br>தானமென வேற்றுவாக்கு<br>தந்திடலாம்<br>முற்றும் விலங்க முறையன்றி<br>வேறில்லை"

என்கிறார்.

வேதகாலத்திலே விருந்தோம்பும் தருமம் என விருந்தினர் விரும்பின் தங்கள் பத்தினியையே கொடுத்த முனிவர்கள் வரிசையிலே சுதர்சன முனி வரும் ஒருவர். இதனால் அவர் புகழ் மூவுலகிலும் பரவியதாம். ஏன் கிரேக்க அறிஞர் சோக்கிரட்டீஸ்கூட தன் மனைவி ஜாண்டிப்பை விருந்துக்கு வந்த நண்பர்களுக்கு வழங்கியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இன்றைய சூழலிலே இவ்வாறான ஆதிக்க நிலைக்கு பெண் துணை போவாளா? அன்று எது சொன்னாலும் செய்யவேண்டிய பெண் இன்று எது சரியோ அதைத் தட்டிககேட்கத் தயங்காத தற்துணிவு வளர்ச்சி காரணமாக ஆண்களே தாங்கள் எண்ணப்படி எதுவும் செய்ய முடியாத நிலை பெண்ணின் சமத்துவத்தைப் பிரதிபலிக்கிறது.

காலங்காலமாக உரிமைகள் பறிக்கப்பட்டு வாய் மூடி மௌனிகளாக வாழ்ந்து கொண்டிருந்த பெண்களை உயிர்த் துடிப்புள்ளவர்களாகிய உலகப் பெண்கள் மாநாடுகள், பெண்ணுரிமை இயக்கத்தின் வளர்ச்சியோடு இணைந்த பெண்கள் முயற்சிகள் யாவும் சமஉரிமை, சம மதிப்பு என்பதை நோக்கியதாகவே அமைந்தது. இதன் பயனாக சமூகத்தில் வியத்தகு மாற்றங்கள் ஏற்பட்டன. (தொடரும்)

## முகப்பரு தோன்றக் காரணம் என்ன?



பெண்களை அல்லல் படுத்தும் பெரிய பிரச்சினைகளில் ஒன்று முகப்பரு. இவை ஏற்பட என்ன காரணம?

தோலுக்கு அடியில் செபோஷியஸ் சுரப்பி உள்ளது. அவை ஒருவித எண்ணைத் தன்மையுள்ள திரவத்தை வெளியேற்றுகிறது. அழுக்கு, தூள், சுற்றுப்புறத் தூய்மையின்மை ஆகியவைகளால் அந்த திரவம் சருமத்தில் இருந்து வெளியேற முடியாமல் தேங்கிவிடுகிறது. அதுவே முகப்பருவாக தோன்றிவிடுகிறது.

ஹார்மோன்கள் இயக்கத்தில் ஏற்படும் நிலைமாற்றங்களாலும், மாதவிடாயின் போதும் முகப்பருக்கள் தோன்றும் சூழ்நிலை அதிகமுண்டு. கொழுப்பு சேர்ந்த உணவுகள், இனிப்புப் பலகாரங்கள் சாப்பிடுவது, அஜீரணக் கோளாறு, மலச்சிக்கல், அழகூட்டும் பொருட்களால் ஏற்படும் அலர்ஜி போன்றவைகளும் முகப்பரு வரக் காரணமாகும். முகப்பருவில் பல வகை உளளது.

### முகப்பரு வராமல் தடுப்பது எப்படி?

எண்ணெய், கொழுப்பு கலந்த உணவுகளை சாப்பிடுவதை நிறுத்தவோ, குறைக்கவோ செய்யுங்கள். காய்கறிகள், நார்ச்சத்து உணவுகள், பழங்கள் சாப்பிடவேண்டும். தினமும் குறைந்தது எட்டு கிளாஸ் தண்ணீர் குடியுங்கள். மலச்சிக்கல், அஜீரணக் கோளாறு இல்லாமல் கவனியுங்கள்.

தலையில் பொடுகு இருந்தாலும் முகப்பரு வரும். அழகுப் பொருட்களை முகத்தில் உபயோகிக்காதீர். தினமும் குளிர்ந்த நீர் கொண்டு முகத்தை அடிக்கடி கழுவுங்கள். முகத்தை கைகொண்டு தடவவோ, துடைக்கவோ செய்யாதீர்.

மஞ்சள், துளசி, வேப்பிலையை அரைத்து முகத்தில் புரட்டுங்கள். அது ஓரளவுக்கு பயன்தரும். வேப்பிலையை காயவைத்து தூளாக்கி ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து அரைத் தேக்கரண்டி கடலைமாவு, சிறிதளவு மஞ்சள் பொடி, இரண்டு தேக்கரண்டி பால் சேர்த்து குழைத்து முகத்தில் தேய்த்துச் சிறிது நேரம் கழித்து லேசான சுடு நீரால் கழுவலாம்.

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும்

## மூலவுயிருருவை பேணி பாதுகாத்தல் மூலம் தாவர பிறப்புரிமை மூலவளங்களை பாதுகாத்தல்

**Germplasm preservation & conservation of plant genetic resources**

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

**Insitu** *பாதுகாப்பு முறையின் நன்மைகளாக*

முழு உயிர்திணிவு (**Biomass**) கருதப்பட்டு பாதுகாக்கப்படுகின்றது.

பாதுகாக்கப்பட்ட இடங்களாகப் பிரகடனப்படுத்தப்படும்.

வாழுமிடம் பாதுகாக்கப்படுகிறது.

இதரறுகத்திற்குரிய மாதிரிகள் கிடைக்கக்கூடியதாக உள்ளது.

**Insitu** *முறையின் தீமைகள்*

மேற்பார்வை செய்தல் சிரமம்.

இயற்கை அழிவு, பிறப்புரிமை குறைவு (**genetic erosion**), வாழிடம் அழிவு.

**Exsitu-** *நன்மைகள்*

தனி **or** கூட்டத்தாவரங்கள் பாதுகாக்கப்படும்.

குறைந்த இடத்தில் அதிக தாவர இனங்கள் பாதுகாக்கப்படும்.

சேகரிக்கப்பட்டுள்ள தாவரங்களின் தகவல்களை உடனடியாக அறியலாம்.

விதைகளாகப் பாதுகாக்கப்படும்.

தீமைகள்

விதைகளின் வாழ்வுக்காலம் காலத்துடன் இழக்கப்படும்.

விதைகளில் நோயாக்கிகளின் மற்றும் பூச்சிகளின் தாக்கத்தால் விதைகள் அழிவடைகின்றன.

விதைகள் மூலம் இனப்பெருக்கமடையும் தாவரங்களுக்கே இது பிரத்தியேகமானது.

நீண்டகால பாதுகாப்பு முறை செலவு கூடியது.

பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் தேவை.

குறைந்த கால வாழ்தகவுடைய வித்துகள் குளிர் அறைகளில் சேமிக்கமுடியாது.

விதைகளை உருவாக்கும் தாவரங்களுக்குப் பதிலாக பதிய முறைமூலம் தாவரங்கள் இழைய வளர்ப்பு மூலம் இனப்பெருக்கப்படுகின்றது. இதற்கு தண்டு, பிரியிழையம் பகுதிகள் முளையம் என்பன பாவிக்கப்படுகின்றது.

**Ingtro** *பாதுகாப்பின் நன்மைகள்*

சிறிய பரப்பில் அதிக இனங்கள் பாதுகாக்கப்படுகின்றது.

சூழல் தாக்கத்தில் இருந்து பாதுகாக்கப்படுகின்றது.

இது அதிகளவிலான இனவிருத்தி முதல்களை (**Propagation Material**) உருவாக்குகின்றது.

தாவர பிறப்புரிமை மூலவள நிலையத்தின் செயற்பாடுகள்.

1) மூலவுயிருருவின் சேகரிப்பும் அறிமுகமும்
2) தன்மைகளை இனங்காணல்
3) விதை பாதுகாப்பு
4) இழைய பாதுகாப்பும் உயிர்

ஜொராணி நந்தகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர்
தாவரவியல் துறை,
யாழ். பல்கலைக் கழகம்

தொழில்நுட்பமும், அதிதாழ் வெப்பநிலை (**cryopreservation**) சேமிப்பு.

1.மூலவுயிருருவின் சேமிப்பும் அறிமுகமும்

இதற்கு இரண்டு வகையான சேகரிப்பு முறைகள் உள்ளன.

**i.** தனித்துவமான முறை - ஒரு தாவரத்தின் பல்வேறுபட்ட இனங்களை சேகரித்தல். தாவர பிறப்புரிமை மூலவளங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆராய்ந்து சேகரித்தல். இவை பயிரிடும் வகைகளாக அல்லது அவற்றின் வான் வகைகளாக இருக்கும்.,

**ii. broad based mission** - பல்வேறு தாவரங்களின் பல இனங்களை சேகரித்தல்.

இம்முறையால் ஒரு இனத்தின் கூடுதலான பிறப்புரிமை மாறல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

உ.சேகரிக்கப்பட்ட மூலவுயிருருவை இனங்காணலும் அடையாளப்படுத்தலும்

இந்தமுறையில் அதிகூடிய பரம்பரையுரிமையுடைய உருவ இயல்புகளை பாவித்து ஒரேமாதிரியான தோற்ற அமைப்புடைய இனங்களை வேறுபடுத்தல்.

3.விதைகளை சேமித்தல்

விதைகள் பிறப்புரிமை வங்கியில் சேமிக்கப்படுகின்றன.

விதை வங்கியின் செயற்பாடுகளாக,

தாவரப்பிறப்புரிமை, மூலவளங்களை பாதுகாத்தலும் பராமரித்தலும். அத்துடன் அவற்றை பயிர்ச் செய்கைக்காக தொடர்ச்சியாக வழங்கலும்.

அதிக திறனான வித்துகளை உருவாக்கி நீண்டகாலம் பாதுகாத்தல்.

மூலவித்துகளை சேமித்தல், அல்லது அவற்றை குறைந்த இனப்பெருக்க வட்டத்தினூடாக உருவாக்கல்.

தொற்றலடைந்த மாதிரிகளைத் தவிர்த்தல்.

மூலவுயிருரு ஆனது பின்வரும் வழிகளினூடாக பிறப்புரிமை வங்கியை அடைகின்றது.

* ஆராய்தலும் தாவர சேகரிப்பும் (**collection of exploration mission**)

சாதாரண தாவர ஆராய்வு (**Simple crop exploration**) பல்வேறுபட்ட தாவர ஆராய்வு (**multiple crop exploration**) பிறப்புரிமையில் தனித்துவமான தாவரங்களை ஆராய்வு (**Trait specific exploration**)

* பெறுதல் (**Receiving**)

*அறிமுகப்படுத்தல் (**Introduction**)

மாதிரிகள் நல்ல நிலையில் இருந்தால் ஆராயும் அலகு (**exploration unit**) இனால் அவைக்கு பதிவு இலக்கம் கொடுக்கப்படும்.

E 2005468

ஆராயும் அலகு (**exploration unit**) — சேமிப்பு இலக்கம் (**exploration collection number**)

பதிவுசெய்யப்பட்ட மாதிரிகள் பொருத்தமான பகுதிகளுக்கு அனுப்பப்படும். உதாரணம் - விதைகள் விதை வங்கிக்கு அனுப்பப்படும்.

விதை சேமித்தல் முறையில் பல்வேறுபட்ட முறைகள் உண்டு. விதைகள் 2 ஆகப் பிரிக்கப்படும்

(1) சேமிக்கக்கூடிய விதைகள் (**orthodox**)

(11) சேமிக்கமுடியாத விதைகள் (**Recalcitrant type**)

**Orthodox** - இதில் சிறிய விதையுடைய தானியங்கள் மற்றும் மரக்கறிப் பயிர்கள் அடங்கும்.

இவ்விதைகள் 3 முறைகளில் சேமிக்கப்படுகின்றன.

# விஞ்ஞானத் துளிகள்

(1) **நீண்ட கால சேமிப்பு** - இங்கு **- 21°C** இல் **30%** ஈரப்பதனில் விதைகள் சேமிக்கப்படும். இது பிரதானமான அடிப்படை சேமிப்பு (**base collection**) க்கு சேமிக்கப்படும். இங்கு சேமிக்கப்பட்ட மாதிரிகள் பரிமாற்றத்திற்கு பாவிக்கப்படமாட்டாது. இவை புதிய விதைகளை மீள் இன விருத்திக்காக சேமிக்கப்படுகின்றது. இங்கு தொடர்ச்சியாக விதைகளின் வாழ்தகவு பரிசோதிக்கப்படும். இச்சேமிப்பின் பிரதான நோக்கம் விதைகளின் தொடர்ச்சியான சேமிப்பை உறுதிப்படுத்தலாகும். இதன் மூலம் 50-100 வருடங்களுக்கு விதைகள் சேமிக்கப்படுகின்றன.

(2) **நடுத்தர கால சேமிப்பு**

**medium term storage** இங்கு **1°C** யிலும் 40% சார் ஈரப்பதனிலும் விதைகள் சேமிக்கப்படுகின்றன. இங்கு சேமிக்கப்டும் விதைகள் வினையோகத்திற்கு, பரிமாற்றம், இனப்பெருக்கம் மதிப்பீடு என்பவற்றிக்கு பாவிக்கப்படும்.

(2) **குறுகியகால சேமிப்பு**

இங்கு **5°Cயில் 40%** சார்ஈரப்பதனில் விதைகள் சேமிக்கப்படும். ஆய்வுத் தேவைகளுக்கு உட்படும் விதைகள் இங்கு சேமிக்கப்படும்.

*(தொடரும்)*

# கண் பாதுகாப்பு

திடீரென்று உங்கள் கண்கள், பார்க்கும் சக்தியை இழந்துவிட்டால் என்னவாகும்?

ஒரு நிமிடம் கற்பனை செய்து பாருங்கள். உங்கள் உடலே ஆடிப்போய்விடும். கண்களை கவனமாகப் பாதுகாத்தால் அப்படிப்பட்ட கற்பனைகள் எதுவும் தேவையில்லை.

சிறியதொரு அலட்சியம் கூட நிரந்தரமாகப் பார்வை இழப்பை உருவாக்கிவிடக் கூடும். கண்ணின் முன்பாகத்தில் இருக்கும் கார்ணியா என்ற பார்வைப் படலமே கண்ணில் மிக முக்கியமானது. பார்வைப் படலத்தில் ஏற்படும் காயங்கள், பார்வை இழப்புக்கு வழி ஏற்படுத்தும்.

கண்ணில் அசிட்டோ, இதர திரவங்களோ, தூசுகளோ பட்டுவிட்டால் சுத்தமான நீரைக்கொண்டு கண்களைக் கழுவுங்கள். கண்ணில் ஏற்படும் சிவபபையோ, வேதனையையோ மாற்றவேண்டுமானால் கண சிகிச்சை நிபுணர்களிடம் சிகிச்சை பெறவேண்டும்.



ஓலைத் தும்பு, விறகு துணடு, முள், செடியின் கம்பு, குழந்தையின் கை நகங்கள் போன்றவை கருவிழியில் காயம் உண்டாக்கும். குழந்தைகள அம்பு, வில் மாதிரி ஈக்கு குச்சிகளை வைத்து விளையாடுவது கண்ணில் பாய்ந்து காயம் ஏற்படுத்தும்.

பாறை உடைக்கும் போது ஏற்படும் சிதறல்கள், வெல்டிங் மருந்து உபயோகம், பட்டாசு வெடித்தல் போன்றவை கண்ணுக்கு ஆபத்தை விளைவிப்பவை.

பார்வைப் படலத்தில் ஏற்படும் சிறு காயங்களுக்குக் கூட உடனடியாக சிகிச்சை செய்யவேண்டும். சாதாரணமான கண்வலி ஆபத்துக்குரியதல்ல. இருப்பினும் அதுவும் சிலநேரங்களில் ஆபத்தானதே.

கண் பார்வைக்கு விற்றமின் ஏ மிக அவசியம். கீரை, முருங்கைக்காய், முருங்கை இலை, பப்பாளி, மீன் போன்றவைகளை தொடர்ச்சியாக சாப்பிட்டு வரவேண்டும்.

சிலவகை பிறப்பு காய்ச்சல்களாலும் பார்வைப் படலத்தில் வெண்மை படரும். பார்வைப் படலம் முன்நோக்கித் தள்ளிக்கொண்டிருந்தாலும் பார்வைப் பாதிப்பு உருவாகும்.

பார்வைப் படலத்தால் ஏற்படும் பார்வை இழப்புக்குப் பரிகாரமாக இறந்தவரின் பார்வைப் படலத்தை அறுவைச் சிகிச்சை மூலம் இணைக்கிறார்கள்.

இறப்பு ஏற்பட்ட நான்கு மணி நேரத்துக்குள் இறந்தவரின் கண்கள் மாற்றப்பட வேண்டும். அதற்கு இறந்தவர்களின் உறவினர்கள் எழுத்து மூலம் அனுமதி கொடுக்க வேண்டும்.

ஒருவர் உயிரோடு இருக்கும்போது கண்தானம் செய்ய முன்வந்தாலும், அவர் இறந்த உடன் உறவினர்கள் கண் ஆஸ்பத்திரிக்குத் தகவல் கொடுத்தால்தான் இறந்தவரின் ஆசையை நிறைவேற்ற முடியும்.

பலர் கண்தானம் செய்ய ஒப்புதல் கொடுத்தாலும், அவர்களது இறப்பு, உடனடியாக தெரிவிக்கப்படாமல் இருப்பதால் கண்களைப் பயன்படுத்தமுடியாத துரதிஷ்டநிலை ஏற்படுகிறது.

இறந்தவர்களிடம் இருந்து தக்க நேரத்தில் எடுக்கப்படும் கண்கள் நுண்ணுயிரிகளின் பாதிப்பு இல்லாத அளவுக்கு பாதுகாக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட கண்களை 48 மணி நேரத்துக்குள் பொருத்துவதற்கு உபயோகிப்பார்கள். கார்ணியா எனப்படும் பார்வைப் படலம் மட்டுமே மாற்றப்படும்.

ஒருவர் இறந்த உடன் அவரது உடலைக் குழிதோண்டிப் புதைக்கவோ அல்லது எரிக்கவோ செய்கிறார்கள். பயனற்றுப் போகும் அவர்களது கண்களை தக்க நேரத்தில் எடுத்துப் பயன்படுத்தினால், கண்பார்வை இழந்து தவிப்பவர்களுக்கு கண்பார்வை கிடைக்குமல்லவா.

வெறி நாய்க்கடி விஷம் உள்ளவர்கள், எயிட்ஸ் நோயாளிகள், மூளையைப் பாதிக்கும் வைரஸ் நோய்கள் உள்ளவர்களின் கண்களை உபயோகிக்க முடியாது. இறந்தவர்களின் கண்களைப் பரிசோதித்து, கண்கள் முழு ஆரோக்கியத்தோடு இருந்தால்தான் பார்வை இழந்தவர்களுக்குப் பொருத்துவார்கள்.

| | | | |
|---|---|---|---|
| | ராகு | சுக் | சூரி சனி |
| | இராசி | | செவ் புதன் |
| சந் | நிலை | | குரு |
| | | கேது | |

# இவ்வார இராசி பலன்கள்

## (05.07.2004 முதல் 11.07.2004 வரை)

**மேடம்** (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)

இவ்வாரம் ஜீவன ஸ்தானம் பலமாகும். கரும காரியங்கள் ஜெயமாகும். தமக்கு வேண்டியவர்களிடமும் நண்பர்களிடமும் தக்கசமயத்தில் உதவிகளையும், ஒத்தாசைகளையும் பெறலாம். மனதிலிருந்த அச்சம், கவலை, நிம்மதியின்னை அகலும். சிலருக்கு உத்தியோக ரீதியான பயணம் கிட்டும். வியாபாரிகள் தம் முதலைப் பெருக்கமுடியும். விவசாயிகள் பயிர் பாதுகாப்புக்களை மேற்கொள்ளமுடியும். மாணவர்கள் ஆசிரியரின் பாராட்டையும் ஆசியையும் பெறுவர்.

**இடபம்** (கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2ஆம் பாதம்)

இவ்வாரம் சிலருக்கு ஸ்திரி, புத்திரர்களால் நன்மையேற்படும். கொடுக்கல் வாங்கல்கள் சரளமாகப் புழங்கும். திட்டமிட்ட காரியங்களை சுலபமாக ஆற்றலாம். சிலருக்கு வாய்சாதுரியம் உண்டு. செல்வாக்கு, சொல்வாக்கு மிகும். உத்தியோகத்தர்க்கு வேலைச்சுமை குறையும். கன்னியர் சிலருக்கு திருமணப் பேச்சுக்கள் சாதகமாகும். வியாபாரிகள், விவசாயிகள் தத்தம் தொழிலால் மேன்மையடைவர். மாணவர், ஆசிரியர் உறவு வலுவடையும்.

**மிதுனம்** (மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பு,சம் 1,2,3ஆம் பாதம்)

இவ்வாரம் பொதுஜனங்களின் மதிப்பும், பாராட்டும் கிடைக்கும். செல்லுமிடம் கௌரவம் நிலவும். உத்தியோகத்தர்க்கு பதவி உயர்வு, சம்பள அதிகரிப்பு ஏற்படும். மேலாளர்களின் உதவி நல்லெண்ணம் கிட்டும். குடும்பப் பெண்கள் தெய்வபக்தி, விரதம், நோன்பு போன்றவற்றால் சாந்தி பெறலாம். வர்த்தக நடவடிக்கைகள் சுமாராக நடைபெறும். விவசாயிகள் பண்ணைகளில் கூலியாட்களின் ஒத்துழைப்புக்களை பெறமுடியும். மாணவர் கல்வியில் சிறந்து விளங்குவர்.

**கடகம்** (புனர்பூ,சம் 4, பூ,சம், ஆயிலியம்)

இவ்வாரம் செய்தொழில் விருத்தியும், வர்த்தக விடயங்களும் லாபகரமாக நடைபெறும். தொழிலில் போட்டி பொறாமைகளும் குறைந்துவிடும். சிலருக்கு பழைய பாக்கிகள் வசூலாகும். புதியதொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தொழில் வியாபாரத்தைப் பெருக்கலாம். வாடிக்கையாளரின் வருகை கூடும். உத்தியோகத்தர்க்கு உயர்வு கிட்டும். சிலருக்கு சம்பள உயர்வு, பதவி உயர்வு கிடைக்கும். விவசாயிகளுக்கு அரசமானியங்கள் கிடைக்கும். மாணவர் ஏற்றம் காண்பர்.

**சிங்கம்** (மகம், பூ,ரம், உத்தரம் 1ஆம் பாதம்)

இவ்வாரம் திட்மிட்ட பிரயாணங்கள் நன்மையளிக்கும். பயணத்தின் மூலம் பெரியோர்கள், முக்கியஸ்தர்களின் சந்திப்பு, அறிமுகம், உதவி, ஆலோசனைகள் முதலியவை கிட்டும். இல்லத்தில் சுபகரும காரியங்கள் நிறைவேறலாம். வெளிநாட்டுப் பணவருவாய் திருப்திகரமாகும். வர்த்தகர்களுக்கு எதிர்பார்த்த இலாபத்தைக் கொடுக்கும். உத்தியோகத்தர்க்கு உயர் அதிகாரிகளின் செல்வாக்குக் கிடைக்கும். மாணவர் படிப்பில் ஏற்றம் காண்பர்.

**கன்னி** (உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2ஆம் பாதம்)

இவ்வாரம் இல்லத்தில் மகிழ்ச்சி, நிம்மதி நிலவும். கணவன் - மனைவியிடையே அந்நியோன்யம் மேலோங்கும். பிரிந்தவர் ஒன்று சேர்வர். பிதாவின் கொடுக்கல் வாங்கல்கள் சரளமாகக் நடக்கும். பட்டதாரிகளுக்கு சுயதொழில் அமையும். குடும்பத்தில் வாக்குவிரோதம், சச்சரவுகள் தோன்றி மறையும். வியாபாரிகளுக்கு வியாபாரம் சுமாராகவிருக்கும். விவசாயிகள் அரசமானியங்களை உரியநேரத்தில் பெறலாம். மாணவர்க்கு கல்வியில் ஊக்கம் அவசியம்.

**துலாம்** (சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3ஆம் பாதம்)

இவ்வாரம் தமக்கு வேண்டியவர்களிடத்திலும் கூடத் தக்க சமயத்தில் உதவி, ஒத்துழைப்புக்களை அடையமுடியாமல் போகலாம். மனதில் திட்டமிடுவதற்கும்; செயற்பாடுகளுக்கும் சம்பந்தமில்லாது போகும். கணவன்-மனைவியிடையே கருத்துவேறுபாடுகள் தோன்றலாம். உத்தியோகத்தர்க்கு வேலைப்பழு ஏற்படும். வர்த்தகர் மந்தநிலை பெறுவர். விவசாயிகளுக்கு அரசமானியம் கிடைக்காது. மாணவர்க்குப் படிப்பில் அவதானம் தேவை.

**விருச்சிகம்** (விசாகம் 4, அனுசம், கேட்டை)

இவ்வாரம் குடும்பத்தில் சுப, சந்தோஷ நிகழ்ச்சிகள் நிலவும். பெரியோர், நண்பர், உறவினர் உதவிகள் கிட்டும். வருமானம் கூடும். புத்திரர்களால் மனமகிழ்ச்சி கிடைக்கும். எண்ணங்கள் பெரும்பாலும் நிறைவுபெறும். வர்த்தகர்களின் முதலீடுகள் இலாபத்தை ஈட்டிக் கொடுக்கும். உத்தியோகத்தர்க்கு அதிகாரிகளின் செல்வாக்குக் கிடைக்கும். தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படலாம். ஆசிரியர்-மாணவர்-பெற்றோர் உறவு வலுக்கும்.

**த.சத்தியதாஸன்[சத்யா]**

**தனுசு** (மூலம், பூ,ராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)

இவ்வாரம் குடும்பத்தவரிடையே ஒற்றுமை, புரிந்துணர்வு தென்படும். இல்லறசுகம், மனைநலம், வாகனவிருத்தி, மாதாசுகம் முதலியன உண்டாகும். சிலருக்கு திருமணப் பேச்சுக்கள் சாதகமாகும். வியாபாரிகள் கூடுதல் இலாபமடைவர். விவசாயிகள் வங்கிக்கடன்களைப் பெறமுடியும். தொழிலாளர் ஒத்துழைப்பை நல்குவர். உத்தியோகத்தர் ஏற்றமடைவர். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம், ஊக்கம் என்பன அதிகரிக்கும்.

**மகரம்** (உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2ஆம் பாதம்)

இவ்வாரம் இல்லத்தவர்க்கிடையே மன அமைதி குறையும். புத்திரர்களால் கவலைகள், செலவுகள் ஏற்படும். எதிலும் எச்சரிக்கை, நிதானம் தேவை. வியாபாரம் மந்தநிலை பெறும். தொழிலில் பொறுப்புக்கள், அலைச்சல், வீண்விரயம் என்பன அதிகரிக்கும். நோய், விபத்து ஏற்படாதவாறு அவதானத்துடன் இருப்பது நன்று. மாணவர்களுக்கு கல்வியில் மறதி, விரக்தி மனப்பான்மை அதிகரிக்கும். மாணவர்க்கு படிப்பில் ஊக்கம் தேவை.

**கும்பம்** (அவிட்டம், 3,4 சதயம், பூ,ரட்டாதி 1,2,3ஆம் பாதம்)

இவ்வாரம் இல்லத்தில் கஷ்ட நஷ்டங்கள் அகலும். தேகம் புதுவீரியம் பெறும். பெரியோர் ஆதரவு, வருமானம் கூடும். கன்னிப்பெண்களின் விவாக, மங்கல காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும். மனம்போல் வேலை கிடைக்கும். வர்த்தகர்களுக்கு புதிய முதலீடுகள் எதிர்பார்க்கும் இலாபத்தைக் கொடுக்கும். விவசாயிகள் விவசாயப் பண்ணைகளில் இலாபத்தை ஈட்டிக் கொள்ளலாம். மாணவர்க்கு கல்வியில் ஊக்கம் தேவை.

**மீனம்** (பூ,ரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி)

இவ்வாரம் இல்லற வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும். வெளிநாட்டுப் பணவரவு, தொழில் மேன்மை, இலாபம் கூடும். உறவினர்களிடையே நல்லுறவு வளரும். புத்திரர்களால் பெருமை சேரும். சிலருக்கு திருமணப் பேச்சுக்கள் சாதகமாக அமையும். உத்தியோகத்தர்க்கு பதவிச் சிறப்பு, அதிகாரம் உயரும். வர்த்தக நடவடிக்கைகள் மனத்திருப்தியளிக்கும். தொழிலாளர் ஒத்துழைப்பு நல்குவர். விவசாயிகள் பயிர்ப் பாதுகாப்புக்களை மேற்கொள்ள வேண்டும். மாணவர்க்கு படிப்பில் ஊக்கம் அவசியம்.

# எணிகவாலி

## உடல் எண் 3 உயிர் எண் 5

3,12,21,30 போன்ற திகதிகளில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகியவற்றைக் கூட்டிவருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 5 வருமேயானால் குரு, புதன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். குரு இவர்களை நேர்மையானவர்களாகவும், நாணயமுள்ளவர்களாகவும், வாழ்வற்குத் துணையாயிருக்கும். ஆனால் புதன் மிகுந்த சுறுசுறுப்பைக் கொடுப்பதோடு, பலரை வைத்து வேலை வாங்கும் ஆற்றலையும் கொடுக்கும்.

இவர்களுடைய வாழ்க்கை 32வயதிற்கு மேல் பிரபலமடைவதோடு வீடு, வாகனம், தொழில், நிலம் போன்றவைகள் சேரும். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிடில் மேற்கூறிய பலன்கள் குறைவாக இருக்கும். மிகுந்த சாமர்த்தியசாலியான இவர்கள் எளிதில் எதிலும் ஏமாற்மாட்டார்கள். தனக்கு எல்லோரும் அடங்கி நடக்கவேண்டும் என்று எண்ணுவார்கள். முயற்சியால் முடியாதது எதுவுமில்லை என்ற எண்ணத்தோடு செயல்பட்டு வெற்றி அடைவர். சூழ்ச்சிக்காரரான இவர்கள் ஏதாவது திட்டமிட்ட வண்ணமே இருப்பர். சிலருக்கு அமைதி குறையும். ஆரோக்கியம் கெடும். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் மேற்குறிப்பிட்ட கெட்ட பலன்கள் குறைந்து நல்ல பலன்கள் அதிகமாகக் காணப்படும்.

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு 40 வயதிற்குள் தலைமுடி உதிர்ந்துவிடும். சரும வியாதிகளும் தொற்றிக்கொள்ளும். இதிலிருந்து தப்பித்துக்கொள்ள ஆரம்பத்திலேயே எமிதிஸ்டு என்ற மோதிரக்கல்லை அணியவும். மின்னல் வேகத்தில் சிந்திக்கும் ஆற்றலுடையவர்களாதலால் கேட்கும் கேள்விகளுக்கு உடனே பதில் கூறிவிடுவர். சிலநேரத்தில் ஊமை போல்

**ஏற்றமிகு வாழ்வு**

காட்சியளிக்கும் இவர்கள் பேச ஆரம்பித்தால் இலக்கண நயத்தோடு, பிறரைக் கவரும் அளவிற்குப் பேசுவர்.

தன்னை எதிர்க்கும் எதிரிகளைச் சந்தர்ப்பம் பார்த்து மடக்கிவிடுவர். தன்னைத் தற்காத்துக்கொள்ள எப்பொழுதும் பாதுகாப்புடன் இருப்பர். புகழ்ச்சியில் மயங்காத இவர்கள், நிதானமாகவே செயல்படுவர். தனக்குப் பிடிக்காதவர்களைச் சந்தர்ப்பம் வரும்போது பிறரைத் தூண்டிவிட்டு பழிதீர்த்துக் கொள்ளுவர். ஆனால் தன்னைச் சார்ந்தவர்களை உயர்ந்தநிலைக்குக் கொண்டுவரப் பாடுபடுவர்.

இவர்கள் வயது ஏற ஏற, சர்க்கரை, உப்பு போன்றவைகளைக் குறைததுக்கொள்ளவேண்டும். இவர்களுடைய திட்டங்கள் எல்லாம் எளிதில் நிறைவேறுவதால் தெய்வபக்தி கூடிவிடும். இவர்களது மனதில் தோன்றுவதையெல்லாம் வெளியிடாது மறைத்துவீடுவர். எதையும் தனியாக இருந்தே திட்டம்போட்டுச் செயல்படுவர். ஆண்டவனைத் தவிர மனிதர்கள் ஏமாற்றுக்காரர்கள் என்ற பயத்தால் எச்சரிக்கையாக இருப்பர்.

**தொழில்**

இவர்கள் கமிஷன், ஏஜென்சீஸ், கல், நெருப்பு, உலோகம் சம்பந்தமான தொழில், பிறரை மகிழ்விக்கும் கலைத்

**Dr.ஆர்.ஐ.துரைமுருகா**

தொழில் மூலம் செல்வம் சேர்ப்பர். பெயர் நன்றாக அமையாவிட்டால் மேற்குறிப்பிட்ட தொழில்களெல்லாம் நல்ல பலனைத் தராது. இதனால் பெயரைப் பொருத்தமானதாக மாற்றி அமைத்துக்கொள்ளவேண்டும்.

**நோய்**

இவர்களுக்கு மன அமைதியின்மையால் வரக்கூடிய மனவியாதியும், நீரிழிவு, இரத்தக்கொதிப்பு, தோல்வியாதி, மூட்டுவலி, போன்ற நோய்கள் வர வாய்ப்பிருப்பதால் இளம் வாசகர்கள் முன்கூட்டியே பெயரைப் பொருத்தமான எண்களில அமைத்துக்கொள்ளுவது சிறப்பாகும்.

**பெயர் அமைக்கும் முறை**

இவர்கள் தனது பெயரைக் குரு ஆதிக்கமாகிய 21, 39 போன்ற எண்களிலும், புதன் ஆதிக்கமாகிய 14,23,41,50,59 போன்ற எண்களிலும் அமைத்துக்கொள்ளலாம். தான் செய்யும் வியாபார விலாசத்தையும் மேற்குறிப்பிட்ட எண்களில் பெயராக வைத்துக்கொள்ளுவது சிறப்பாகும்.

**பின்பற்றவேண்டியவை**

யோகமான எண் - 3,5,9
யோகமான திகதிகள் - 3,12,21,30; 5,14,23; 9,18,27
யோகமான மோதிரக்கல் - எமிதிஸ்டு, வைரம், சிர்கான்.
யோகமான நிறம் - ரோசு, ஓரேஞ்சு, கத்தரிப்பூநிறம், சாம்பல், வெளிர்நிறம்
ஆகாத நிறம் - பச்சை
ஆகாத திகதிகள் - 6, 15, 24

(தொடரும்)


# கொம்பியூட்டர் கல்வி

# டவுன்லோடிங், அப்லோடிங் இன்ஸ்டோலிங், அன் இன்ஸ்டோல் பற்றி...

இன்ரநெற் மற்றும் கொம்பியூட்டர் பயன்பாட்டில் நாம் அடிக்கடி கேட்கும் மூன்று சொற்கள் டவுன்லோடிங், அப்லோடிங் மற்றும் இன்ஸ்டோலிங் (Downloading/Uploading/Installing) இவற்றைப்பற்றி இங்கு பார்ப்போம்.

## டவுன்லோடிங்

நெட்வேர்க் இணைப்பு அல்லது இன்ரநெற்றிலிருந்து ஒரு ஃபைலை உங்கள் கொம்பியூட்டருக்கு மாற்றுவது டவுன்லோடிங் ஆகும். நாம் பெரும்பாலும் இதற்குக் கூடுதலான முயற்சிகள் எடுப்பதில்லை. இன்ரநெற் தளங்களில், இந்த ஃபைல் அல்லது பயன்பாடு தேவையா? தேவையெனின் இந்த இடத்தில் கிளிக் செய்க என்றிருக்கும். உடனே அங்கு கிளிக் செய்தால் திரையில் தோன்றும் கட்டத்தில் இந்த ட்ரைவில் இந்த பெயரில் இந்த ஃபைல் டவுன்லோட் செய்யப்படும். செய்திடவா? எனக் கேள்வி கேட்கும். நாம் வேறிடத்தில் அதனை டவுன்லோட் செய்திடவேண்டுமென்றால் அந்த டைரக்டரியைத் தேர்ந்தெடுத்து ஓகே கொடுக்க ஃபைல் டவுன்லோட் ஆகும். எவ்வளவு நேரத்தில் டவுன்லோட் ஆகும் என்ற செய்தியுடன் எத்தனை சதவிகித ஃபைல் பதியப்படுகிறது என்ற தகவலும் தெரியும். இதனை மினிமைஸ் செய்துவிட்டு நாம் வேறு வேலையையும் பார்க்கலாம்.





## அப்லோடிங்

அப்லோடிங் என்பது மேலே கொடுக்கப்பட்டுள்ள செயற்பாட்டினை எதிர்முனையிலிருந்து மேற்கொள்வது. அதாவது உங்கள் கொம்பியூட்டரிலிருந்து நெற்வேர்க் அல்லது இன்ரநெற் தளத்திற்கு உங்கள் ஃபைலை அனுப்புவது. வழக்கமாக இதனை எவ்.டி.பி என்னும் புரோகிராம் மூலம் செய்யலாம். சில இன்ரநெற் தளங்கள் இன்ரநெற் பிரவுசர் மூலமாகவே உங்கள் ஃபைல்களை அப்லோட் செய்திட வழிதரும்.

## இன்ஸ்டோலிங்

பெரும்பாலும் பலர் இதனை டவுன்லோடிங் செய்வதுடன் குழப்பிக்கொள்வார்கள். நாம் ஒரு புரோகிராம் ஃபைலை இன்ஸ்டோல் செய்திடுகையில் அதனை நம் கொம்பியூட்டர் வழியாகப் பயன்படுத்தும் வகையில் கொம்பியூட்டரில் அமைக்கின்றோம் என்பதே பொருள். பொதுவாக இதற்கு ஒரு செட்அப் புரோகிராம் தரப்படும். அந்தப் புரோகிராமினை இயக்கினால் அது தொடர்ந்து ஒவ்வொரு கேள்வியாகக் கேட்கும். அதற்கு முறையான பதில் சொல்லிக்கொண்டே வந்தால் இறுதியில் அந்த புரோகிராம் நம் கொம்பியூட்டரில் பதியப்படும் இதுவே இன்ஸ்டோலிங் ஆகும். இன்ஸ்டோல் செய்தவுடன் பொதுவாக அந்தப் புரோகிராமிற்கான ஐகன் டெஸ்டொப் திரையில் இருக்கும்.




இதனைக் கிளிக் செய்தால் அந்தப் புரோகிராம் இயங்கத் தொடங்கும். அல்லது ஸ்ராட்/புரோகிராம் மெனுவில் சென்றால் இன்ஸ்டோல் செய்யப்பட்ட புரோகிராம் இருக்கும். அதனைக் கிளிக் செய்திட புரோகிராம் இயங்கத் தொடங்கும்.

இதனுடைய இயங்கும் இஎக்ஸ்இ ஃபைல் என்னவென்று பார்த்து டெஸ்ரொப் திரையில் இதன் ஐகனை வைத்துக்கொள்ளவும் செய்யலாம்.

## அன் இன்ஸ்டோலிங்

இன்ஸ்டோலிங் செயல்முறையின் தம்பி போல இது செயற்படும். ஒரு புரோகிராமை இன்ஸ்டோல் செய்யும்போது, பல ஃபைல்கள் நம் கொம்பியூட்டரில் பல இடங்களில் பதிவு செய்யப்படுகின்றன. இதில் பெரும்பாலான ஃபைல்கள் நாம் எடுக்கமுடியாதவை.

மேலும், விண்டோஸ், ரெஜிஸ்ட்ரி என்னும் தொகுப்பு ஃபைலிலும் இன்ஸ்டோல் ஆகும் புரோகிராம் குறித்த குறிப்புக்கள் எழுதி வைக்கப்படும். இந்தப் புரோகிராமை நாம் நம் கொம்பியூட்டரில் இருக்கவேண்டாம் என்று கருதினால் என்ன செய்யலாம்? அனைத்து ஃபைல்களையும் நீக்க வேண்டுமல்லவா?

நமக்கு எந்தெந்த ஃபைல்கள் புரோகிராமிற்காகப் பதியப்பட்டன என்று தெரியாது. எனவே ஒரு பயன்பாட்டு புரோகிராம் எழுதுபவர்கள் இன்ஸ்ரோல் செய்திட செட் அப் புரோகிராம் எழுதுவதுபோல அதனை நீக்கவும். அன் இன்ஸ்டோல் என்னும் புரோகிராமையும் எழுதி அதனைச் சேர்த்தே பதியும் வண்ணம் அளித்திருப்பார்கள்.

இதனை அந்தப் புரோகிராம் இருக்கும் டைரக்டரியில் பார்க்கலாம். அல்லது செற்றிக் பிரிவை ஸ்ராட் பட்டினை அழுத்தியபின் தேர்ந்தெடுத்து அதன்பின் கொன்றோல் பனல் சென்று கிளிக் செய்திட, வரும் பிரிவில் .கிளிக் செய்திட கொம்பியூட்டரில் இன்ஸ்டோல் செய்திருக்கும் அனைத்துப் புரோகிராம்களும் அகர வரிசைப்படி பட்டியல் இடப்பட்டிருக்கும்.

அதில் நீக்கவேண்டிய புரோகிராமினை தேர்ந்தெடுத்து கிளிக் செய்திட வரிசையாக ஃபைல்கள் நீக்கப்படும்.

❑ ❑ ❑

# சினேகிதியே...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி...)

திருமணமும் நல்லபடியாக நடந்து முடிந்தது. மிதிலாவுக்கு நன்றியைத் தெரிவித்துவிட்டு தேனிலவுக்குச் சென்ற தம்பதியரை தனது கண்ணீராலே வழியனுப்பிவிட்டு வந்தவள் தனது கவிதைப் புத்தகம் கண்ணில்ப்படவே அதை எடுத்துப் பிரித்தாள். அதில் மீதியாக ஒரே ஒரு பக்கம் இருந்தது அவள் வாழ்க்கையின் காதல் அத்தியாயத்தைப் போலவே.

மனதில் இருந்து எழுந்த ஒரு வேதனைச் சிரிப்புடன் அதில் எழுதினாள்.

என் வாழ்க்கையில்
சகலத்தையுமே
உனக்குத் தந்தேன்
இறுதியாக
என் உயிரையே கேட்கிறாய்
மறுக்க முடியவில்லை
இதோ வாங்கிக்கொள்
எல்லாமே ஏன் தெரியுமா?
என ப்ரிய சினேகிதியே
உனக்காக...

எழுதிவிட்டு பேனாவை மூடிய மிதிலா யன்னலினூடாக வானத்தைப் பார்த்தாள். அது தெளிவாக இருந்தது அவள் மனதைப் போல.

# அடிப்படை வசதிகளுக்காக...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி...)

புங்குடுதீவில் விவசாயம் செய்வதற்கு ஏற்ற சூழ்நிலை காணப்படுகின்ற போதும் நீர் உவராக மாறிவருவதால் விவசாயத்தை மேற்கொள்ள முடியவில்லை. முன்பெல்லாம் புகையிலைச் செய்கைக்குப் பெயர்போன இடம் புங்குடுதீவு இப்போது வானம் பார்த்த பூமியாகக் காட்சிதருகிறது.

சீரழிந்து காணப்படுகின்ற குளங்களை மீளவும் புனரமைப்பதன் மூலம் மக்கள் விவசாயத் தொழிலை மேற்கொள்ளமுடியும். இதற்கு தற்போது அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் அமைப்புகள் உதவவேண்டும் என்பது மக்களின் கோரிக்கையாகும்.

இவ்வாறு பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள புங்குடுதீவு மக்களுக்கு உதவ விரைந்து நடவடிக்கை எடுப்பதன் மூலம் அம்மக்களின் தேவைகளை, அபிலாசைகளைப் பூர்த்திசெய்ய முடியும் என்பதை உரிய தரப்பினர் உணர்ந்து செயற்படவேண்டியது காலத்தின் கட்டாய கடமையாகும்.-

## ஆண் - பெண் சில இயற்கை வித்தியாசங்கள்

ஆண் - பெண்களுக்கிடையில் மறைந்து கிடக்கும் இயற்கை வித்தியாசங்களைத் தெரிவிக்கிறார்கள் சில அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள். அவற்றிலிருந்து சில...

- ஆண்களைவிடப் பெண்களுக்கு குளிரைத் தாங்கும் சக்தி அதிகம். அவர்களின் தோலை மென்மையாக வைத்துக்கொள்ள தோலுக்கடியில் படிந்திருக்கும் கொழும்புப் படலம் குளிர் ஊடுருவாமல் தடுப்பதே இதற்குக் காரணம்.
- பேசும்போது பெண்களைவிட ஆண்கள் ஐந்து மடங்கு தடுமாறுகிறார்கள்.
- விபத்தில் இறக்கும் ஆண்களின் எண்ணிக்கை பெண்களை விட 3 மடங்கு அதிகம்.
- பெண்களின் எடையைவிட ஆண்களின் எடை சராசரி 10கிலோ அதிகம்.
- சாதாரணமாக பெண்களின் உதிரத்தைவிட ஆண்களின் உதிரம் விரைவாக உறையும் தனமை கொண்டது.

# ஒலிம்பிக்...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி...)

1912ஆம் ஆண்டு சுவீடனில் நடைபெற்ற ஐந்தாவது ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றிய ரஷ்யா புரட்சிக்குப் பின்பு சோவியத் யூனியன் (SOVIET UNION) என்ற பெயரோடு இவ் ஒலிம்பிக் போட்டியில் களமிறங்கியது. ரஷ்யாவோடு பனிப்போரில் ஈடுபட்டிருந்த நாடுகளும் இப்போட்டிகளில் கலந்துகொண்டிருந்ததால் அந்நாட்டு வீரர்கள் தனித் தனியாகவே தங்கவைக்கப்பட்டனர்.




**1952ஆம் ஆண்டு ஹெல்சிங்கியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் சத்தியப்பிரமாணம் செய்து வைக்கும் ஜிம்னாஸ்டிக் வீரர் HEIKKI SAVOLAINEN.**

சோவியத் யூனியனின் ஜிம்னாஸ்டிக் விளையாட்டு வீராங்கனைகள் தமது திறமைகளை வெளிப்படுத்தி பதக்கம் வென்றனர். அத்துடன் ஜிம்னாஸ்டிக் போட்டிகளில் இதுவரை ஒலிம்பிக் போட்டியில் சாதனைபடைத்து வருபவர்களும் இவர்களே.

ரஷ்யநாட்டு ஜிம்னாஸ்டிக் விளையாட்டு வீராங்கனை MARRA GOROKHOSKAYA இரண்டு தங்கம் மற்றும் 5 வெள்ளிப்பதக்கங்களை வென்றதன் மூலம் ஒரு பிரிவுப் போட்டிகளில் அதிகம் பதக்கம் வென்ற முதல் வீராங்கனை என்ற சாதனையை நிலைநாட்டினார்.

"CZECH EXPRESS" என்று அழைக்கப்பட்ட செக்கோஸ்லாவாக்கியாவின் EMIL XATOXEK 5000m, 10000m மற்றும் மரதன் ஆகிய மூன்று போட்டிகளிலும் வெற்றியீட்டிய ஒரேநபர் என்ற சாதனையைப் படைத்தார். ஒலிம்பிக் போட்டிகளில் இச்சாதனையினை இதுவரை எவரும் படைக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

1948ஆம் ஆண்டு நடைபெற்ற 14ஆவது ஒலிம்பிக் போட்டியில் சாதனை நிலைநாட்டிய BLANKERS - KOEN இவ்வாண்டு ஒலிம்பிக் போட்டியிலும் பங்குபற்றினார். இவர் பங்குபற்றிய 80mதடைதாண்டல் போட்டியில் முதலாவதாக வந்துகொண்டிருக்கும்போது எல்லைக்கோட்டை அண்மிக்கும் வேளை கால்தடக்கி விழுந்துவிட்டார். பின்னர் கண்ணீரோடு களத்தை விட்டகன்றார். இவ் ஒலிம்பிக் போட்டியே அவரது இறுதி ஒலிம்பிக் போட்டியாக அமைந்தது.



**ஹெல்சிங்கியில் 1952ஆம் ஆண்டு நடைபெற்ற பதினைந்தாவது ஒலிம்பிக் போட்டியின் ஆரம்ப நிகழ்வின் போது ஒலிம்பிக் ஜோதியினை ஏற்றும் PAAVO NURMI.**

(தொடரும்....)

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல -17

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



'சுப்ரீம் ஸ்ரார்' என அழைக்கப்படும் கம்பீர நாயகனான இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுத எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும். நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா? போட்டி இல:~ 17**
**'சங்குநாதம்'**
**இல:~ 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

**குறிப்பு:-**
சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல் முறை மூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்படும். பரிசு பெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப் பணத் jற்d 'வலம்புா' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல: – 17**

படத்தில் உள்ளவரின் பெயர் :-......................
அனுப்புபவரின் முழுப்பெயர் :-......................
அனுப்புபவரின் முகவரி :-......................
......................
......................

**இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 15**
**சரியான விடை.**




## சோனியா காந்தி


**இவரைத் தெரியுமா, பரிசுப் போட்டி இல. 15 இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம**

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | அ.றஜீவன்<br>இனுவில் கிழக்கு,<br>இனுவில். |
| இரணடாம் பரிசு | :- | தெ.சந்திரகாந்தன்<br>பத்தனை,<br>தொல்புரம். |
| மூன்றாம் பரிசு | :- | ம.றஞ்சன்<br>இல - 141, வசந்த நகர்,<br>திருமுறிகண்டி. |


**சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்**

அ.திருவரங்கன், பண்டத்தரிப்பு. சி.துஷித்தா, யாழ்ப்பாணம். சு.பிரபாகரன், முல்லைத்தீவு. ந.நவஜீவன் மூளாய். ம.பற்பராசா, கொக்குவில். S.சரோஜா, நல்லூர். சோபிகா, வட்டுக்கோட்டை. அ.பரராசசிங்கம், மாதகல். இ.இராஜேஸ்வரன், பண்டத்தரிப்பு. க.விஸ்னுப்பிரியா, வட்டுக்கோட்டை. சு.சிவந்தா, சாவகச்சேரி. K.புஸ்பராணி, தம்பசிட்டி. கு.தர்சினி, ஏழாலை. லோ.சிவராஜினி, தொல்புரம். ஏ.சர்மிளா, அரியாலை. R.ராஜசந்திரன், நாவாந்துறை. க.சந்திரா, இனுவில். ப,.கீதா, உடுவில் மகளிர் கல்லூரி. ந.றஞ்சிதா, யாழ்ப்பாணம். P.அன்ரன் ஜெயக்குமார், யாழ்ப்பாணம். கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. க.வத்ஷலா, சித்தன்கேணி. சா.கௌரிசா, கரவெட்டி. ந.வேற்கரன், மீசாலை. மாருதி, ஆவரங்கால். இ.விஜயசிறி, வேலணை. ந.கண்டீபன், கரணவாய். ஜெ.சஜீவன், சாவகச்சேரி. க.குமாரசாமி, புலோலி. யோ.ஜெகதீஸ்வரி. சாவகச்சேரி. பு.டிலக்ஷன், சுன்னாகம். க.கிரிஜா, கட்டுடை. ச.திலீப்காந்த், சங்கானை.





க.தயாளினி
வயது:- 17
மூளாய் தெற்கு,
சுழிபுரம்.
T.V, பத்திரிகை.



ந.ஜெகன்
வயது:- 17
C/o மு.கணேசலிங்கம்,
4ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.
பத்திரிகை.



ம.தேவரூபன்
வயது:- 23
புகையிரத வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.
கவிதை, கதைப்
புத்தகம், பேனாநட்பு.




M.மதன்
வயது:- 19
No - 171/7
W.A.சில்வா மாவத்த
வெள்ளவத்தை,
கொழும்பு - 06
கவிதை, பத்திரிகை.



ப.வரதராஜன்
1ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
T.V, பத்திரிகை,
வானொலி.

# குறுக்கெழுத்துப் போட்டி இல -17




*அனுப்ப வேண்டிய முகவரி-*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 17**
**'சங்குநாதம்'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

முழுப் பெயர் :- ......................................
முகவரி :- ......................................
......................................
......................................

இங்கே வெட்டுக ......................................

## இடமிருந்து வலம்

(1)நாகரிகம் ஒன்று வளர்ந்த இடம். (4) பிரதி - இதனை இப்படியும் கூறலாம். (6) பன்னிரு இராசிகளிலொன்று. (7) எப்பொழுதும் ஏதாவதொன்றைச் செய்துகொண்டிருக்கும் மிருகம். (9) புவி - இப்படியும் அழைப்பர். (10) 'இது போனாலும் பிணை போகாதே' என்றொரு பழமொழி. (11) கணவனுடன் கானக வாழ்க்கையை மேற்கொண்ட அரசகுல மாது.

## மேலிருந்து கீழ்

(1) ஒரு மொழி. (2) நயவஞ்சகம் - இப்படியுமழைப்பர். (3) பழமை - இதனைக்குறிக்கும். (5) இரும்பு - இப்படியும் அழைப்பர். (8) பெண்ணை இப்படியும் கூறுவர். (9) இதன் மூலம் பழைய வரலாறுகளைக் கூறுவர். (12) இவற்றை ஏற்று நடக்காதோர் உயர் அதிகாரிகளால் தண்டிக்கப்படுவதுமுண்டு (கீ.மே).

## குறுக்கெழுத்துப் போட்டி இல.15இன் விடைகள்

### இடமிருந்து வலம்

(1)பச்சோந்தி (5)காயம் (6)பணிவு (7)நீதி (8)தேர் (9)மழை (10)முல்லை (11)எதிர்.

### மேலிருந்து கீழ்

(1)பரிகாசம் (2)சோளம் (3)திரௌபதி (4)மலிவு (7)நீர் (8)தேயிலை (9)மந்தி.

### *பரிசு பெற்றோர் பெயர் விபரம்*

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | த.பத்மினி<br>கரணவாய் கிழக்கு,<br>கரவெட்டி. |
| இரண்டாம் பரிசு | :- | சா.சங்கர்<br>உதய நகர்,<br>கிளிநொச்சி. |
| மூனறாம் பரிசு | : | திருமதி P.செல்வராணி<br>மாவடி,<br>வட்டுக்கோட்டை. |

**போட்டியில்கலந்துகொண்டுபாராட்டுப்பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

கே.அரசேஸ்வரன், நல்லூர். ந.அபிராமி, மூளாய். ஸ்ரீ.சோபிகா, வட்டுக்கோட்டை. சி.வன்னியசிங்கம், புலோலி. V.C.சோதிநாதன், சுழிபுரம். பு.மதுஷா, சுன்னாகம். ம.எழிலரசி, முல்லைத்தீவு. ஞா.இராஜதேவி, தெல்லிப்பளை. சி.சியாமளா, சுன்னாகம். கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. வ.மன்னர் அன்ரனி, குருநகர். சி.விவேகானந்தன், பருத்தித்துறை. வி.தர்மராஜா, தும்பளை. பா.தர்ஜினி, சண்டிலிப்பாய். தி.மயூரகிரி, நீர்வேலி. இ.சுவர்னா. மூளாய். செ.மேரிமாகிறெட், பருத்தித்துறை. வி.செல்வநாயகம், புத்தூர். க.சஷீலா, வட்டுக்கோட்டை. ந.வேற்கரன், மீசாலை. க.சொரூபினி, மானிப்பாய். இ.குலசிங்கம், நயினாதீவு

## தோகை விரிக்கும் வண்ணமயில்



வான்மேகம் கண்டு வண்ணமயில் தோகை விரித்தாடும் காட்சிதான் இது. இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலங்களில் பருவமழை தொடங்கியுள்ளதால் மதுர நகரருகேயுள்ள வனப் பகுதியில் தோகை விரித்தாடுகிறது மயில்.

## படகுப் போட்டி



இது கடலுக்குள் நடக்கும் கின்னஸ் சாதனை முயற்சியல்ல. சீனாவின் குவாங்ஜூவில் நடைபெற்ற சர்வதேச டிராகன் படகுப் போட்டியில் பங்கேற்ற படகுகள் அணிவகுத்து நிற்கும் காட்சி.

## வீரர்களின் சாகசம்



சீனாவின் மெக்சிகோ நகரில் நடைபெற்ற 7வது கிராண்ட் ப்ரிக்ஸ் சூப்பர் பைனல் நீச்சல் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற சீன வீரர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்திய காட்சி.


## ஸ்பைடர்மேன் பொம்மை



இது குழந்தைகளைத் தூக்கிச் செல்லும் ராட்சத விலங்கு அல்ல.

யப்பானில் ஸ்பைடர் மேன் 2 என்ற திரைப்படம் திரையிடப்படவிருப்பதை முன்னிட்டு அந்த ஸ்பைடர் மேனின் காற்றுநிரப்பப்பட்ட பொம்மையொன்றை காட்சிக்கு வைத்திருந்தார்கள். அதனையே இந்தச் சிறுவர்கள் தொட்டுப் பார்த்து மகிழ்கிறார்கள்.

## நெருப்பு விழுங்கி



வெயிலின் கொடுமையோ இவர் வாயிலிருந்து நெருப்பாக வெளிவருகிறது!

ஜேர்மனியர் சூரியன் பூமத்திய ரேகையைக் கடந்து வடமண்டலத்தை அடைந்து அதன் உச்சக்கட்டத்தில் இருக்கும் மிக நீண்ட நாளை ஒரு விழாவாகக் கொண்டாடுகிறார்கள்.

அவ்விழாவின்போது நெருப்பை விழுங்கி வித்தை காட்டுகிறார் ஒரு கலைஞன்.

இப் பத்திரிகை வலம்புரி அன் கோ ஸ்தாபனத்தாரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.07.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது